# 9. வர்த்தகம் சென்மதி நிலுவை மற்றும் சுற்றுலா

## 9.1 பொது நோக்கு

அதிகரித்த ஏற்றுமதிகள், பணிகளுக்கான பெறுகைகள், தனியார் மாற்றல்கள் மற்றும் அதிகரித்த மூலதன உட்பாய்ச்சல்கள் என்பனவற்றை முதன்மையாகப் பிரதிபலிக்கும் வகையில் 1997 இல் சென்மதி நிலுவை கணிசமான மேம்பாட்டினைக் காட்டியது. முன்னைய ஆண்டின் தாழ்ந்த மட்டங்களிலிருந்து பொருளாதார நடவடிக்கையின் மீட்சியானது இறக்குமதிகளை விட விரைவான வேகத்தில் ஏற்றுமதிகள் அதிகரித்து வர்த்தகப் பற்றாக்குறையினை கணிசமானளவு குறைவடையச் செய்தன. பணிகள் மற்றும் சுற்றுலா என்பனவற்றின் வளர்ச்சியின் முதன்மைக் காரணத்தினால் பணிகள் கணக்கு பாரிய மிகையொன்றினைப் பதிவு செய்தது. அதிகரித்த வட்டி வருவாய்கள் முதலீட்டு வருவாய் மீதான தேறிய வெளிப்பாய்ச்சலைக் குறைவடையச் செய்தன. முதலீட்டாளர் நம்பிக்கை மேம்பாடடைந்தமைத் பிரதிபலிக்கும் வகையில் தனியார்மயமாக்கல் பெறுகைகள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு ஆகிய நியதிகளில் அதி உயர் முதலீட்டு உட்பாய்ச்சல்கள் காணப்பட்டன. இதே வேளையில் மூலதனக் கட்டுப்பாடுகள் பேணப்பட்டமை, குறுகியகால வெளிநாட்டுக் கடன்கள் குறைவாகப் பெறப்பட்டமை, முகாமைப்படுத்தப்பட்ட செலாவணி வீதத்தில் நெகிழ்ச்சி உயர்வான மீள் கொள்வனவு வீதத்தின் மூலமான குறுங்கால நாணயக் கொள்கைச் சீர்திருத்தங்கள் நிதியியல் சந்தை இலங்கையின் நிதியியல் சந்தைகளின் மீது கிழக்காசிய நெருக்கடியின் தொற்றும் தாக்கத்தினை தவிர்த்துக் கொள்ள உதவின.

வெளிநாட்டுக் கொள்கைப் பக்கத்தில் மூலதனக் கணக்கின் தளர்த்தல் மற்றும் வர்த்தக முறையினை ஒழுங்குபடுத்தல் என்பனவற்றை மேலதிக அவதானத்துடன் இலங்கை தொடர்ந்து மேற்கொண்டது. சனவரி மாதத்தில் வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டு திறந்துவிடலின் மட்டுப்படுத்தலுக்கு உட்பட்டு அனைத்து நேரடி மற்றும் மறைமுக ஏற்றுமதியாளர்களுக்கும் தமது உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் ஊடாக வெளிநாட்டு நாணயக் கடன்களை வழங்குவதற்கு வர்த்தக வங்கிகள் அனுமதிக்கப்பட்டன. இதுவரை காலமும் இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளுக்காக வேண்டி முக்கிய மாக முதலீட்டுச் சபைக் கைத்தொழில் ஏற்றுமதி யாளர்களுக்கு மட்டுமே வெளிநாட்டு நாணயக் கடன் வசதிகள் கிடைக்கத்தக்கதாக இருந்தன. முரண்பாடுகளை நீக்குவதற்காகவும் 1998 இல் பொருட்கள் பணிகள் வரிமுறைக்கு வசதி செய்து கொடுப்பதற்காகவும் வேண்டி வரி மற்றும் தீர்வை முறைகளில் மேலதிக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. செலாவணி வீதத்தில் தவறான அசைவுகளை ஆகக் குறைந்ததாக்குவதை கருத்திற் கொண்டு நாணயம் படிப்படியாகத் தேய்வடைவதை அனுமதிக்கும் வகையில் மத்திய வங்கியின் கொள்வனவு விற்பனை வீதங்களில் 2சதவீத வீச்சில் முகாமைப்படுத்தப்பட்ட மாறுபடும் செலாவணி வீதமுறை பேணப்பட்டது. 1997 இன் இரண்டாம் அரைப்பகுதியில் கிழக்காசிய நாணயங்கள் கடுமையாகத் தேய்வடைந்ததைப் பிரதிபலிக்கும் வகையில் 1997 இல் ஆண்டுச் சராசரி உண்மைப் பயன்தரு செலாவணி வீதம் பெறுமான அதிகரிப்பொன்றைக் காட்டியது. குறிப்பாக இன்னமும் கண்டுகொள்ளப்பட வேண்டியுள்ள கிழக்காசிய நாணயங்களின் பாரிய பெறுமானத் தேய்வின் பண வீக்கத்தாக்கத்தின் சூழலில் இலங்கையின் உற்பத்திப் பொருட்களின் வெளிநாட்டுப் போட்டித் தன்மை தொடர்பான தெளிவான விளக்கங்களைத் தருவதற்கு இந்த குறிகாட்டி மட்டுமே போதுமானதல்ல.

பொருளாதாரம் மீட்சியடைந்ததைத் தொடர்ந்து கடினமான நிலைமையின் கீழ் கடந்த ஆண்டில் வெளிநாட்டுத்துறையினால் காண்பிக்கப்பட்ட தாக்குப் பிடிக்கும் தன்மையானது 1997 இல் வலுப்படுத்தப் பட்டது. ஏற்றுமதிகள் 13 சதவீதத் தினால் அதிகரித்த வேளையில் இறக்குமதிகள் 8 சதவீதத்தினால் அதிகரித்தன. இதன் விளைவாக தொடர்ச்சியான மூன்றாவது ஆண்டிலும் வர்த்தகப் பற்றாக்குறை 1996 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 10 சதவீதத்திலிருந்து 1997 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 8 சதவீதத்திற்குக் குறைவடைந்தது.

1. இப்பிரிவின் விளக்கம் ஐ.அ.டொலர்களில் தரப்பட்டுள்ளதுடன் ப.நா.நிதியத்தின் சென்மதி நிலுவைக் கையேட்டின் (1993)ஐந்தாவது பதிப்பின் வடிவமைப்பினையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. புதிய வடிவமைப்பின் கீழான விடயங்களை ஆய்வதற்கு தயவு செய்து சிறப்புக் குறிப்பினைப் பார்க்கவும்.

## அட்டவணை 9.1

## சென்மதி நிலுவை பகுப்பாய்வு வெளிப்படுத்துகை

| விடயம் | ஐ.அ. டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1993 | 1994 | 1995 | 1996 | 1997(அ) | 1993 | 1994 | 1995 | 1996 | 1997(அ) |
| வர்த்தக நிலுவை | -1147.9 | -1558.7 | -1504.5 | -1343.8 | -1212.5 | -55374.5 | -77022.2 | -77109.1 | -74276.1 | -71091.4 |
| ஏற்றுமதிகள் | 2863.7 | 3208.6 | 3806.6 | 4095.1 | 4638.9 | 138175.6 | 158553.8 | 195091.9 | 226801.0 | 274193.4 |
| இறக்குமதிகள் | 4011.3 | 4767.3 | 5311.1 | 5438.9 | 5851.5 | 193550.0 | 235576.0 | 272201.0 | 301077.1 | 345284.7 |
| பணிகள்: தேறிய | 163.6 | 179.8 | 152.1 | 105.1 | 159.1 | 7846.5 | 8883.6 | 7795.5 | 5804.9 | 9385.6 |
| மீளப் பெறுகைகள் | 627.9 | 745.4 | 820.7 | 765.5 | 875.3 | 30288.9 | 36793.4 | 42045.1 | 42357.9 | 51691.6 |
| கொடுப்பனவுகள் | 464.3 | 565.6 | 668.5 | 660.4 | 716.2 | 22442.4 | 27909.8 | 34249.5 | 36553.1 | 42305.9 |
| வருமானம் தேறிய | -124.2 | -168.3 | -137.3 | -203.7 | -165.5 | -6025.3 | -8363.8 | -7032.1 | -11232.1 | -9760.2 |
| மீளப் பெறுகைகள் | 119.0 | 152.3 | 223.3 | 175.1 | 218.7 | 5760.9 | 7569.4 | 11441.7 | 9694.8 | 12939.0 |
| கொடுப்பனவுகள் | 243.2 | 320.6 | 360.6 | 378.8 | 384.2 | 11786.2 | 15933.2 | 18473.8 | 20926.9 | 22699.2 |
| பொருட்கள், பணிகள் வருமானம்(தேறிய) | -1108.3 | -1547.2 | -1489.6 | -1442.4 | -1219.0 | -53553.3 | -76502.4 | -76345.6 | -79703.3 | -71,465.9 |
| தனியார் மாற்றல்கள் (தேறிய) | 556.5 | 622.1 | 675.2 | 710.0 | 787.4 | 26889.3 | 30765.8 | 34592.9 | 39230.0 | 46493.7 |
| மீளப் பெறுகைகள் (இ) | 626.9 | 707.1 | 790.2 | 832.2 | 922.1 | 30285.6 | 34991.6 | 40482.3 | 46002.7 | 54445.0 |
| கொடுப்பனவுகள் | 70.4 | 85.1 | 115.0 | 122.2 | 134.7 | 3396.3 | 4225.8 | 5889.4 | 6772.7 | 7951.3 |
| அலுவல்சார் மாற்றல்கள்(தேறிய) | 56.2 | 58.5 | 60.8 | 49.1 | 44.4 | 2712.2 | 2889.8 | 3113.6 | 2799.8 | 2655.0 |
| நடைமுறைக் கணக்கு | -495.8 | -866.6 | -753.6 | -683.3 | -387.2 | -23951.8 | -42846.8 | -38639.0 | -37764.5 | -22347.2 |
| மூலதன நிதியியல் கணக்குகள் | 1108.3 | 1045.2 | 838.8 | 535.2 | 569.8 | 53374.9 | 52036.0 | 42719.1 | 29946.4 | 36821.5 |
| மூலதனக் கணக்கு | 108.6 | 113.1 | 117.3 | 95.9 | 87.0 | 5237.7 | 5589.5 | 6009.2 | 5285.9 | 5140.2 |
| மூலதன மாற்றல்கள் (தேறிய) | 108.6 | 113.1 | 117.3 | 95.9 | 87.0 | 5237.7 | 5589.5 | 6009.2 | 5285.9 | 5140.2 |
| பெறுகைகள் | 110.8 | 115.7 | 120.8 | 99.7 | 91.2 | 5342.8 | 5720.2 | 6191.4 | 5495.3 | 5386.1 |
| கொடுப்பனவுகள் | 2.2 | 2.6 | 3.6 | 3.8 | 4.2 | 105.0 | 130.7 | 182.1 | 209.4 | 245.9 |
| நிதியியல் கணக்குகள் | 999.7 | 932.1 | 721.5 | 439.3 | 482.7 | 48137.2 | 46446.5 | 36709.8 | 24660.5 | 31681.3 |
| நீண்டகாலம் | 639.9 | 714.1 | 581.0 | 341.1 | 632.5 | 30684.1 | 35647.9 | 28997.4 | 18795.3 | 37875.3 |
| நேரடி முதலீடுகள் | 187.2 | 158.2 | 53.1 | 119.9 | 429.9 | 9107.4 | 7815.2 | 2930.8 | 6605.7 | 25504.5 |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் | 187.2 | 158.2 | 15.6 | 86.5 | 128.7 | 9107.4 | 7815.2 | 1010.6 | 4756.1 | 7586.7 |
| தனியார் மயமாக்கல் பெறுகைள் | 0.0 | 0.0 | 37.5 | 33.5 | 301.1 | 0.0 | 0.0 | 1920.2 | 1849.6 | 17917.8 |
| தனியார் நீண்டகால (தேறிய) | 187.9 | 309.8 | 74.9 | 3.2 | 60.9 | 8997.8 | 15628.4 | 2856.3 | 202.2 | 4044.0 |
| உட்பாய்ச்சல் (ஈ) | 303.2 | 402.6 | 221.9 | 180.4 | 175.8 | 14585.6 | 20202.8 | 10305.0 | 10000.4 | 10601.7 |
| வெளிப்பாய்ச்சல் | 115.3 | 92.8 | 147.0 | 177.3 | 114.8 | 5587.8 | 4574.5 | 7448.7 | 9798.2 | 6557.6 |
| அரச நீண்டகால (தேறிய) | 264.8 | 246.1 | 453.0 | 218.0 | 141.7 | 12578.9 | 12204.4 | 23210.3 | 11987.4 | 8326.8 |
| உட்பாய்ச்சல் | 465.7 | 445.0 | 669.4 | 457.1 | 420.3 | 22316.5 | 22025.9 | 34296.4 | 25210.3 | 24761.3 |
| வெளிப்பாய்ச்சல் | 200.9 | 198.9 | 216.4 | 239.1 | 278.6 | 9737.6 | 9821.5 | 11086.2 | 13222.9 | 16434.5 |
| குறுங்கால | 359.7 | 218.0 | 140.5 | 98.3 | -149.8 | 17453.1 | 10798.6 | 7712.4 | 5865.2 | -6194.1 |
| பட்டியலிடப்பட்ட முதலீடுகள் | 67.0 | 28.1 | -2.3 | 6.6 | 13.1 | 3271.5 | 1334.3 | -89.6 | 353.3 | 748.7 |
| தனியார் குறுங்கால (தேறிய) | 146.7 | 260.0 | 27.1 | 25.0 | 37.0 | 7110.3 | 12930.2 | 1429.9 | 1355.2 | 4339.5 |
| வர்த்தக வங்கிச் சொத்துக்கள்(தேறிய) | 54.3 | -138.1 | 79.4 | 4.3 | -289.5 | 904.5 | -7093.1 | 1903.5 | -1103.2 | -20048.1 |
| வர்த்தக வங்கிப் பொறுப்புக்கள்(தேறிய) | 91.7 | 68.0 | 36.3 | 62.3 | 89.7 | 6166.8 | 3627.2 | 4468.6 | 5259.9 | 8765.9 |
| அரச குறுங்கால (தேறிய) | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| சிஎஉ ஒதுக்கீடுகள் | | | | | | | | | | |
| பெறுமதிச் சீராக்கம் | | | | | | -1,419.6 | -1,379.8 | 6,394.4 | 4,212.8 | -561.7 |
| பிழைகளும் தவறுகளும் | 48.2 | 61.1 | -33.7 | 80.2 | -19.7 | 3,216.7 | 5,890.7 | -2,665.3 | 3,613.9 | 1,932.1 |
| மொத்த நிலுவை (உ) | 660.9 | 239.7 | 51.5 | -67.8 | 162.9 | 31220.2 | 13700.1 | 7809.1 | 8.6 | 15844.7 |
| நாணய அசைவுகள் (உ) | -660.9 | -239.7 | -51.5 | 67.8 | -162.9 | -31220.2 | -13700.1 | -7809.1 | -8.6 | -15844.7 |
| செலாவணி விதங்கள் ரூபா/ஐஅடொ | | | | | | 48.25 | 49.42 | 51.25 | 55.27 | 58.99 |
| மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான விகிதம் சத வீதத்தில் | | | | | | | | | | |
| வர்த்தகக் கணக்கு | | | | | | -11.1 | -13.3 | -11.5 | -9.7 | -8.0 |
| நடைமுறைக் கணக்கு | | | | | | -4.8 | -7.4 | -5.8 | -4.9 | -2.5 |
| கொடைகளற்ற நடைமுறைக் கணக்கு | | | | | | -5.4 | -7.9 | -6.3 | -5.3 | -2.8 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) இவ்விபரம் பன்னாட்டு நாணய நிதியத்தின் சென்மதி நிலுவைக் கையேட்டின் 5ஆம் பதிப்புடன் சாத்தியமான அளவுக்கு இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) தற்காலிகமானவை.

(இ) 1990இல் வளைகுடா யுத்தத்தின் காரணமாக குவைத்தில் வேலைவாய்ப்பை இழந்த ஏறக்குறைய 26,000 இலங்கையருக்கு ஆளொருவருக்கு ஐ.அ.டொலர் 2500 ஆக 1997இல் இழப்பீடாக வழங்கப்பட்ட ஐஅடொலர் 64 மில்லியனை உள்ளடக்கும்

(ஈ) முன்னைய ஆண்டுகளில் முற்பணம் செலுத்தப்பட்டிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஐந்து வானூர்திகளுக்கான மூலதன உட்பாய்ச்சலுக்கு. 1993, 1994, 1995ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட சீராக்கங்களையும் உள்ளடக்குகின்றது.

(உ) நாணயத்துறையிலான எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் ஆண்டிறுதிச் செலாவணி வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன.

**சிறப்புக் குறிப்பு 8**

# பன்னாட்டு நாணய நிதியசென்மதி நிலுவைக் கையேட்டின் ஐந்தாவது (1993) பதிப்பின்படி சென்மதி நிலுவைப் புள்ளி விபரத்தின் அறிமுகமும் ஐ.அ.டொலர்களில் வெளிநாட்டுத்துறைத் தரவும்

இலங்கையின் சென்மதி நிலுவைப் புள்ளி விபரம் இன்றுவரை பன்னாட்டு நாணய நிதியத்தின் சென்மதி நிலுவைக் கையேட்டின் (செநிகை 4) 4ஆம் (1977) பதிப்பின் அமைப்பு முறைக்கிணங்க வெளியிடப்பட்டு வந்தது. அத்துடன் இலங்கையின் சென்மதி நிலுவைத் தரவும் சகல ஏனைய வெளிநாட்டுத்துறைத் தரவு இலங்கை ரூபாவிலும், சிறப்பு எடுப்பனவு உரிமையிலும் (சிஎஉ) மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டு வந்தது. இது முதற்கொண்டு மத்திய வங்கி (1) சென்மதி நிலுவைக் கையேட்டின் (செநிகை 5) ஐந்தாவது (1993) பதிப்பின் அமைப்பு முறையின் படி சென்மதி நிலுவைப் புள்ளி விபரம் வெளியிடப்படும். (11) வெளிநாட்டுத்துறைத் தரவு சிஎஉ விற்குப் பதிலாக ஐ.அ.டொலர்களில் வெளியிடப்படும். முன் மொழிய ப்பட்ட புதிய வடிவமைப்பின் அறிமுகத்திலான முக்கிய வேறுபாடுகளும் அதே போல் இம் மாற்றத்திற்கான அடிப்படைக் கோட்பாடும் இக் கட்டுரையின் எஞ்சிய பகுதியில் ஆராயப்படும்.

## 1. செநிகை 5 இன்படி சென்மதி நிலுவை புள்ளி விபரங்களின் அறிமுகம்

1993 இலான பன்நாட்டு நாணய நிதியத்தின் திருத்தப்பட்ட (ஐந்தாம் பதிப்பு) சென்மதி நிலுவைக் கையேட்டின் வெளியீட்டுடன் சகல உறுப்பு நாடுகளும் சென்மதி நிலுவை புள்ளி விபரங்களை கையேட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட அமைப்பு முறையுடன் ஒத்திருக்கும் வகையில் தமது சென்மதி நிலுவைப் புள்ளி விபரங்களை வெளியிட வேண்டு மென எதிர்பார்க்கப்படுகிறது. செநிகை 4 இற்கும் செநிகை 5இற்கும் இடையே யான மாற்றங்களின் முனைப்பான பண்புகள் 1996 இன் மத்திய வங்கி ஆண்டறிக்கை சிறப்புக் குறிப்பு 9 இல் வெளியிடப்பட்டுள்ளது. ஆண்டறி க்கையின் பொருள் மற்றும் புள்ளி விபரப் பின்னிணைப்பு அட்டவணைகளில் முக்கிய மாற்றங்கள் தோன்றும் விதம் பின்வருமாறு

1. முன்னைய பணிகள் கணக்கு இரு தனித் தனித் துறைகளாகப் பிரசுரிக்கப்படும். அவையாவன பணிகளிலுள்ள வர்த்தக த்தை அடக்கியுள்ள பணிகள்துறை, ஊழியர் களின் நட்டஈட்டை அடக்கி புள்ளி விபரத் தையும் மற்றும் முதலீட்டு வருமானத்தை (இலாபங்கள், பங்கு இலாபங்கள், வட்டி) அடக்கியுள்ள வருமானத் துறை என்பன வாகும். பழைய அமைப்பு முறையில் காட்டப்பட்டுள்ள கப்பற் கட்டணம் மற்றும் வணிக வர்த்தகக் காப்புறுதி விடயம் பிரிக்கப்பட்டு, கப்பற் கட்டணம் புதிய அமைப்பு முறையில் தனியாகக் காட்டப்படும். பழைய முறையில் "ஏனைய பணிகளின் கீழ்" வணிக வர்த்தகமல்லாத காப்புறுதியுடன், சேர்த்துக் காட்டப்பட்ட வணிக வர்த்தகக் காப்புறுதி புதிய அமைப்பு முறையில் காப்புறுதிப் பணிகள் ஆக காட்டப்படும்.

2. மாற்றல்கள், நடைமுறை மாற்றல்கள், மூலதன மாற்றல்கள் எனப பிரிக்கப்படும் நடைமுறை மாற்றல்கள் புலம்பெயர்ந் தோரின் நடைமுறை மாற்றல்களையும் செயற்றிட்டமல்லாக் கொடைகளையும் உள்ளடக்கி நடைமுறைக் கணக்கின் ஓர் பகுதியாக விளங்குகையில் மூலதன மாற்றல்கள் செயற்றிட்டக் கொடைக ளையும் புலம் பெயர்ந்தோரின் மூலதன மாற்றல் களையும் உள்ளடக்கி மூலதனக் கணக்கில் இருக்கும்.

3. தற்போதைய நாணயமல்லாத்துறை மூலதன மற்றும் நிதியியல் கணக்காக மீள் வரை விலக்கணப்படுத்தப்படும்.

4. இதுவரை, நாணயத்துறையில் உள்ளடக்கப் பட்டு நாட்டின் திரண்ட சென்மதி நிலுவையைக் கணிக்கும்போது கவனத்தில் எடுக்கப்பட்டதுமான வர்த்தக வங்கிகளின் சொத்துக்களும் பொறுப்புக்களும் புதிய நிதியியல் கணக்கில் குறுகிய கால மூலதன த்தின் ஓர் பகுதியாக நிலை மாற்றப்படும்.

**சிறப்புக் குறிப்பு 8 (தொடர்ச்சி)**

5. மேலேயுள்ள 4இல் குறிப்பிடப்பட்டவாறு, நிதியியல் கணக்கிற்கு வர்த்தக வங்கியின் சொத்துக்களும் பொறுப்புக்ககளும் நிலை மாற்றப்பட்டதன் விளைவால், சென்மதி நிலுவை மீதான திரண்ட நிலுவை, தேறிய அலுவல்சார் ஒதுக்குகளில் (மத்திய வங்கியாலும் அரசாலும் வைத்திருக்கப்பட்ட சொத்துக்கள்) மட்டும் மாற்றத்தைக் காட்டும்.

இவ்வமைப்பு முறையான மாற்றங்கள், பன்னாட்டு நிதியியல் கொடுக்கல் வாங்கல்களின் தன்மையில் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட மாற்றங்களுடன் ஒத்திருப்பதால், இவை பொருத்தமானதாகவும் காலத்துக்குகந்தவையாகவும் இருக்கின்றன.

சுற்றுலாக் கைத்தொழில் மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளின் உறுதியான மீட்சியின் காரணமாக பணிகளிலிருந்தான தேறிய பெறுகைகள் 51 சதவீதத்தினால் அதிகரித்தன. வெளிநாட்டில் முதலீடு செய்யப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்கள் தொடர்பான வட்டி வருவாய்கள் மீதான உயர்ந்த உட்பாய்ச்சல்கள் காணப்பட்டமையின் காரணமாக தேறிய காரணி வருமான வெளிப்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 35 மில்லியனினால் வீழ்ச்சியடைந்தன. 1990 இல் வளைகுடா யுத்தம் காரணமாக குவைத் நாட்டில் இடம் பெயர்ந்த இலங்கைத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டின் பகுதியளவு காரணத்தினால் தனியார் மாற்றல்களின் அதிகரித்த பெறுகைகளின் காரணமாக தேறிய நடைமுறை மாற்றல்கள் 9 சதவீதத்தினால் அதிகரித்தன. சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 1996 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.9 சதவீதத்திலிருந்து அல்லது ஐ.அ.டொலர் 684 மில்லியனிலிருந்து 1997 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.7 சதவீதத்திற்கு அல்லது ஐ.அ.டொலர் 404 மில்லியனுக்கு கடுமையாக வீழ்ச்சியடைந்தது. தொடர்ச்சியான மூன்றாவது ஆண்டிலும் கீழ் நோக்கிய போக்கு தொடர்ந்தது.

தனியார் மயமாக்கல் பெறுகைகளின் முதன்மைக் காரணத்தினால் தேறிய தனியார் முதலீட்டு உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 221 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 341 மில்லியனுக்கு அதிகரித்தன. அதனது கடன் வழங்கல் நடவடிக்கைகளுக்காக தேசிய அபிவிருத்தி வங்கியினால் பெறப்பட்ட வெளிநாட்டு நிதியங்கள், தேசிய அபிவிருத்தி வங்கியின் பங்குகளின் வெளிநாட்டு விற்பனை, சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் 35 சதவீதப் பங்குகளின் விற்பனை என்பனவற்றினால் மொத்தமாகப் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 352 மில்லியன் கொண்ட தொகை 1997 இல் நாட்டுக்கான வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல்களின் முக்கிய மூலங்களாக விளங்கின. தனியார் துறைக்கான குறுங்கால வர்த்தகக் கடன்களின்அதிகரிப்பின் மத்தியிலும் உள்நாட்டு வட்டி வீதங்கள் குறைவடையும் சூழலில் வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் அதிகரிப்பொன்று காணப்பட்டமையின் காரணமாக தேறிய குறுங்கால பொறுப்புக்கள் வீழ்ச்சியடைந்தன. 15 ஆண்டுகளின் பின்னர் சருவதேச மூலதனச் சந்தையில் மாறுபடும் வீத பத்திரங்களின் வழங்கலின் ஊடாக அரசாங்கம் ஐ.அ.டொலர் 50 மில்லியனைத் திரட்டுவதில் வெற்றிகண்டது. எனினும் வெளிநாட்டு உதவியின் நலிவுற்ற பயன்பாட்டின் காரணமாக தேறிய அலுவல்சார் மூலதன உட்பாய்ச்சல்கள் இவ்வாண்டில் 18 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. செயற்றிட்டக் கொடைகளின் குறைப்பின் காரணமாக தேறிய மூலதன மாற்றல்களும் 23 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவையானது சென்மதி நிலுவை கையேடு 5 இன்படி 1997 இல் ஐ.அ.டொலர் 163 மில்லியன் கொண்டசிறந்த மிகையொன்றினைப் பதிவு செய்தது. 1996 இல் 4.0 மாதங்களின் இறக்குமதிகளுக்குப் போதுமானதாகக் காணப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 2029 மில்லியனாக விளங்கிய மொத்த அலுவல்சார் வெளிநாட்டுச் சொத்துக்கள் 1998 இற்கு எறிவு செய்யப்பட்ட 3.9 மாதங்களின் இறக்குமதிகளுக்கு நிதியிடப் போதுமானதாகக் காணப்பட்டன. இதே வேளையில் வர்த்தக வங்கிகளினதையும் உள்ளடக்கிய மொத்தச் சொத்துக்கள் 1996 இன் 5.0 மாத இறக்குமதிகளிலிருந்து 5.4 மாத இறக்குமதிகளுக்கு அதிகரித்தன.

## 9.2 ஏற்றுமதிகள்

ஏற்றுமதி வளர்ச்சி 1996 இன் 8 சதவீதத்திலிருந்து 1997 இல் 13 சதவீதத்திற்கு மீட்சியடைந்தது. இயற்கை இறப்பர், பெற்றோலிய உற்பத்திப்

## அட்டவணை 9.2

### வெளிநாட்டு வர்த்தகத்தின் செயலாற்றம்

| ஆண்டு | வளர்ச்சி வீதம்(அ) | | வர்த்தகச்சுட்டெண் (1990 =100) | | விகிதம் | |
|---|---|---|---|---|---|---|
| | ஏற்றுமதிகள் | இறக்குமதிகள் | ஏற்றுமதிகள் | இறக்குமதிகள் | வர்த்தக மாற்றுவிகிதம்(ஆ) | ஏற்றுமதிகள்/ இறக்குமதிகள் |
| 1993 | 16.4 | 14.5 | 144.7 | 114.6 | 126.3 | 0.71 |
| 1994 | 12.0 | 18.8 | 151.2 | 121.0 | 125.0 | 0.67 |
| 1995 | 18.6 | 11.4 | 174.2 | 140.2 | 124.2 | 0.72 |
| 1996 | 7.6 | 2.4 | 194.9 | 153.2 | 127.2 | 0.75 |
| 1997 (இ) | 13.3 | 7.6 | 212.3 | 157.8 | 134.6 | 0.79 |


*மூலங்கள்: இலங்கைச் சுங்கம்*
*இலங்கை மத்திய வங்கி*

(அ) *சீராக்கப்பட்டது. வளர்ச்சி வீதங்கள் ஐ.அ.டொலர் நியதிகளில் தரப்பட்டுள்ளது.*

(ஆ) *(ஏற்றுமதிவிலைச்சுட்டெண்/ இறக்குமதி விலைச்சுட்டெண்) X 100*

(இ) *தற்காலிகமானவை*


**வரைபடம் 9.1**
**சென்மதி நிலுவை**





(அ) பகுப்பாய்வு வடிவமைப்பு செ.நி.கை.4 இலிருந்து செ.நி.கை.5 இற்கு மாற்றமடைந்தமையின் காரணமாக வர்த்தக வங்கிகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் திரண்ட நிலுவைகளிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளன.

**வரைபடம் 9.2**
**வெளிநாட்டு வர்த்தகம்**


**வரைபடம் 9.2.1**
**வர்த்தக நிலுவை**





**வரைபடம் 9.2.2**
**ஏற்றுமதி இறக்குமதி அளவுச் சுட்டெண்**
**(1990 = 100)**




**வரைபடம் 9.2.3**
**வர்த்தக விலைச் சுட்டெண்கள்**
**(1990 = 100(**




**வரைபடம் 9.2.4**
**பணிகளின் வர்த்தகம் (அ)**




(அ) பகுப்பாய்வு வடிவமைப்பு செ.நி.கை.4 இலிருந்து செ.நி.கை.5 இற்கு மாறற்மடைந்தமையின் காரணமாக, தற்பொழுது நடைமுறைக் கணக்கில் தனிவிடயமாகக் காணப்படும் வருமானம் பணிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை** *9.3*

**ஏற்றுமதிகளின் அமைப்பு**

| வகை | ஐ.அ.டொ. மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 (அ) | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 (அ) |
| 1. வேளாண்மை ஏற்றுமதிகள் | 655 | 702 | 829 | 961 | 1,060 | 31,618 | 34,692 | 42,478 | 53,206 | 62,667 |
| தேயிலை | 413 | 424 | 481 | 615 | 719 | 19,911 | 20,964 | 24,638 | 34,067 | 42,533 |
| இறப்பர் | 64 | 72 | 111 | 104 | 79 | 3,086 | 3,582 | 5,713 | 5,753 | 4,640 |
| தெங்கு | 58 | 76 | 103 | 110 | 117 | 2,796 | 3,761 | 5,270 | 6,091 | 6,939 |
| உள்ளீட்டு உற்பத்திகள் | 38 | 50 | 69 | 81 | 82 | 1,847 | 2,476 | 3,520 | 4,469 | 4,864 |
| ஏனையவை | 20 | 26 | 34 | 29 | 35 | 949 | 1,285 | 1,750 | 1,622 | 2,075 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 121 | 129 | 134 | 132 | 145 | 5,825 | 6,385 | 6,857 | 7,295 | 8,555 |
| 2. கைத்தொழில் ஏற்றுமதிகள் (ஆ) (இ) | 2,102 | 2,399 | 2,870 | 3,006 | 3,436 | 101,437 | 118,544 | 147,069 | 166,543 | 203,114 |
| உணவு, குடிபானம், புகையிலை | 63 | 86 | 98 | 95 | 91 | 3,054 | 4,262 | 5,040 | 5,272 | 5,354 |
| புடவைகளும் ஆடைகளும் | 1,412 | 1,552 | 1,853 | 1,902 | 2,274 | 68,150 | 76,685 | 94,946 | 105,341 | 134,455 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 79 | 80 | 85 | 104 | 97 | 3,801 | 3,959 | 4,349 | 5,740 | 5,743 |
| இறப்பர் உற்பத்திகள் | 71 | 102 | 153 | 169 | 178 | 3,445 | 5,026 | 7,851 | 9,357 | 10,513 |
| மட்பாண்டப் உற்பத்திகள் | 35 | 39 | 46 | 48 | 55 | 1,711 | 1,920 | 2,371 | 2,677 | 3,246 |
| தோலும் காலணியும் | 59 | 90 | 118 | 139 | 183 | 2,841 | 4,456 | 6,054 | 7,690 | 10,812 |
| பொறிகளும் கருவிகளும் | 73 | 93 | 124 | 154 | 204 | 3,528 | 4,572 | 6,348 | 8,572 | 12,076 |
| வைரங்களும் ஆபரணங்களும் | 154 | 170 | 196 | 192 | 142 | 7,449 | 8,419 | 10,023 | 10,643 | 8,384 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 155 | 187 | 197 | 202 | 212 | 7,458 | 9,245 | 10,087 | 11,251 | 12,531 |
| 3. கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 76 | 87 | 87 | 96 | 90 | 3,653 | 4,292 | 4,447 | 5,292 | 5,271 |
| இரத்தினக் கற்கள் | 71 | 79 | 78 | 86 | 84 | 3,402 | 3,917 | 3,972 | 4,771 | 4,899 |
| ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 5 | 8 | 9 | 10 | 6 | 251 | 375 | 475 | 521 | 372 |
| 4. பாகுபடுத்தப்படாதவை(இ)(ஈ)(உ) | 30 | 21 | 21 | 32 | 53 | 1,467 | 1,026 | 1,098 | 1,760 | 3,141 |
| மொத்த ஏற்றுமதிகள் | 2,864 | 3,209 | 3,807 | 4,095 | 4,639 | 138,175 | 158,554 | 195,092 | 226,801 | 274,193 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) சீராக்கப்பட்டது.
(இ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஈ) மீள் ஏற்றுமதிகள் உட்பட.
(உ) 1997இற்கான ஐ.அ.டொலர் 18.5 மில்லியன் (ரூ.1,091 மில்லியன்) மின் உருவாக்கிகள் ஐ.அ.டொலர் 6.2 மில்லியன் (ரூ.366 மில்லியன்) மின் கடத்திகள் மற்றும் ஐ.அ.டொலர் 26.5 மில்லியன் (ரூ.1,563 மில்லியன்) ஏனைய விடயங்களின் மீள் ஏற்றுமதிகளையும் உள்ளடக்கும்.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
இலங்கை மத்திய வங்கி

பொருட்கள் மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகள் தவிர்ந்த பெரும்பாலான ஏற்றுமதி விடயங்கள் இந்த வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன.

## கைத் தொழில் உற்பத்திப் பொருட்கள்

புடவைகள் மற்றும் ஆடைகளினால் ஆதிக்கம் செலுத்தப்படும் கைத்தொழில் ஏற்றுமதிகள் கடந்த இரண்டு தசாப்தங்களிலும் இலங்கையின் ஏற்றுமதி உள்ளடக்கத்தில் அதிகளவு முக்கியத்துவம் பெற்றுள்ளன. 1977இன் 14 சதவீதத்திற்கெதிராக 1997 இல் கைத்தொழில் ஏற்றுமதிகள் மொத்த ஏற்றுமதிகளின் 74 சதவீதத்திற்கு வகை கூறின. 1996 இன் மிதமான 5 சதவீதத்திற்கெதிராக 1997 இல் வருவாய்கள் 14 சதவீத அதிகூடிய வளர்ச்சியைக் கொண்டிருந்தன. புடவைகளும் ஆடைகளும் 20 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. தரத்தில் காணப்பட்ட மேம்பாட்டின் பகுதியளவு காரணத்தினால் புடவைகளினதும் ஆடைகளினதும் அலகு விலை 8 சதவீதத்தினால் அதிகரித்தது. 1996 இன் 4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஆடை ஏற்றுமதிகளின் அளவு 11 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் 1996 இன் பின்னடைவிலிருந்தான மீட்சியையும் பிரதிபலித்தது. புடவைகளும் ஆடைகளும் தொடர்ந்தும் முன்னணி ஏற்றுமதித் துணைத்துறையாக விளங்கி 1997 இன் மொத்த கைத்தொழில் ஏற்றுமதிகளில் 66 சதவீதத்திற்கு வகைகூறியது. புடவைகள், ஆடைகள் ஏற்றுமதிகளின் கிட்டத்தட்ட 90 சதவீதமானவை முதலீட்டுச் சபைக் கம்பனிகளினால் மேற் கொள்ளப்பட்டன. முதலீட்டுச்சபைத் தொழில் முயற்சிகளின் ஏற்றுமதி வருவாய்கள் 18 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் முதலீட்டுச்சபையல்லாத் தொழில் முயற்சிகளின் ஏற்றுமதி வருவாய்கள் 34 சதவீதத்தினால் உயர்வடைந்து கடந்த ஆண்டின் மின்வெட்டுக் காரணமாக பின்னைய வகைக்கு சார்பு ரீதியில் ஏற்பட்ட பாதகமான விளைவுகளை ஓரளவு பிரதிபலிப்பதாயிருந்தது. இந்தத்

துணைத்துறையின் தேறிய வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் முன்னைய ஆண்டினைவிட 21 சதவீதத்தினால் அதிகரித்து உள்நாட்டின் அதிஉயர் கூட்டிய பெறுமதியைப் பிரதிபலித்தது. இந்தத் துணைத்துறையின் வருவாய் பக்கத்தில் முக்கிய பங்களிப்பாளராக 90 சதவீதத்திற்கு வகை கூறிய ஆடைகளின் வருவாய் 21 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் புடவைகளின் வருவாய் 11 சதவீதத்தினால் அதிகரித்தன. 1997 மாச்சில் திரித்த நூலின் இறக்குமதிக்காக வழங்கப்பட்ட தீர்வை விலக்களிப்பு 1997 ஏப்பிறலில் கைத்தறி நெசவுக்காக பயன்படுத்தப்படும் திரித்த நூலின் மீதான மொத்த விற்பனை வரியின் நீக்கல் என்பனவற்றினால் புடவை மற்றும் ஆடைக் கைத்தொழில் நன்மைகளைப் பெற்றுக் கொண்டது. இதற்கு மேலதிகமாக 1997 நவெம்பரில் 1998ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு புடவை மற்றும் ஆடைக் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும். அனைத்து இடைநிலை மற்றும் மூலப் பொருட்களுக்கான தீர்வை விலக்களிப்பினூடாக ஊக்குவிப்புத் தொகுதியொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது.

சனவரி 15ஆம் நாளிலிருந்து மாச்சு 2 ஆம் நாள்வரை பேணல் நோக்கங்களுக்காக பெற்றோலிய தூய்மி தற்காலிகமாக மூடப்பட்டமையின் காரணமாக வெளியீட்டின் 19 சதவீத வீழ்ச்சியினைத் தொடர்ந்து 1997 இல் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி அளவு 7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

கைத்தொழில் ஏற்றுமதிகளின் மேலதிக பன்முகப்படுத்தலை பிரதிபலிக்கும் வகையில் முக்கியமாக வசனச் செயல்முறை மற்றும் தரவுச் செயல்முறைப் பொறிகள் போன்ற அலுவலகப் பொறிகளுக்கான உதிரிப்பாகங்கள் மற்றும் துணைக் கருவிகள், தட்டுக்கள்,மின்மாற்றுக் கருவிகள், மாற்றுக் கருவிகளும் உதிரிப்பாகங்களும் மின்சார பிளமன்டுக்கள், விளக்குகள் இயந்திர உபகரணங்கள் இயந்திரங்கள் மற்றும் மின் உருவாக்க கருவிகள் போன்றவற்றின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வளர்ச்சியின் முதன்மைக் காரணத்தினால் பொறிகள் இயந்திரங்கள் மற்றும் மின்சார உபகரணங்களின் ஏற்றுமதிகள் 32 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. கடந்த ஐந்து ஆண்டுகளிலும் இந்த வகையின் ஏற்றுமதி வருவாய்கள் மூன்று மடங்கிற்கும் மேலாக அதிகரித்து மொத்த ஏற்றுமதிகளில் இந்தத் துறையின் பங்கினை 6 சதவீதத்திற்கு அதிகரித்துக் கொண்டன.

ஆண்டின் இறுதிப் பகுதியில் கிழக்காசிய நிதியியல் நெருக்கடியின் காரணமாக சருவதேச சந்தைகளில் காணப்பட்ட கடுமையான போட்டியின் மத்தியிலும் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்கள் 5 சதவீதத்தினால் அதிகரித்து மொத்த கைத்தொழில் ஏற்றுமதிகளில் 5 சதவீதத்திற்கு வகைகூறின. ரயர்கள், அறுவைச் சிகிச்சைக்கு அல்லாத கையுறைகள், தரை மடிப்புக்களும் பாய்களும் மற்றும் கந்தக வலுவூட்டப்பட்ட இறப்பர் வடிவங்கள் போன்ற இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி அளவு கணிசமாக அதிகரித்தது. அறுவைச் சிகிச்சைக்கான கையுறைகளின் வருவாய் பெரும்பாலும் முன்னைய ஆண்டின் அதே மட்டத்திலேயே காணப்பட்ட வேளையில் ரயர்களுக்கான ரியூப்புக்களின் ஏற்றுமதிகள் 18 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இந்தத் துணைத்துறையில் அறுவைச் சிகிச்சை மற்றும் ஏனைய கையுறைகள் ஒன்றிணைந்து 43 சதவீதத்திற்கு வகை கூறிய வேளையில் ரயர்களும் ரியூப்புக்களும் 41 சதவீதத்திற்கு வகை கூறின.

இந்தத்துணைத் துறையின் 56 சதவீதத்திற்கு வகைகூறிய நண்டு, இறால் போன்ற கடல் வாழ் உயிரின உற்பத்திப் பொருட்களின் வருவாய்களில் ஏற்பட்ட 11 சதவீத வீழ்ச்சியின் காரணமாக உணவு, குடிபானம், புகையிலை, துணைத்துறையின் ஏற்றுமதி வருவாய்கள் 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 1996 இன் பிற்பகுதியிலிருந்து பாரிய உற்பத்திப் பிரதேசங்களின் தோன்றிய வெள்ளைப்புள்ளி நோய் மற்றும் நீர்கொழும்பு வாவிக்கு அருகேஇறால் பண்ணைகளில் நீரில் உப்புத்தன்மை அதிகரிப்பு என்பன பல பண்ணைகள் மூடப்படுவதற்குக் காரணமாகின. எனினும் இந்த நோய் கட்டுப்படுத்தப்பட்ட பின்னர் 1997 இன் இறுதிக் காலாண்டில் இந்தக் கைத்தொழிலில் மீட்சியொன்று காணப்பட்டது. கூனி இறால் பண்ணையாளர்களுக்கான நிவாரண வழிமுறையொன்றாக 1996 ஒகத்திலிருந்து செயற்படும் வகையில் கூனி இறால் தீனிக்கு தீர்வை விலக்களிப்பு வழங்கப்பட்டது.

தாழ்ந்த கேள்வியின் காரணமாக ஆபரணங்கள் (52 சதவீதம்) வைரக்கற்கள் (20 சதவீதம்) என்பனவற்றின் ஏற்றுமதிகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்று காணப்பட்டது. யப்பானில் இரண்டு முக்கிய ஆபரணக் கம்பனிகள் மூடப்பட்டமையின் காரணமாக யப்பானிய சந்தையில் காணப்பட்ட பின்னடைவே இதற்கான பெருமளவு காரணமாகும். யப்பானில் விற்பனை வரி அதிகரிப்பு மற்றும்


வைரங்களுக்கான முக்கிய சந்தைகள் காணப்பட்ட கிழக்காசிய நிதியியல் சந்தைகளில் 1997 இல் ஏற்பட்ட நெருக்கடி என்பன இதற்குப் பங்களிப்புச் செய்த ஏனைய காரணிகளாகும். மந்தமடைந்த யப்பானிய மற்றும் தெற்காசிய சந்தைகளிலிருந்து அதனது ஏற்றுமதிக்கான குறைந்த கேள்வியின் காரணமாக இலங்கைக்கான பாரிய சந்தையாகிய பெல்ஜியம் நாட்டுக்கான வைரக்கற்களின் ஏற்றுமதி 18 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஏற்றுமதிக்காக ஆபரணங்களைத் தயாரிப்பதற்காக 1996 இல் அருங்கற்களுக்கு வழங்கப்பட்ட தீர்வையற்ற வசதிகளுக்கு மேலதிகமாக இக் கைத்தொழிலை ஊக்குவிக்கும் நோக்கில் இரத்தினக்கற்கள் மற்றும் தங்கம் என்பனவற்றின் இறக்குமதிகளுக்கு தீர்வை விலக்களிப்பு வழங்கப்பட்ட வேளையில் 1997 நவெம்பரிலிருந்து இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலுக்கு வருமானவரியிலிருந்தும் தீர்வையிலிருந்தும் விலக்களிக்கப்பட்டது.

அதிகரிப்புக்களைக் காட்டிய ஏனைய தயாரிப்பு ஏற்றுமதிப் பொருட்களாவன தோலும் காலணியும் (32 சதவீதம்) மேசைப் பாவனைப் பொருட்கள் (9 சதவீதம்) சுவர் ஓடுகள் (14 சதவீதம்) பிளாத்திக்குப் பொருட்கள் (28 சதவீதம்) என்பனவாகும். இரசாயன உற்பத்திப் பொருட்களின் வருவாய்கள் சிறிதளவு வீழ்ச்சியடைந்த வேளையில் தாழ்ந்த கேள்வியின் காரணமாக, மரத்திலான ஆபரணப் பெட்டிகள் உட்பட பல வகைகளின் கணிசமான வீழ்ச்சியின் காரணமாக மர உற்பத்திப் பொருட்களின் வருவாய் கணிசமாக வீழ்ச்சியடைந்தன.

**வரைபடம் 9.3**
**முக்கிய வகைகளின்படி ஏற்றுமதிகளின் பெறுமதிகள்**




**வரைபடம் 9.4**
**முக்கிய வகைகளின்படி கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதிகள்**



## பெருந்தோட்டப் பயிர்கள்

1997 இல் பெருந்தோட்டப் பயிர்களின் ஏற்றுமதி 10 சதவீதத்தினால் அதிகரித்து 1996 இனைப் போன்றே மொத்த ஏற்றுமதிகளில் 20 சதவீதத்திற்கு வகை கூறியது. 1997 இல் கென்யா நாட்டினை முந்திச் சென்று உலகின் பாரிய தேயிலை ஏற்றுமதியாளர் என்ற நிலைமையினை மீண்டும் பெற்றுக்கொண்டது. 1977இல் 277 மில்லியன் கிலோக்கிறாம் கொண்ட அதி கூடிய உற்பத்தியினைத் தொடர்ந்து தேயிலையின் ஏற்றுமதி அளவு 10 சதவீதத்தினால் 269 மில்லியன் கிலோக் கிறாம்களுக்கு அதிகரித்தது. இதே வேளையில் தேயிலை விலைகள் 6 சதவீதத்தினால் கிலோக்கிறாம் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 2.68 இற்கு அதிகரித்து உலக தேயிலைச் சந்தையில் வழங்கல் பற்றாக் குறையினையும் இலங்கைத் தேயிலை உற்பத்தியின் தர மேம்பாட்டினையும் பிரதிபலிப்பதாக இருந்தது. தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமதி 17 சதவீதத் தினால் அதிகரித்து 1997 இன் மொத்த ஏற்றுமதிக ளின் 15 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தது. கென்யா, இந்தோனேசியா, சீனா, பங்களாதேசம் என்பனவற்றின் உற்பத்தி வீழ்ச்சி மற்றும் அதிகரித்த உலக கேள்வி என்பனவற்றின் காரணமாக தேயிலை விலைகள் உறுதியாகக் காணப்பட்டன. தேயிலை உற்பத்தியில் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் வெளியீடு இந்த நாடுகளின் கடுமையான உற்பத்தி வீழ்ச்சியினை ஈடுசெய்ய முடியாது காணப்பட்டது. சுயாதீன பொதுநலவாய நாடுகள் மற்றும் துருக்கி என்பனவற்றிலிருந்தான அதிகரித்த கேள்வியுடன் இணைந்து தனியார் துறையின் முகாமைத்துவத்தின் கீழ் இலங்கைத் தேயிலையின் தரமேம்பாடானது 1997 முழுவதும் அதிகரித்த தேயிலை விலைகளுக்கு பங்களிப்புச் செய்ததோடு இவ்விலை அதிகரித்து மேலும் தொடரக் கூடும். தனியார் துறையினரால் சிறப்பாகத் தொழிற்படுத் தக் கூடிய பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் ஈடுபாட்டினை மாற்றீடு செய்வதன் நன்மைகளை இது பிரதிபலிப்பதாக உள்ளது.

இலங்கையின் தேயிலை ஏற்றுமதியின் உள்ளட க்கத்தில் 49 சதவீதத்திற்கும் மேலானவைதொகை வடிவில் காணப்பட்ட வேளையில் 36 சதவீதமா னவை பொதிகளில் அடைக்கப்பட்டவையாகக் காணப்பட்டன. மொத்தத்தில் 15 சதவீதத்திற்கும் குறைவான எஞ்சியவைக்கு தேயிலைப் பொதிகள், வெளிநாட்டுத் தேயிலையுடன் கலக்கப்பட்ட தேயிலை உடன் தேயிலை மற்றும் இலைத் தேயிலை என்பன வகை கூறின. முன்னைய ஆண்டினைப் போலவே இலங்கைத் தேயிலையின் முதன்மை கொள்வனவா ளர்களாகிய சுயாதீன பொதுநலவாய நாடுகள் தொடர்ந்தும் காணப்பட்டு ஏற்றுமதிகளில் 23 சதவீதத்திற்கு வகை கூறிய வேளையில் துருக்கி இரண்டாவது பாரிய இறக்குமதியாளராக விளங்கி 13 சதவீதத்திற்கு வகை கூறியது. ஏனைய முக்கிய கொள்வனவாளர்களாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (7 சதவீதம்) சிரியா (5 சதவீதம்) எகிப்து, ஜோர்தான், லிபியா, (ஒவ்வொன்றும் 4 சதவீதம்) என்பன விளங்கின.

இறப்பரிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் தாழ்ந்த விலைகள் (11 சதவீதம்) மற்றும் ஏற்றுமதித் தொகை 15 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமை ஆகிய காரணங்களினால் 24 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. கிழக்காசிய நிதியியல் நெருக்கடிக்கு முன்பதாகவே 1996 திசெம்பருக்கும் 1997 யூனுக்குமிடையில் பன்னாட்டு இறப்பர் விலை கள் ஏற்கனவே 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தி ருந்தன. முக்கிய உற்பத்தி நாடுகளான தாய்லாந்து, மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளின் மிகை உற்பத்தியும் இருப்புக்களின் விடுவிப்பும் குறைந்த விலைகளுக்கு இட்டுச் சென்றன. உலக ஏற்றுமதிக ளின் 85 சதவீதத்திற்கு மேலாக பங்களிப்புச் செய்யும் தாய்லாந்து, (46 சதவீதம்) இந்தோனேசியா (57 சதவீதம்) மலேசியா (35 சதவீதம்) ஆகிய நாடுக ளின் நாணயங்களின் கடுமையான பெறுமானத் தேய்வும் ஆண்டின் இறுதிப்பாகத்தில் பன்னாட்டு இறப்பர் விலைகளில் கீழ் நோக்கிய அழுத்தத்தைக் கொண்டிருந்தன.

சிறப்பியல்பு வாய்ந்த விடயங்களான அறுவைச் சிகிச்சைக் கையுறைகள், அணியும் பொருட்கள் மற்றும் ஆடைத்துணைப் பொருட்கள் என்பனவ ற்றின் தயாரிப்புக்காகப் பயன்படுத்தப்படும் சில வகையான கிறேப் இறப்பர் தொடர்பாக இலங்கை விலை அனுகூலங்களைக் கொண்டிருந்த போதிலும் உலக இயற்கை இறப்பர் சந்தையில் 2 சதவீதத்திற்கு மட்டுமே வகைகூறும் சிறிய அளவு இறப்பர் உற்பத்தியாளரும் ஏற்றுமதியாளருமாகிய இலங்கை பன்னாட்டுச் சந்தையில் தட்டை இறப்பருக்கு நல்ல விலையினைப் பெற்றுக் கொள்ளுகின்றது. மொத்த ஏற்றுமதிகளில் 43 சதவீதத்திற்கு வகைகூறும் சுருக்கிப் புகையூட்டப்பட்ட தட்டை இறப்பரின் (ஆர்எஸ்எஸ்) சராசரி ஏற்றுமதி விலை 1997 இல் 20 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதனது உற்பத்தித் தரத்தின் காரணமாக லேட்டெக்ஸ் இயற்கை இறப்பரின் சராசரி விலை 5 சதவீதத்தி னால் அதிகரித்த வேளையில் கிரேப் வகைகள் உயர்ந்த விலைகளைப் பதிவு செய்தன. கிழக்காசிய நாடுகளில் சார்பு ரீதியில் இறப்பரின் தாழ்ந்த

விலைகளின் காரணமாக இலங்கையில் உள்நாட்டுத் தயாரிப்புக் கைத்தொழிலுக்கு அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட இறப்பர் கவர்ச்சிகரமாக இருந்துள்ளது. தற்போதைய 10 சதவீத இறக்குமதித் தீர்வையுடன் தீர்வை மற்றும் 4.5 சதவீத தேசிய பாதுகாப்புத் தீர்வை என்பனவற்றிற்காக இறக்கும திப் பெறுமதி 25 சதவீதத்தினால் மேலுமுயர்த்தப் பட்டமையானது உள்நாட்டு இறப்பர் உற்பத்தியாளர் களுக்கு ஓரளவு பயன்தரு பாதுகாப்பினை வழங்கின. லேட்டெக்ஸ் இறப்பரின் இறக்குமதிகள் 1996 இன் 63,690 கிலோக் கிறாம்களிலிருந்து 1997இல் 270,891 கிலோக் கிறாம்களுக்கு அதிகரித்தன. எனினும் இது உள்நாட்டு உற்பத்தியின் சிறிய (3 சதவீதம்) பாகமொன்றாகும்.

தெங்கு உள்ளீட்டுப் பொருட்களின் ஏற்றுமதி கள் 2 சதவீதத்தினால் அதிகரித்தன. சாதகமான வானிலை நிலைமைகளின் காரணமாக அதிகரித்த உற்பத்தியானது தெங்கு உள்ளீட்டு உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிக்கான மிகையொன்றினை உருவாக்கியது. ஏனைய தெங்கு உள்ளீட்டு உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிகளும் (தும்பு உற்பத்திப் பொருட்கள் சிரட்டை உற்பத்திப் பொருட்கள் போன்றன) 1997இல் 20சதவீதத்தினால் அதிகரித்தன. 1997இல் முக்கிய தெங்கு உற்பத்திப் பொருட்களின் சராசரி ஏற்றுமதி விலை 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

## ஏனைய வேளாண்மை உற்பத்திப் பொருட்கள்

தயாரிக்கப்படாத புகையிலையின் ஏற்றுமதி வருவாய்களிலிருந்தான வீழ்ச்சியொன்றின் மத்தியிலும் 1997 இல் ஏனைய வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிகள் 10 சதவீதத்தினால் அதிகரித்து, மொத்த ஏற்றுமதிகளில் 3 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தன. இதே வேளையில் அதிகரித்த விலைகள் மற்றும் அதிகரித்த ஏற்றுமதி அளவு என்பனவற்றின் நன்மைகளைப்

**அட்டவணை 9.4**

இறக்குமதிகளின் முடிவுப்பயன்பாட்டுப் பகுப்பு

| வகை | ஐ.அ.டொ. மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1993 | 1994 | 1995 | 1996 | 1997(அ) | 1993 | 1994 | 1995 | 1996 | 1997(அ) |
| 1. நுகர்வுப் பொருட்கள் | 891 | 1,048 | 1,181 | 1,234 | 1,223 | 42,981 | 51,810 | 60,508 | 68,372 | 72,062 |
| உணவும் குடிபானமும் | 532 | 602 | 720 | 801 | 781 | 25,675 | 29,739 | 36,901 | 44,377 | 45,996 |
| அரிசி | 49 | 13 | 2 | 91 | 73 | 2,386 | 655 | 122 | 5,118 | 4,331 |
| சீனி | 116 | 180 | 170 | 145 | 184 | 5,621 | 8,875 | 8,737 | 8,026 | 10,788 |
| கோதுமை | 116 | 118 | 198 | 204 | 139 | 5,609 | 5,825 | 10,155 | 11,267 | 8,128 |
| ஏனையவை | 250 | 291 | 349 | 361 | 385 | 12,059 | 14,384 | 17,887 | 19,966 | 22,749 |
| ஏனைய நுகர்வுப்பொருட்கள் | 359 | 447 | 461 | 433 | 442 | 17,306 | 22,071 | 23,607 | 23,995 | 26,066 |
| 2. இடைநிலப் பொருட்கள் | 2,038 | 2,307 | 2,702 | 2,767 | 3,084 | 98,343 | 114,004 | 138,475 | 153,117 | 182,013 |
| பெற்றோலியம் | 309 | 296 | 387 | 479 | 539 | 14,920 | 14,641 | 19,827 | 26,525 | 31,828 |
| வளமாக்கி | 64 | 63 | 86 | 76 | 54 | 3,108 | 3,097 | 4,406 | 4,189 | 3,175 |
| இரசாயனங்கள் | 109 | 121 | 143 | 134 | 136 | 5,244 | 5,975 | 7,310 | 7,402 | 8,024 |
| புடவைகளும் ஆடைகளும் | 865 | 1,038 | 1,159 | 1,168 | 1,386 | 41,740 | 51,299 | 59,375 | 64,601 | 81,816 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 691 | 789 | 928 | 910 | 969 | 33,331 | 38,992 | 47,557 | 50,400 | 57,170 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் | 1,047 | 1,366 | 1,189 | 1,204 | 1,325 | 50,508 | 67,524 | 60,916 | 66,647 | 78,232 |
| பொறியும் கருவியும் | 464 | 559 | 503 | 649 | 742 | 22,377 | 27,635 | 25,769 | 35,987 | 43,853 |
| போக்குவரத்துக் கருவி (ஆ) | 311 | 454 | 304 | 179 | 208 | 15,012 | 22,425 | 15,564 | 9,885 | 12,276 |
| கட்டடப் பொருட்கள் | 194 | 241 | 272 | 263 | 272 | 9,342 | 11,898 | 13,956 | 14,540 | 16,030 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 78 | 113 | 110 | 113 | 103 | 3,777 | 5,566 | 5,627 | 6,235 | 6,073 |
| 4. பகுக்கப்படாத இறக்குமதிகள் | 36 | 45 | 240 | 234 | 220 | 1,718 | 2,238 | 12,301 | 12,940 | 12,978 |
| மொத்த இறக்குமதிகள் (இ) | 4,011 | 4,767 | 5,311 | 5,439 | 5,852 | 193,550 | 235,576 | 272,200 | 301,076 | 345,285 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) 1993, 1994, 1995 இல் இறக்குமதி செய்யப்பட்ட வானூர்திகளின் பெறுமதியையும் உள்ளடக்கும்
(இ) சீராக்கப்பட்டது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம்
இலங்கை வளமாக்கிக் கம்பனியும் ஏனைய வளமாக்கி முக்கிய இறக்குமதியாளர்களும்
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
இலங்கை மத்திய வங்கி

பெற்று கறுவா ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 34 சதவீதத்தினால் அதிகரித்தன. இவ்விரு உற்பத்திப் பொருட்களும் ஏனைய வேளாண்மை ஏற்றுமதிகளின் மொத்த வருவாயில் 56 சதவீதத்திற்கு வகை கூறின. உடன் பழங்கள் மற்றும் உலர்ந்த பழங்களின் வகை 32 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உடன் மற்றும் உலர்ந்த பழங்களின் ஏற்றுமதியில் 70 சதவீதத்திற்கு வகை கூறும் பாக்கித்தானுக்கான புளியம்பழத்தின் ஏற்றுமதிகளின் நான்கு மடங்கு அதிகரிப்பின் மத்தியிலும் தாழ்ந்த விலைகளின் காரணமாக வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன. இந்த வகையினது தாழ்ந்த வருவாய்களுக்குப் பங்களிப்புச் செய்யும் வகையில் ஏனைய பழங்களின் ஏற்றுமதி அளவும் வீழ்ச்சியடைந்தது. வெற்றிலை மற்றும் ஏனைய எண்ணெய் விதைகள் என்பன தவிர்ந்த அனைத்து ஏனைய வேளாண்மை உற்பத்திப் பொருட்களினதும் ஏற்றுமதிகள் அதிகரிப்பிக்களைப் பதிவு செய்தன. சாதகமான வானிலை நிலைகளின் காரணமாக உற்பத்தி அதிகரித்தமையினால் கறுவா, கராம்பு, மிளகு, பாக்கு, ஏலம் என்பனவற்றின் ஏற்றுமதி அளவுகள் அதிகரித்தன. இந்தியா, பாக்கித்தான், நேபாளம் மற்றும் சவூதி அரேபியா ஆகிய நாடுகளின் அதிகரித்த கேள்வியின் காரணமாக மிளகு, கறுவா, சாதிக்காய், மற்றும் சாதிப்பத்திரி என்பனவற்றின் விலைகள் அதிகரித்தன. கறுவா, மிளகு, சாதிக்காய் மற்றும் கடுகு என்பனவற்றின் விலை அதிகரிப்பின் காரணமாக அத்தியாவசிய எண்ணெய் வகைகளின் ஏற்றுமதி விலைகளும் அதிகரித்தன.

### கனிப்பொருள் உற்பத்திப் பொருட்கள்

அருங்கற்கள் மற்றம் அரைமதிப்புடையகற்கள் (3 சதவீதம்) என்பனவற்றிலிருந்தான தாழ்ந்த வருவாய்களின் காரணமாக 1997 இல் அனைத்து கனிப்பொருள் உற்பத்திப் பொருட்களினதும் ஏற்றுமதி வருவாய்கள் 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. தாய்லாந்தின் நிதியியல் நெருக்கடியின் காரணமாக தாய்லாந்துக் கொள்வனவாளர்களின் குறைந்த பங்கேற்பின் காரணமாக இந்தத் துறையில் கெட்டா ஏற்றுமதிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டன. வழங்கல் பக்கத்தில் பெருந்தோட்டக் கம்பனிகளின் கீழ் காணிகளை குத்தகைக்கு வழங்குவதற்கான ஏலம் தொடர்பாக வருவாய்களைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக இரத்தினக்கல் மற்றும் ஆபரண மேலாண்மைச் சபைக்கும் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கும் இடையிலான பிணக்கின் காரணமாக இரத்தினக்கல் அகழ்வு பெருமளவில் பாதிக்கப்பட்டது. இந்தப் பிணக்கிற்கு இன்னமும் தீர்வு காணப்படாமையினால் 1997 இல் சட்டபூர்வ சுரங்க அகழ்வின் குறைப்பானது எதிர்கால இரத்தினக்கல் ஏற்றுமதியில் பிரதிபலிக்கக்கூடும். 1996 இன் 20 சதவீத அதிகரிப்புக்கு எதிராக சிறிதளவான போதிலும் 1997 இல் அருங்கற்களின் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தது. உலோகத்தாதுக்கள் மற்றும் இரும்புத்தாதுக்களின் தாழ்ந்த வருவாய்களின் காரணமாக ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகளின் வருவாய்கள் 33 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. எனினும் கனிப்பொருள் துறையின் ஏற்றுமதி வருவாய்களை கட்டுப்படுத்தும் வகையில் இல்மனைற் மற்றும் இயற்கைக் காரீயம் என்பனவற்றின் வருவாய்கள் அதிகரித்தன.

## 9.3 இறக்குமதிகள்

ஐ.அ.டொலர் 5,852 மில்லியனாக விளங்கிய இறக்குமதிகள் மீதான மொத்தச் செலவு 1996 இன் 3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 8 சதவீத மிதமான அதிகரிப்பொன்றைப் பதிவு செய்தது. இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் 11 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் முதலீட்டுப் பொருட்கள் 10 சதவீதத்தினால் அதிகரித்தன. அரிசி, கோதுமை, மற்றும் பால் உற்பத்திப் பொருட்களின் குறைந்த செலவின் காரணமாக நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகள் 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. ஏற்றுமதி உள்ளடக்கத்தினைப் போலவே கடந்த இரண்டு தசாப்தங்களிலும் இறக்குமதி உள்ளடக்கமும் கடுமையான மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளது. இதற்கு முக்கிய மாற்றம் என்னவெனில் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியிலிருந்து அதிகளவு அபிவிருத்தி சார்ந்த இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிக்கான நகர்வாகும். மொத்த இறக்குமதிகளின் சதவீதமொன்றாக முதலீட்டு மற்றும் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகளின் பங்கு 1977 இன் 56 சதவீதத்திலிருந்து 1997 இல் 75 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

### நுகர்வுப் பொருட்கள்

நுகர்வுப்பொருட்கள் வகையில், அரிசி உற்பத்தியின் பகுதியளவு மீட்சியின் காரணமாக உணவு குடிபானம் வகையின் இறக்குமதிகள் 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் உணவல்லா நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் 2 சதவீதத்தினால் அதிகரித்து நீண்டகால நுகர்வுப் பொருட்களுக்கான மேம்பட்ட உள்நாட்டுக் கேள்வியினை பிரதிபலிப்பதாக இருந்தது. அளவின் குறைப்பு மற்றும் தாழ்ந்த விலைகள் என்பனவற்றின் காரணமாக 1997இல் அரிசி இறக்குமதிகளின்

### அட்டவணை 9.5

### முக்கிய இறக்குமதிகளின் அளவுகள் (அ)

'000 மெற்றிக் தொன்

| விடயம் | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 (ஆ) |
|---|---|---|---|---|---|
| அரிசி | 209 | 58 | 9 | 341 | 306 |
| 1ம் காலாண்டு | 48 | 37 | 8 | 1 | 104 |
| 2ம் காலாண்டு | 47 | 12 | ... | 23 | 9 |
| 3ம் காலாண்டு | 17 | 5 | ... | 117 | 12 |
| 4ம் காலாண்டு | 96 | 4 | 1 | 201 | 181 |
| கோதுமை | 771 | 826 | 1,057 | 913 | 725 |
| 1ம் காலாண்டு | 207 | 178 | 315 | 201 | 301 |
| 2ம் காலாண்டு | 226 | 259 | 213 | 303 | 157 |
| 3ம் காலாண்டு | 208 | 222 | 323 | 157 | 116 |
| 4ம் காலாண்டு | 130 | 168 | 206 | 252 | 151 |
| சீனி | 394 | 491 | 417 | 381 | 545 |
| 1ம் காலாண்டு | 146 | 127 | 133 | 94 | 176 |
| 2ம் காலாண்டு | 129 | 147 | 76 | 84 | 163 |
| 3ம் காலாண்டு | 78 | 134 | 95 | 58 | 83 |
| 4ம் காலாண்டு | 40 | 83 | 113 | 146 | 123 |
| பெற்றோலியம் (மசகெண்ணெய்)) | 1,791 | 1,898 | 1,860 | 2,033 | 1,814 |
| 1ம் காலாண்டு | 369 | 503 | 332 | 566 | 299 |
| 2ம் காலாண்டு | 553 | 547 | 452 | 493 | 389 |
| 3ம் காலாண்டு | 370 | 364 | 584 | 466 | 606 |
| 4ம் காலாண்டு | 498 | 484 | 492 | 508 | 520 |
| வளமாக்கி | 465 | 427 | 452 | 361 | 332 |
| 1ம் காலாண்டு | 113 | 99 | 185 | 104 | 56 |
| 2ம் காலாண்டு | 108 | 159 | 97 | 60 | 83 |
| 3ம் காலாண்டு | 110 | 71 | 56 | 53 | 70 |
| 4ம் காலாண்டு | 134 | 97 | 115 | 144 | 123 |

(அ) சீராக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம்
இலங்கை வளமாக்கிக் கம்பனியும் ஏனைய வளமாக்கி முக்கிய இறக்குமதியாளர்களும்
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

மீதான செலவுகள் 20 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 1997 இன் சிறந்த அறுவடையானது 10 சதவீத குறைப்பினை இயலச் செய்தது. உள்நாட்டு உற்பத்தியினால் ஈடுசெய்ய முடியாத மேலதிக கேள்வியை எதிர்கொள்ளும் பொருட்டு இவ்வாண்டில் ஐ.அ.டொலர் 73 மில்லியன் செலவில் 306,101 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. சருவதேச விலைகளின் 11 சதவீத குறைப்பும் 1996 ஏப்பிறல் நடுப்பகுதியில் இருந்து ஒன்பதரை மாதங்களுக்கு செயற்பட்ட அரிசி மீதான முழுமையான தீர்வை விலக்களிப்பு 1997 சனவரி 30 ஆம் நாளிலிருந்து நீக்கப்பட்டமை ஆகியனவும் இறக்குமதிச் செலவுக் குறைப்புக்கு பங்களிப்புச் செய்தன. கோதுமை இறக்குமதியின் அளவும் 14 சதவீதத்தினால் 789,027 மெற்றிக் தொன்களுக்கு 14 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் உள்நாட்டுச் சந்தையில் தற்காலிக பற்றாக்குறையை எதிர்கொள்வதற்காக 10,674 மெற்றிக் தொன் கோதுமை மாவும் இறக்குமதி செய்யப்பட்டது. 1996 ஒகத்து 27 ஆம் நாளன்று கோதுமை மா கிலோக்கிறாம் ஒன்றின் சில்லறை விலை ரூபா 13.95 இலிருந்து ரூ.16.95 இற்கும் மேலும் 1997 ஒகத்து 10ஆம் நாள் கிலோக் கிறாம் ஒன்று ரூபா 18.95இற்கும் அதிகரிக்கப்பட்டதன் விளைவாக உதவிக் கொடுப்பனவு அகற்றப்பட்டமையினால் கோதுமை மாவின் உள்நாட்டுக்கேள்வி வீழ்ச்சியடைந்தமையை கோதுமையின் தாழ்ந்த இறக்குமதிகள் பிரதிபலிப்பதாக இருந்தன. தாழ்ந்த விலைகளின் காரணமாக பால்மற்றும் பால் உற்பத்திப் பொருட்களின் செலவு 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 14 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த உள்நாட்டு உற்பத்தியின் குறை நிரப்பலுக்காகவும் அதிகரித்த கேள்வியை எதிர் கொள்வதற்காகவும் வேண்டி சீனியின் இறக்குமதி அளவு 43 சதவீதத்தினால் 545,000 மெற்றிக் தொன்களுக்கு அதிகரிக்கப்பட்டது. 1996 நவெம்பர் 27 ஆம் நாளிலிருந்து செயற்பாட்டுக்கு வந்த 17 சதவீத தீர்வை விலக்களிப்பு அதன் பின்னர் செயற்பாட்டிற்கு வந்த 10 சதவீத தீர்வை விலக்களிப்பு என்பனவற்றுடன் இணைந்து 1996 நவெம்பர் 6 ஆம் நாளிலிருந்து செயற்பாட்டிற்கு வந்த சீனி மீதான மொத்த விற்பனவு வரியின் புறக்கீடும் அதிகரித்த இறக்குமதிக்குப் பங்களிப்புச் செய்தன. 1997 இல் சீனியின் பன்னாட்டு விலைகள் 11 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. கருவாடு மற்றும் ஏனைய மீன் வகைகள் மற்றும் உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் என்பனவற்றின் கணிசமான அதிகரிப்புக்களுடன் ஏனைய உணவு இறக்குமதிகள் 15 சதவீதத்தினால் அதிகரித்தன. உருளைக் கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் என்பனவற்றின் இறக்குமதி அதிகரிப்புக்கு 1996 யூனில் உரிமத் தேவைப்பாடுகள் நீக்கப்பட்டமையும் வழங்கல் பற்றாக்குறை காணப்பட்டபோது 1996 திசெம்பர் 4ஆம் நாளிலிருந்து 1997 சனவரி 31ஆம் நாள்வரை தீர்வை விலக்களிப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டமையும் காரணங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

நீண்டகால நுகர்வுப் பொருட்கள் வகையினைப் பொறுத்தவரையில் உந்து ஊர்திகள் மற்றும் உந்து ஈருருளிகள் என்பனவற்றின் இறக்குமதிகள் 1997இல் தொடர்ந்து வீழ்ச்சியடைந்த வேளையில் வானொலிப் பெட்டிகள் மற்றும் தொலைக் காட்சிப் பெட்டிகள் என்பனவற்றின் இறக்குமதிகள் 7சதவீத அதிகரிப்பைக் காட்டின. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் அதி உயர் பயன்பாட்டினைக் குறித்துக்காட்டும் வகையில்

குணப்படுத்தல் மருந்துகளின் இறக்குமதி அளவில் காணப்பட்ட குறைப்பின் மத்தியிலும் அதி உயர் விலைகளின் காரணமாக வைத்திய மற்றும் மருந்தாக்கல் உற்பத்திப் பொருட்கள் செலவுகள் அதிகரித்தன. 1997 இல் இறக்குமதிகளில் அதிகரிப்புக் காணப்பட்ட ஏனைய நீடித்த பாவனைப் பொருட்க ளாவன பிளாத்திக்கு, அச்சிடப்பட்ட விடயங்கள் மின் மற்றும் வீட்டு உபகரணங்கள் ஒளிகாலும் மின்விளக்குகள் மற்றும் புடவை துணை உற்பத்திப் பொருட்கள் என்பனவாகும்.

## இடைநிலைப் பொருட்கள்

இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி 11 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பானது முன்னைய ஆண்டின் இறக்குமதிகளின் ஆண்டுச் சராசரி அதிகரிப்புக்குச் சமமானதாகக் காணப்பட்டதுடன் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (58 சதவீதம்) மற்றும் புடவைகள் (19 சதவீதம்) என்பனவற்றின் இறக்குமதிகளின் கணிசமான அதிகரிப்புக்களைப் பிரதிபலிப்பதாக இருந்தது. எனினும் தாழ்ந்த பன்னாட்டு விலைகள் மற்றும் வளமாக்கியின் குறைந்த பயன்பாடு என்பனவற்றின் காரணமாக இரண்டாவது தொடர்ச்சியான ஆண்டிலும் வளமாக்கி இறக்குமதிகள் கடுமையாக வீழ்ச்சியடைந்தன. சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் இறக்குமதி அதிகரிப்புக்கு வெப்ப மின்வலு உருவாக்கத்திற்கான இறக்குமதிகளின் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பும் ஏற்கனவே குறிப்பிட்டவாறு பேணல் நோக்கங்களுக்காக பெற்றோலிய தூய்மி தற்காலிகமாக மூடப்பட்டமையினால் ஏற்பட்ட வழங்கல் பற்றாக்குறையும் பெருமளவு காரணமாகும். வழமையான பேணலுக்காக பெற்றோலிய தூய்மி தற்காலிகமாக மூடப்பட்டமையின் காரணமாக மசகெண்ணெய் இறக்குமதிகள் 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியில் காணப்பட்ட அதிஉயர் பன்னாட்டு விலைகளுக்கான நிவாரண வழிமுறையொன்றாக 1997 சனவரி 15ஆம் நாளிலிருந்து செயற்படும் வகையில் மசகெண்ணெய், பெற்றோல் மற்றும் டீசல் என்பனவற்றிற்காக 10 சதவீத பகுதியளவு தீர்வை விலக்களிப்பும் திரவ பெற்றோலிய வாயுவுக்கு முழுமையான தீர்வை விலக்களிப்பும் வழங்கப்பட்டன. எனினும் சராசரியாக ஆண்டு மசகெண்ணெய் விலைகள் 1996 இன் பீப்பாய் ஒன்றுக்கான ஐ.அ.டொலா 20.17 இலிருந்து 1997 இல் ஐ.அ.டொலர்கள் 19.40 இற்கு வீழ்ச்சியடைந்தன. புடவை மற்றும் ஆடைக் கைத்தொழிலின் வளர்ச்சிக்கு இசைந்து செல்லும் வகையில் புடவை இறக்குமதிகள் 19 சதவீதத்தினால் அதிகரித்தன. புடவை இறக்குமதிகளில் முதலீட்டுச்சபைக் கைத்தொழில்கள் 86 சதவீதத்திற்கு வகை கூறின. வைரக்கற்கள் கைத்தொழிலின் பின்னடைவினைப் பிரதிபலிக்கும் வகையில் 1997 இல் வைரக்கற்களின் இறக்குமதி 20 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஏனைய இடைநிலைப் பொருட்களில் தாள் மற்றும் தாள் அட்டைகள் (10 சதவீதம்) நிறமூட்டல், பதனிடல் மற்றும் வண்ணப் பூச்சுப் பொருட்கள் (14 சதவீதம்) தயாரிக்கப்படாத புகையிலை (62 சதவீதம்) மற்றும் தாவர எண்ணெய் (33 சதவீதம்) என்பன அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன.

## முதலீட்டுப் பொருட்கள்

உள்நாட்டு முதலீட்டுச் சூழலில் மேம்பாடொன்றைக்காட்டி 1997 இல் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி 10 சதவீதத்தினால் அதிகரித்தது. முதலீட்டுப் பொருட்களின் அதிகரிப்புக்கு பொறிகளும் கருவிகளும் (14 சதவீதம்) போக்குவரத்துக் கருவிகள் (17 சதவீதம்) கட்டடப் பொருட்கள் (3 சதவீதம்) என்பனவற்றின் இறக்குமதிகளில் காணப்பட்ட அதிகரிப்பே பெருமளவு காரணமாகும். இலங்கையின் தொலைத் தொடர்புப் பணிகளின் விரைந்த விரிவாக்கத்தினைப் பிரதிபலிக்கும் வகையில் தொலைத் தொடர்புப் பொறிகள் கருவிகள், செலூலர்தொலை பேசிகள், வானொலி மற்றம் தந்தி தொலைத் தொடர்பு உபகரணங்கள் என்பனவற்றின் இறக்குமதிகளின் மிகக்கூடிய அதிகரிப்புடன் அனைத்துத் துணைத்துறைகளிலும் பொறி கருவிகளின் இறக்குமதிகளில் அதிகரிப்புக்கள் காணப்பட்டன. புடவைகள் மற்றும் ஆடைக் கைத்தொழிலில் திருகுவேலை, நெசவு வேலை, பின்னல் வேலை, மற்றும் தையல் வேலை என்பனவற்றுக்காகப் பயன்படுத்தப்படும் பொறிகள் உதிரிப்பாகங்கள் கைத்தொழில் கழுவு இயந்திரங்களும் பாகங்களும் காற்று மற்றும் காற்றுறிஞ்சுதல் மூலம் தூசகற்றும் கருவிகள், குளிரூட்டிகள், வசனச் செயல் முறைக்கான அலுவலக உபகரணங்களும் உதிரிப்பாகங்களும், நிரப்புதல் காப்பு முத்திரையிடல் பொதியிடல் மற்றும் சுட்டுத்துண்டு ஒட்டுதல் போன்றவற்றிக்குப் பயன்படுத்தப்படும் கருவிகள் என்பனவற்றின இறக்குமதிகள் அதிகரித்துக் காணப்பட்டன. 1996 யூனில் டீசல் மின்னுருவாக்கிகளுக்கு வழங்கப்பட்ட முழுமையான தீர்வை விலக்களிப்பு 1997 யூலை நடுப்பகுதி வரையிலும் செயற்பாட்டில் இருந்தது. ஐ.அ,டொலர் 32 மில்லியன் பெறுமதியான 3060 டீசல் உருவாக்கிகளின் மேலதிக

இறக்குமதிகளும் காணப்பட்டன. எனினும் ஐ.அ.டொலர் 18.5 மில்லியன் பெறுமதியுடைய மின்னுருவாக்கிகளும் ஐ.அ.டொலர் 6.2 மில்லியன் பெறுமதியுடைய மின் மாற்றுக் கருவிகளும் 1997 இல் மீள் ஏற்றுமதி செய்யப்பட்டன. 1996 நவெம்பரிலிருந்து பயணிகள் மற்றும் பொருட் போக்குவரத்து வாகனங்களுக்கான டீசல் பொறிகள் மற்றும் ஏனைய உதிரிப்பாகங்களுக்கான தீர்வைகள் குறைக்கப்பட்டமையின் பெருமளவு காரணத்தினால் பயணிகள் வாகனங்கள் மற்றும் ஏனைய உதிரிப் பாகங்களுக்கான தீர்வைகள் குறைக்கப்பட்டமையின் பெருமளவு காரணத்தினால் பயணிகள் வாகனங்கள் மற்றும் பொருட் போக்குவரத்து வாகனங்களுக்கான இறக்குமதிகளில் போக்குவரத்துக் கருவிகளுக்கான உயர்ந்த இறக்குமதிகள் பிரதிபலிக்கப்பட்டன.

## 9.4 பணிகளும் வருமானமும்

1997 இல் பணிகள் கணக்கு குறிப்பிடத்தக்க மேம்பாடொன்றினை பதிவு செய்தது. கொடுப்பனவுகளுக்கு எதிராக சார்புரீதியில் பாரிய அதிகரிப்பொன்றினைப் பிரதிபலிக்கும் வகையில் 1997 இல் பணிகள் கணக்கின் மிகை 51 சதவீதத்தினால் ஐ.அ.டொலர்159 மில்லியனுக்கு அதிகரித்தது. சுற்றுலாவிலிருந்தான பெறுகைகள் நேர்மாற்றமடைந்து 25 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தமையின் காரணமாகவும் துறைமுகப் பணிகள் மற்றும் பயணிகள் கட்டணங்களின் அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக பணிகள் பெறுகைகள் 14 சதவீதத்தினால் அதிகரித்தன. ஐ.அ.டொலர் 29 மில்லியன் கொண்ட தேறிய பெறுகையினைப் பதிவு செய்து 1997 இல் சுற்றுலாக் கைத்தொழில் மீட்சியடைந்தது. 1997 ஒத்தோபரில் கொழும்பு நகரின் மீதான பயங்கரவாதிகளின் தாக்குதலின் மத்தியிலும் 1997 இல் சுற்றுலா வருகைகள் 21 சதவீதத்தினால் அதிகரித்தன. இவ்வாண்டில் சுற்றுலாவில் இருந்தான பெறுகைகள் ஐ.அ.டொலர் 42 மில்லியனினால் அதிகரித்தன.

பயணிகள் கட்டணங்களில் இருந்தான பெறுகைகளின் அதிகரிப்பினைப் பிரதிபலிக்கும் வகையில் போக்குவரத்துப் பணிகளில் இருந்தான பெறுகைகள் 15 சதவீதத்தினால் அதிகரித்தன. தேசிய விமான சேவையின் விமானக் கட்டணங்களின் அதிகரிப்பும் சுற்றுலா வருகையின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பும் பயணிகள் கட்டணங்களின் அதிகரித்த பெறுகைகளுக்குப் பங்களிப்புச்செய்த வேளையில் கையாளப்பட்ட மாற்றிக் கப்பலேற்றல் சரக்குகளின் அதி கூடிய தொகையும் (தொகையின் 26 சதவீத அதிகரிப்பு) சரக்குக் கையாளலில் காணப்பட்ட அதிகரிப்பும் பொருட் கொண்டு செல்லல் மற்றும் துறைமுகத்துடன் தொடர்புடைய ஏனைய பணிகளிலும் இருந்தான உயர்ந்த உட்பாய்ச்சல்களுக்கு இட்டுச் சென்றன.

**அட்டவணை 9.6**

**தேறிய பணிகளும் வருமானமும் மாற்றல்களும் (அ)**

| விடயம் | ஐ.அ.டொ. மில்லியன் | | ரூபா மில்லியன் | |
|---|---|---|---|---|
| | 1996 | 1997(ஆ) | 1996 | 1997(ஆ) |
| 1. போக்குவரத்து | 138.3 | 155.7 | 7641.7 | 9193.7 |
| 2. பயணம் | -9.5 | 29.1 | -517.3 | 1728.2 |
| 3. காப்புறுதிப்பணிகள் | 9.5 | 9.8 | 526.4 | 578.2 |
| 4. ஏனைய வியாபாரப் பணிகள் | -26.7 | -29.1 | -1483.6 | -1722.7 |
| 5. அரச செலவினம் வே.எ.கு. | -6.6 | --6.4 | -362.3 | -391.8 |
| மொத்தப் பணிகள் | 105.1 | -159.1 | 5804.9 | 9385.6 |
| 1. ஊழியர்களினிழப்பீடு | -1.2 | 1.5 | -77.9 | -90.7 |
| 2. நேரடி முதலீடு | --62.8 | -74.8 | -3472.6 | -4424.2 |
| 3. ஏனையவை | -139.7 | -89.2 | -7681.6 | -5245.3 |
| மொத்த வருமானம் | -203.7 | -165.5 | -11232.1 | -9760.2 |
| 1. தனியார் (இ) | 710.0 | 787.4 | 39230.0 | 46493.7 |
| 2. பொது அரசு | 49.1 | 44.4 | 2708.8 | 2625.0 |
| மொத்த நடைமுறை மாற்றல்கள் | 759.1 | 831.8 | 41938.8 | 49118.7 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி


(அ) இவ்விளக்கம் ப.நா.நிதியத்தின் (1993) 5ஆம் பிரிவான சென்மதி நிலுவை கையேட்டுடன் இயலக்கூடியளவுக்கு இணங்கிச் செல்கின்றது.

(ஆ) 1990இல் வளைகுடா யுத்தத்தினால் குவைத்தில் தொழிலை இழந்த ஏறக்குறைய 26,000 இலங்கையருக்கு ஆளொருவருக்கு ஐ.அ.டொலர் 2,500 வீதம் இழப்பீடாக 1997இல் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 64 மில்லியனை தற்காலிகமான (இ) தரவுகள் உள்ளடக்கும்.

முக்கியமாக வட்டி வருவாய்கள், வெளிநாட்டு நேரடி முதலீட்டு வருவாய்கள் சென்மதி நிலுவை கையேடு 5இற்கு இணங்க ஊழியர்களுக்கான இழப்பீடுகள் என்பனவற்றை உள்ளடக்கிய வருவாய் வகை இவ்வாண்டில் 25 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து 1996இன் வீழ்ச்சியினை நேர் மாற்றமடையச் செய்தது. அதி உயர் வட்டி வருமான உட்பாய்ச்சல்களுக்கு பங்களிப்புச் செய்த முக்கிய காரணிகளில் 1996 இற்கும் 1997 இற்கும் இடையில் இரு மடங்கிற்கும் மேலாக அதிகரித்த மத்திய வங்கியின் பிணையங்கள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி வர்த்தக இலாபங்கள் காணப்பட்டன. முக்கியமாக யென் மற்றும் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் என்பனவற்றிற்கு எதிராக டொலரின் பெறுமானம் உயர்வடைந்தமையின் விளைவாக அரசாங்கத்துக்கான நடுத்தரகால மற்றும் நீண்டகால கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளில் ஐ.அ.டொலர் நியதிகளில்

ஐ.அ.டொலர் 5 மில்லியன் வீழ்ச்சியானது இவ்வாண்டில் தேறிய வருமான வெளிப்பாய்ச்சல் களின் மீது நேர்க்கணிய தாக்கமொன்றினைக் கொண்டிருந்தது. கடந்த காலத்தின் அதிகரித்த உட்பாய்ச்சல்களைத் தொடர்ந்து அதிகரித்த முதலீட்டு இருப்பின் காரணமாக இவ்வாண்டில் இலாபங்களும் பங்கிலாபங்களும் 20 சதவீதத்தினால் அதிகரித்தன. சுருக்கமாகக் கூறின் டொலர் நியதிகளில் தேசிய வருமான வெளிப்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 204 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 169 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன.

**வரைபடம் 9.5**
**மூலதன பாய்ச்சல்கள் (அ)**




(அ) பகுப்பாய்வு வடிவமைப்பு செ.நி.கை.4 இலிருந்து செ.நி.கை.5 இற்கு மாற்றமடைந்தமையின் காரணமாக, முன்னர் நடைமுறைக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்த தனியார்துறை மற்றும் மூலதன மாற்றல்கள் தற்பொழுது நீண்டகால மூலதன பாய்ச்சல்களாக வகைப்படுத்தப்பட்டதுடன், முன்னர் நாணயத்துறையின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த வர்த்தக வங்கிகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மாற்றங்கள் குறுங்கால மூலதனப் பாய்ச்சல்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## 9.5 நடைமுறை மாற்றல்கள்

இவ்வாண்டில் 11.5 சதவீதத்தினால் அதிகரித்த தனியார் மாற்றல் பெறுகைகளின் முழுமையான காரணத்தினால் தேறிய நடைமுறை மாற்றல்கள் 9 சதவீதத்தினால் அதிகரித்தன. தனியார் மாற்றல் பெறுகைகளின் அதிகரிப்பானது 1990 இல் வளைகுடா யுத்தத்தின்போது இடம்பெயர்ந்த 26,101 இலங்கைத் தொழிலாளர்களின் ஒவ்வொருவரினாலும் ஐ.அ.டொலர் 2,500 வீதத்தில் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 64 மில்லியன் கொண்ட இழப்பீட்டுக் கொடுப்பனவை முக்கியமாகப் பிரதிபலித்தது. இதே வேளையில் தனியார் மாற்றல் கொடுப்பனவுகள் 10 சதவீதத்தினால் அதிகரித்தன. இதன் வினைவாக 1997 இல் தேறிய தனியார் மாற்றல்கள் 11 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 787 மில்லியனுக்கு அதிகரித்ததுடன் 1996 இன் 49சதவீதத்துடன் ஒப்பிடுகையில் பொருட்கள், பணிகள், மற்றும் வருமானக் கணக்கின் 64 சதவீத பற்றாக்குறையினை நிதியிடப் போதுமானதாகக் காணப்பட்டது. முக்கியமாக உணவு மற்றும் பண்டக் கொடைகளை உள்ளடக்கிய அலுவல்சார் நடைமுறை மாற்றல்கள் 24 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. யப்பான் (31 சதவீதம்) தொடர்ந்தும் முக்கிய கொடை வழங்குனராக விளங்கிய வேளையில் உலக உணவு நிகழ்ச்சித் திட்டம் (15 சதவீதம்) சுவீடன் (13 சதவீதம்) அவுத்திரேலியா (10 சதவீதம்) என்பன இவ்வாண்டில் குறிப்பிடத்தக்க பங்களிப்புக்களை வழங்கின.

## 9.6 மூலதன நகர்வுகள்

முக்கியமாக ஐ.அ.டொலர் 301 மில்லியன் கொண்ட தனியார் மயமாக்கல் பெறுகைகள் மற்றும் தனியார் குறுங்கால மற்றும் நீண்டகால முதலீட்டு உட்பாய்ச்சல்களின் அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக 1997 இல் மூலதன மற்றும் நிதியியல் பாய்ச்சல்கள் 6 சதவீதத்தினால் அதுகரித்தன. வெளிநாட்டு நேரடி முதலீடு, அரசாங்கத்தினதும் அபிவிருத்தி வங்கியொன்றினதும் மாறுபடும் வீத பத்திரங்களின் வழங்கல் என்பன இவ்வாண்டில் மூலதன உட்பாய்ச்சல்களுக்கு பங்களிப்புச் செய்தன. இதன் விளைவாக வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் தேறிய அதிகரிப்புக்களை நீக்கிய பின்னர் சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை முன்னைய ஆண்டின் ஐ.அ.டொலர் 68 மில்லியன் பற்றாக்குறைக்கு எதிராக 1997 இல் ஐ.அ.டொலர் 163 மில்லியன் மிகையொன்றினைப் பிரதிபலித்து நாட்டின் தேறிய அலுவல்சார் சொத்துக்களை மேம்பாடடையச் செய்தது.

### மூலதன மாற்றல்கள்

சலுகைக் கடன்களின் குறைப் பயன்பாட்டின் விளைவாக அலுவல்சார் செயற்றிட்டக் கடன்களில் ஏற்பட்ட 24 சதவீத குறைப்பொன்றின் காரணமாக தேறிய மூலதன மாற்றல்கள் ஐ.அ.டொலர் 23 மில்லியனினால் வீழ்ச்சியடைந்தன. யப்பான் (48 சதவீதம்) நோர்வே (26 சதவீதம்) ஐக்கிய அமெரிக்க நாடுகள் (14 சதவீதம்) என்பன இவ்வாண்டில் தொடர்ந்தும் முக்கிய கொடை வழங்குனர்களாகக் காணப்பட்டன.

### நீண்டகால மூலதனம்

1997 இல் நீண்டகால மூலதன உட்பாய்ச்சல்கள் பெரும்பாலும் இரட்டிப்பாகின. தனியார், நீண்டகால கடன்கள் தொடர்பான கடன்தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளில் காணப்பட்ட வீழ்ச்சியொன்றின் காரணமாக வெளிப்பாய்ச்சல்கள் குறைவடைந்தமையினாலும் தனியார் மயமாக்கல் பெறுகைகளின் பெருமளவு காரணத்தினாலும் இவ்வாண்டில் தேறிய நீண்டகால தனியார் மூலதன

உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 123 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 491 மில்லியனுக்கு அதிகரித்தன. ஓகத்து மாதத்தில் சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் 35 சதவீத பங்குகள் யப்பானிய நிப்போன் ரெலிகிராப் அன்ட் ரெலிபோன் கூட்டுத்தாபனத்துக்கு உரிமையாக்கப் பட்டமை மற்றும் அரசாங்கத்தினால் வைத்திருக்கப் பட்ட தேசிய அபிவிருத்தி வங்கி முறிகளின் விற்பனை முறையே ஐ.அ.டொலர் 225 மில்லியனையும் ஐ.அ.டொலர் 73 மில்லியனையும் திரட்டின.

இதே வேளையில் தனியார்துறைக்கான நீண்டகால கடன் மூலதனம் 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 150,000 புதிய தொலைபேசி இணைப்புக்களுக்கான தொடர் செயற்றிட்டத்திற்கு நிதியிடுவதற்காக வேண்டி சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட நீண்டகால கடன் ஒப்பந்தங்கள் (ஐ.அ.டொலர் 37 மில்லியன்) இலங்கையில் தமது நீண்டகால கடன் வழங்கல் நடவடிக்கைகளை விரிவாக்குவதற்காக பன்னாட்டு மூலதனச் சந்தைகளில் ஐ.அ.டொலர் 50 மில்லியனை திரட்டுவதற்காக (ஆசிய அபிவிருத்தி வங்கியினால் உத்தரவாதமளிக்கப்பட்டது) தேசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்ட மாறுபடும் வீதப் பத்திரங்களுடன் தேசிய அபிவிருத்தி வங்கிக்கான ஐ.அ.டொலர் 38 மில்லியன் என்பன தொடர்பாக முக்கிய பகிர்ந்தளிப்புக்கள் இடம்பெற்றன. இவ்வாண்டில் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளினாலும் வெளிநாட்டு நாணய மல்லா வங்கித் தொழில்பிரிவுகளினாலும் முதலீட்டுச்சபைத் தொழில் முயற்சிகளுக்கு கடன் வழங்கியதன் மூலம் இதற்கு ஆதரவு வழங்கப் பட்டது. எயர்லங்காவின் இரண்டு சுற்றுலாவிடுதி செயற்றிட்டங்கள் தொடர்பாக 1996 இல் மேற்கொள்ளப்பட்ட அதி விசேட கடன் மீள் கொடுப்பனவினைத் தொடர்ந்து கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 50 மில்லியன் குறைப்புக் காரணமாக இவ்வாண்டில் நீண்டகால மூலதன வெளிப்பாய்ச்சலில் குறைப்பொன்றினையும் நாடு அவதானித்தது. இது இவ்வாண்டில் ஐ.அ.டொலர்57 மில்லியன் கொண்ட தேறிய நீண்டகால தனியார் கடன் மூலதன உட்பாய்ச்சலில் அதிகரிப்பொன்றை விளைவித்தது.

ஆண்டு முழுவதிலும் காணப்பட்ட முதலீட்டு நட்புச்சார்ந்த பேரண்டப் பொருளாதார சூழல் வெளிநாட்டு முதலீட்டாளர் நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதற்கு ஆதரவு வழங்கியுள்ளதாகத் தோன்றுகின்றது. இவ்வாண்டில் ஐ.அ.டொலர் 133 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் முன்னைய ஆண்டினைவிட 34 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தன. நடைமுறைக் கணக்கின் தாராளமயப் படுத்தலின் கவனமான கொள்கைக்கு இசைந்து செல்லும் வகையில் மேலாண்மையாளர்களினால் விடய அடிப்படையில் ஒப்புதல் வழங்கப்பட்ட நான்கு வெளிநாட்டு முதலீட்டுச் செயற்றிட்டங்கள் தொடர்பாக ஐ.அ.டொலர் 5 மில்லியன் கொண்ட முதலீட்டு வெளிப்பாய்ச்சல்கள் இடம் பெற்றன.

பிரித்துக்காட்டப்பட்ட மட்டத்தில், தொலைத் தொடர்பு (ஐ.அ.டொலர் 75 மில்லியனுக்கு மேலாக) ஆடைகள் (ஐ.அ.டொலர் 17 மில்லியனுக்கு மேலாக) மற்றும் வலு உருவாக்கம் (ஐ.அ.டொலர் 17 மில்லியனுக்கு மேலாக) என்பன 1997 இல் பங்குடமை மற்றும் கடன் வழங்கல் ஆகிய இரண்டின் மூலமாகவும் முதலீட்டுச் சபையினூடாக வெளிநாட்டு முதலீட்டை ஈர்த்துக் கொண்ட முக்கிய துறைகளாக விளங்கின.

இதே வேளையில், நீண்ட கால சலுகைக் கடன்கள் 22 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 333 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமை மற்றும் இவ்வாண்டில் நீண்டகால சலுகையல்லாக் கடன்பாடுகள் 90 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 174 மில்லியனுக்கு அதிகரித்தமை என்பனவற்றின் கூட்டு விளைவாக அரசாங்கத்துக்கான நீண்டகால மூலதன உட்பாய்ச்சல்கள் 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இவ்வாண்டில் (யப்பான் 36 சதவீதம்) ஆசிய அபிவிருத்தி வங்கி (29 சதவீதம்) பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு (24 சதவீதம்) என்பன தொடர்ந்தும் இலங்கைக்கு சலுகைக் கடன்களை வழங்கும் முக்கிய மூலங்களாக விளங்கின. தாழ்ந்த பயன்பாட்டின் காரணமாக அரசாங்கத்துக்கான சலுகைக் கடன்களில் ஏற்பட்ட வீழ்ச்சியானது, இலண்டன் வங்கிகளுக்கிடையேயான வழங்கல் வீதத்துடன் 1.5 சதவீத கவர்ச்சிகரமான வீதமொன்றில் பன்னாட்டு நிதியியல் சந்தையில் அரசாங்கத்தினால் முதன் முதலாக வெற்றிகரமான முறையில் மாறுபடும் பத்திரங்களின் வழங்கலின் மூலம் ஐ.அ.டொலர் 50 மில்லியனைப் பெற்றுக் கொள்ள இயலுமானதைத் தொடர்ந்து ஓரளவு எதிரீடு செய்யப்பட்டது. உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான நிதியங்களைத் திரட்டுவதற்கான இந்த வழங்கலானது வெளிநாட்டுக் கடன்பாடுகளுக்கான அடையாளக் குறியொன்றினை நிறுவுவதற்கும் இலங்கைக்கான இயைமையுடைய வீதமொன்றுக்கான அடிப்படையினை நிறுவுவதற்கும் நோக்கம் கொண்டுள்ளது. இத்துடன் இணைந்து ஐக்கிய அமெரிக்க நாடுகளின் வழங்கல் திட்டத்தினால்

நிதியிடப்பட்ட ஐஅ.டொலர் 15 மில்லியன் கொண்ட வீடமைப்பு உத்தரவாதக் கடனும் அரசாங்கத்துக்கான நீண்டகால சலுகையல்லா மூலதன உட்பாய்ச்சல்களில் கணிசமான அதிகரிப்பொன்றினை விளைவித்தன. இதன் விளைவாக 1996 இன் ஐ.அ.டொலர் 66 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சல்களுக்கெதிராக 1997 இல் ஐ.அ.டொலர் 42 மில்லியன் கொண்ட சலுகையல்லா நீண்டகால மூலதன தேறிய உட்பாய்ச்சல் ஒன்று காணப்பட்டது.

## குறுங்கால மூலதனம்

வர்த்தக வங்கிகளினால் வைத்திருக்கப்பட்ட தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் மேம்பாடொன்றினைப் பிரதிபலிக்கும் வகையில் 1997 காலப்பகுதியில் தேறிய குறுங்கால பொறுப்புக்கள் ஐ.அ.டொலர் 150 மில்லியனினால் வீழ்ச்சியடைந்தன. (சென்மதி நிலுவை கைநூல் 5 இன் அமைப்பு முறையின் கீழ் சென்மதி நிலுவையின் மூலதனக் கணக்கில் வர்த்தக வங்கிகளின் பன்னாட்டுக் கொடுக்கல் வாங்கல் குறுங்கால நிதியியல் கொடுக்கல் வாங்கல்களாகக் கருதப்படுகின்றன. சென்மதி நிலுவை கைநூல் 5இன் அமைப்பு முறையின் கீழ் இவை நாணயத்துறை கொடுக்கல் வாங்கல்களாகக் கருதப்படுகின்றன. உள்நாட்டுச் சொத்துக்களின் மீதான வட்டி வீதங்களின் வீழ்ச்சியும் கிழக்காசிய நாணய நெருக்கடியும் வெளிநாட்டுச் சொத்துக்கள் மீதான சொத்துப் பட்டியல் சீராக்கத்தின் மூலம் தமது வெளிநாட்டுத் தேறிய பொறுப்பு நிலைமையினை கடுமையாக குறைத்துக் கொள்வதற்கு வர்த்தக வங்கிகளைத் தூண்டின. முக்கிய கேள்வி வைப்புக்களின் வடிவில் வர்த்தக வங்கியினால் வைத்திருக்கப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 200 மில்லியனினால் உயர்வடைந்ததுடன் இது 1997 இல் வெளிநாட்டுப் பொறுப்புக்களின் அதிகரிப்பினைவிட கூடுதலாகக் காணப்பட்டது.

ஏற்றுமதித்துறைக்கு அதிகரித்த வர்த்தகக் கடன்களைப் பிரதிபலிக்கும் வகையில் தேறிய தனியார் குறுங்கால மூலதன உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர்12 மில்லியனினால் அதிகரித்தன. இவ்வாண்டில் பகிாந்தளிப்புக்கள் ஐ.அ.டொலர் 12 மில்லியனினால் அதிகரித்தன. இவ்வாண்டில் பகிர்ந்தளிப்புக்கள் ஐ.அ.டொலர் 9 மில்லியனாகக் காணப்பட்டு முதலீட்டுச்சபையல்லா ஏற்றமதியாளர்களுக்கு வெளிநாட்டு நாணயக் கடன்களை வழங்குவதற்கு அனுமதிக்கும் கொள்கைத் தீர்மானமானது வெளிநாட்டு நாணயக் கடன் வழங்கலைப் பொறுத்தவரை பெரும் வரவேற்பைப் பெறவில்லை.

எனினும் ரூபா தொடர்ந்தும் படிப்படியாக பெறுமானத் தேய்வடைகின்ற வேளையில் ரூபாக்கடன்களின் மீதான வட்டிவீதமும் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தமையினால் வெளிநாட்டு நாணயக் கடன்கள் மீதான சார்பு ரீதியான கவர்ச்சிகரத் தன்மை மங்கத் தொடங்கியது. 1997 இல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் குறுங்கால கடன்பாடுகளை அதிகரிக்கவில்லை.

பொதுவாக பொருளாதாரத்தின் மீட்சியினைக் குறிப்பாக கவர்ச்சிகரமான பங்கு விலைகளைப் பிரதிபலிக்கும் வகையில் சொத்துப் பட்டியல் முதலீட்டின் ஊடாக குறுங்கால மூலதன உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 140 மில்லியனுக்கு கவர்ச்சிகரமான பொது அதிகரிப்பொன்றினைப் பதிவு செய்தது. எனினும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் முதலீடுகளுக்காக 1997 பெப்புருவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதி முழுவதும் தொடர்ச்சியாக வெளிநாட்டு மூலதன தேறிய உட்பாய்ச்சல்கள் மட்டுமே காணப்பட்டமையானது வெளிநாட்டு முதலீட்டாளர் நம்பிக்கையின் மீளப்பெறலை பிரதிபலிப்பதாக இருந்தது. இப் பிராந்தியத்தில் பல நாணயச் சந்தைகளினதும் பங்குச் சந்தைகளினதும் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்த கிழக்காசிய நாணய நெருக்கடியின் தாக்கத்தினையும் அதன் விளைவாக உள்நாட்டு நாணயத்தின் பாரிய பெறுமானத் தேய்வின் எதிர்பார்ப்பினையும் பிரதிபலிக்கும் வகையில் ஓகத்தின் பின்னர் தொடர்ச்சியான தேறிய வெளிப்பாய்ச்சல் ஒன்று காணப்பட்டது. இந்த வெளிப்பாய்ச்சலின் காரணமாக தேறிய உட்பாய்ச்சல்களின் ஆரம்பகால நன்மைகள் சில எதிரீடு செய்யப்பட்டபோதும் ஆண்டினை முழுமையாகக் கொள்கையில் சொத்துப்பட்டியல் முதலீட்டின் நியதிகளில் 1996 இன் ஐ.அ.டொலர் 7 மில்லியனைத் தொடர்ந்து ஐ.அ.டொலர் 13 மில்லியன் தேறிய உட்பாய்ச்சல்களை நாடு பதிவு செய்தது.

## 9.7 செலாவணி வீத அசைவுகள்

வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகள், குறிப்பாக ஆசிய பிரதேச சந்தைகள் இப் பிராந்தியத்தின் நாணய நெருக்கடிகளினால் 1997 இன் பிற்பகுதியில் கடுமையான நிச்சயமற்ற தன்மைகளை எதிர்நோக்கின. இக் குழப்ப நிலைமைகளினால் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்ட நாடுகளாக இந்தோனேசியா, கொறியா, மலேசியா, பிலிப்பைன்ஸ் தாய்லாந்து என்பன விளங்கியதுடன் இவ்வாண்டில் ஐ.அ.டொலருக்கெதிராக இந் நாடுகளின்

நாணயங்கள் முறையே 57 சதவீதத்தினாலும், 35 சதவீதத்தினாலும், 35 சதவீதத்தினாலும் மற்றும் 46 சதவீதத்தினாலும் தேய்வடைந்தன.

கிழக்காசியாவின் நாணயக் குழப்ப நிலை இலங்கை ரூபாவின் மீதும் சிறிதளவு தாக்கத்தினைக் கொண்டிருந்தமைக்கு தற்போதுள்ள மூலதனக் கட்டுப்பாடுகளின் காரணமாக குறுங்கால வெளிநாட்டுப் படுகடனுக்கான சிறிதளவு மறைகாப்பின்மை மற்றும் நெகிழ்ச்சித் தன்மையுள்ள முகாமைப் படுத்தப்பட்ட செலாவணி வீத முறைகளின் கீழ் ரூபா தொடர்ச்சியாக தேய்வடைந்தமை என்பனவே காரணங்களாகும். சந்தையில் உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கான அவசியத்தினைக் கருத்திற் கொண்டு செலாவணிச் சந்தையினதும் பணச் சந்தையினதும் அபிவிருத்திகள் மிக நெருக்கமாகக் கண்காணிக்கப்பட்டன. இடையீட்டு நாணயமான ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா 7.5 சதவீதத்தினால் தேய்வடைந்தது. இது இவ்வாண்டுக் காலத்தில் பெரும்பாலும் அனைத்து முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் ஐ.அ.டொலர் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வடைந்தமையும் சேர்ந்து சிஎஉ இற்கெதிராக இலங்கை ரூபா 1.6 சதவீதத்தினால் தேய்வடைய வழிவகுத்தது.

இருபத்து நான்கு வர்த்தகப் பங்காளர்களுடனான இலங்கையின் பெயரளவு பயன்தரு சொவணி வீதச் சுட்டெண் (1995 = 100) 1996 திசெம்பர் இறுதியிலிருந்து 1997 திசெம்பர் இறுதிவரை 6 சதவீத உயர்வினை எடுத்துக் காட்டியது. மதிப்பிடப்பட்ட பணவீக்க வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்ட உண்மைப் பயன்தரு செலாவணி வீதம் 1997இல் 13 சதவீதத்தினால் உயர்வடைந்தது. எனினும் பெரும்பாலான முக்கிய நாணயங்களுக்கெதிராக குறிப்பாக, கிழக்காசிய நாணய நெருக்கடிகளைத் தொடர்ந்து கிழக்காசியாவிலுள்ள இலங்கையின் போட்டியாளர்களின் நாணயங்களுக்கெதிராக ஐ.அ.டொலர் குறிப்பிடத்தக்க உயர்வினைக் காட்டியவேளையில் குறுக்கு வீதங்களின் ஒழுங்கற்ற நடத்தைகளும் விலைகளின் மீது நாணயத் தேய்வின் தாக்கம் அவர்களின் பணவீகக்க குறிகாட்டிகளில் இன்னமும் முழுமையாக பிரதிபலிக்கப்படாமையும் உண்மைப் பயன்தரு செலாவணி வீதச் சுட்டெண்ணினை வெளிநாட்டு போட்டிக்கான ஒரு குறைந்த நம்பகத் தன்மையுள்ள சுட்டெண்களாக்கி விட்டன. இது குறிப்பாக 1997 இன் நடுப்பகுதியிலிருந்து கிழக்காசியாவில் காணப்பட்ட வாறு பெயரளவு செலாவணி வீதங்களில் பெருமளவு மாற்றங்கள் காணப்பட்ட வேளையில் உண்மையாக இருந்தது. அந் நாடுகளிலுள்ள செலாவணி வீத தேய்மானங்களுக்கேற்ப உற்பத்திச் செலவினையும் விலைகளையும சீராக்கம் செய்வதில் உள்ள கால தாமதத்தினை கருத்திற் கொள்கையில் பயன்தரு செலாவணி வீத சுட்டெண்களின் அசையும் சராசரி நியதிகளில் போட்டித் தன்மைகளில் மாற்றங்களை மதிப்பிடுவது மிகவும் பொருத்தமாக இருக்கும். அத்தகைய சுட்டெண், நாளாந்தம் குறுக்கு வீத மாற்றங்களின் மிகக் கடுமையான மாறும் தன்மைகளை ஓரளவிற்கு சுகமாக்கியதுடன் காலந்தாழ்த்திய பாதிப்புக்களையும் கட்டுப்படுத்தியது. வர்த்தகப் பங்காளர்களின் அடிப்படையில் கணிக்கப்பட்ட பெயரளவு பயன்தரு செலாவணிவீதம் 0.7 சதவீதத்தினால் தேய்வடைந்தது. உண்மைப்பயன்தரு செலாவணி வீதம் 5 சதவீதத்தினால் உயர்வடைந்தது. இலங்கையில் காணப்பட்ட கட்டுப்படுத்தத்தக்க இம்மிதப்பு இத் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதில் நெகிழ்ச்சித் தன்மையினைக் கொண்டிருந்த வேளையில் செலாவணிச் சந்தை நிலைமைகள் செலாவணி

**அட்டவணை 9.7**


**செலாவணி வீத அசைவுகள்**


| நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கு ரூபா | | | | | | முன்னைய ஆண்டினைவிட சதவீதமாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டு இறுதி வீதங்கள் | | | ஆண்டுச்சராசரி | | | புள்ளிக்குப்புள்ளி | | ஆண்டுச்சராசரி | |
| | 1995 | 1996 | 1997 | 1995 | 1996 | 1997 | 1996/1995 | 1997/1996 | 1996/1995 | 1997/1996 |
| டியுச் மார்க் | 37.76 | 36.46 | 34.24 | 35.81 | 36.75 | 34.07 | 3.6 | 6.5 | -2.5 | 7.8 |
| பிரான்சு பிராங்கு | 11.05 | 10.81 | 10.23 | 10.27 | 10.81 | 10.12 | 2.2 | 5.6 | -5.0 | 6.8 |
| இந்திய ரூபாய் | 1.54 | 1.58 | 1.56 | 1.58 | 1.56 | 1.63 | -2.5 | 1.3 | 1.4 | -4.5 |
| யப்பானிய யென் | 0.53 | 0.49 | 0.47 | 0.55 | 0.51 | 0.49 | 7.6 | 3.6 | 7.7 | 4.1 |
| பவுண் இசுடேர்லிங் | 84.25 | 95.86 | 101.60 | 80.88 | 86.34 | 96.69 | -12.1 | -5.6 | -6.3 | -10.7 |
| ஐ.அ. டொலர் | 54.05 | 56.71 | 61.29 | 51.25 | 55.27 | 58.99 | -4.7 | -7.5 | -7.3 | -6.3 |
| சிஎஉ | 80.39 | 81.38 | 82.69 | 77.74 | 80.23 | 81.17 | -1.2 | -1.6 | -3.1 | -1.2 |


(அ) இலங்கை ரூபாவுக்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன சய அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது.


மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 9.6**
**பயன்தரு செலாவணி வீத சுட்டெண்கள்**




வீதத்தில் பிரதிபலிக்கப்படுவதற்கும் அனுமதித்தது.

பொருளாதாரத்தின் உண்மைத்துறைகளில் ஏற்பட்ட மற்றைய சாதகமான அபிவிருத்திகளின் தாக்கத்தின்காரணமாக உயர்ந்த ஏற்றுமதி வளர்ச்சி மற்றும் வீழ்ச்சியடைந்து செல்கின்ற வர்த்தகப் பற்றாக்குறை என்பனவற்றினால் காட்டப்பட்டவாறு மதிப்பிறக்கம் செய்யப்பட்ட ஆசிய நாணயங்கள் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் மிகச் சிறிய குறுங்கால தாக்கத்தினை மட்டுமே கொண்டிருந்தன. ஆசியப் பிராந்தியத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருட்கள் சார்பு ரீதியில் குறைந்த விலைகளைக் கொண்டிருந்தமையின் காரணமாக ஆடை போன்ற உயர்ந்த இறக்குமதி சார்ந்த கைத்தொழில்கள் கூட மிக அனுகூலமான நிலைமையில் இருந்திருக்கலாம். நெருக்கடியின் பின்னர் ஆசிய நாணயங்களில் ஏற்பட்ட ஆரம்ப மதிப்பிறக்கங்களின் கூர்மையான போட்டியானது அந் நாடுகளின் பொருளாதாரத்தில் ஏற்கனவே காணப்பட்ட உயர்ந்த உள்நாட்டுப் பணவீக்கம், உயர்ந்து செல்லும் வட்டி வீதங்கள் மற்றும் ஏனைய வழங்கல் கட்டுப்பாடுகள் என்பனவற்றின் மூலம் ஓரளவிற்கு எதிரீடு செய்யப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. முக்கியமான பேரண்டப் பொருளாதார அடிப்படைகளுடன் ஒத்துச் செல்கின்றதான இலங்கையின் நெகிழும் தன்மை கொண்ட கட்டுப்படுத்தப்பட்ட செலாவணி வீதக் கொள்கை மூலதன மாற்றங்களை தாராளமயமாக்குவதில் கடைப்பிடித்த மிகக் கவனமான அணுகுமுறை, குறுங்கால வெளிநாட்டு படுகடனுக்கு வரையறுக்கப்பட்ட தடைக்காப்பின்மை என்பன கிழக்காசிய நாணய நெருக்கடியின் சாத்தியமான

பாதகமான தாக்கங்களிலிருந்தும் பொருளாதாரத்தை பாதுகாத்தது. சென்மதி நிலுவை மற்றும் வெளிநாட்டுச் சொத்துக்களின் நிலைமை என்பன வற்றின் மேம்பட்ட செயலாற்றம், வெளிநாட்டுப்படு கடனின் சமாளிக்கத்தக்க மட்டம், மற்றும் சார்பு ரீதியில் கவர்ச்சிகரமான பங்குச்சந்தை என்பன குறைந்த ஏற்றுமதிப் போட்டித்தன்மையைக் கொண்டிருந்தமை, பாரியளவு மூலதன வெளிப்பாய்ச்சல் என்பனவற்றின் பாதகமான சிக்கல்களை இலங்கையின் பொருளாதாரம் குறுங்காலத்திற்கேனும் எதிர்த்து நிற்கக் கூடியதாக இருக்குமென்பதனை எடுத்துக்காட்டின. நெகிழ்ச்சி கூடிய கட்டுப்படுத்தத்தக்க செலாவணி வீத முறையின் கீழ் கிழக்காசியாவின் நாணயத் தேய்மானம் எந்தவொரு நீண்டகால பாதகமான விளைவுகளையும் இலங்கையின் வெளிநாட்டு போட்டித் தன்மைகளின் மீது கிழக்காசியாவின் பாரிய நாணயப் பெறுமானத் தேய்வின் நெடுங்காலம் நிலைத்து நிற்கக்கூடிய பாதகமான தாக்கங்களிலிருந்து மீட்சி பெறுவதற்குத் தேவைப்படின், நெகிழ்ச்சியுடன் முகாமைப்படுத்தப்படும் செலாவணி வீதங்கள் விரைந்து பெறுமானத் தேய்வடையலாம்.

## 9.8 வெளிநாட்டுச் சொத்துக்கள்

இலங்கையின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் முன்னைய சில ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட வீழ்ச்சிப்போக்குக்கு எதிர்மாறாக 1997 இறுதியில் ஐ.அ.டொலர் 2,822 மில்லியன் கொண்ட என்றுமில்லா உயர்மட்டத்திற்கு 15.6 சதவீதத்தினால் உயர்வடைந்தன. மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 2009 மில்லியனிற்கு 5 சதவீதத்தினாலும் வர்த்தக வங்கிகளின் அத்தகைய சொத்துக்கள் ஐ.அ.டொலர் 793 மில்லியனினால் 57 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. 1997 இல் மத்திய வங்கியினாலும் அரசினாலும் வைத்திருக்கப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கிய மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 2029 மில்லியனுக்கு 5 சதவீதத்தினால் உயர்வடைந்தன. 1997 இறுதியில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1998 இற்காக திட்டமிடப்பட்ட 5.4 மாத இறக்குமதிகளுக்கு நிதியிடப் போதுமானதாக இருந்த வேளையில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் திட்டமிடப்பட்ட இறக்குமதி களில் 3.9 மாதங்களுக்கு நிதியிடப் போதுமானதாக இருந்தன.

**அட்டவணை** 9.8

இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள்

| காலமுடிவில் உடைமையாளர் | ஐ.அ.டொலர் மில்லியன்(அ) | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 |
| 1. அரசு (ஆ) | 32 | 23 | 17 | 23 | 19 | 1,597 | 1,132 | 938 | 1,295 | 1192.3 |
| 2. அரச முகவர்கள் | - | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 |
| 3. மத்திய வங்கி (இ) | 1,642 | 1,999 | 2,046 | 1,915 | 2,009 | 81,404 | 99,859 | 110,521 | 108,506 | 123,093.3 |
| 4. மொத்த அலுவல்சார் சொத்துக்கள் | 1,675 | 2,022 | 2,063 | 1,937 | 2,029 | 83,002 | 100,991 | 111,459 | 109,800 | 124,286 |
| 5. வர்த்தக வங்கிகள் | 449 | 587 | 508 | 504 | 793 | 22,256 | 29,349 | 27,446 | 28,549 | 48,595.9 |
| 6. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் | 2,124 | 2,609 | 2,571 | 2,441 | 2,822 | 105,258 | 130,340 | 138,905 | 138,349 | 172,882 |
| 7. மாதத்தின் மொத்த அலுவல்சார் சொத்துக்கள் | | | | | | | | | | |
| 7.1 வணிக இறக்குமதிகள் | 5.0 | 5.1 | 4.7 | 4.3 | 4.2 | | | | | |
| 7 2 பொருட்கள் பணிகளின் இறக்குமதி | 4.5 | 4.5 | 4.1 | 3.8 | 3.7 | | | | | |
| 8 மாதத்தின் மொத்தச் சொத்துக்கள் | | | | | | | | | | |
| 8.1 வணிக இறக்குமதிகள் | 6.4 | 6.6 | 5.8 | 5.4 | 5.8 | | | | | |
| 8 2 பொருட்கள் பணிகளின் இறக்குமதி | 5.7 | 5.9 | 5.2 | 4.8 | 5.2 | | | | | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி


(அ) மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் கீழான சில விடயங்கள் மட்டும் பன்னாட்டு நாணய நிதியத்துடன் இணங்கப்பட்ட பிரதிநிதித்துவ வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன. இவை தவிர்ந்த ஏனையவை கீழே தரப்பட்டுள்ளன

| ஆண்டு | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 |
|---|---|---|---|---|---|
| சிஎஉ. ஒன்றுக்கு ரூபா | 49.56 | 49.98 | 54.05 | 56.71 | 61.29 |

(ஆ) திறைசேரி துணைச் செயலாளரின் சிறப்புச் கொடுகடன் நிலுவைகளை உள்ளடக்குவதற்காக 1985 இலிருந்தான எண் தொகைகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

(இ) வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான ஒதுக்குத் தேவையாக மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ள அவ் வங்கிகளின் வெளிநாட்டு நாணயங்களையும் உள்ளடக்குவதற்காக 1993 இலிருந்தான எண் தொகைகள் திருத்தப்பட்டுள்ளன.

**வரைபடம் 9.7**
**காலாண்டு வெளிநாட்டுச் சொத்துக்கள்**




## 9.9 வெளிநாட்டுப்படுகடன்

1997 இல் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் அபிவிருத்தி சென்மதி நிலுவையில் குறிப்பாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையில் மிகக் கூடுதலான வீழ்ச்சியையும் மூலதனக் கணக்கின் உள்ளமைப்பில் மாற்றமுறுகின்ற தன்மையினையும் பிரதிபலித்தது. ஆண்டின் இறுதியில் மொத்த வெளிநாட்டுப்படுகடன் ஏறத்தாள ஐ.அ.டொலர் 8,475 ஆக விளங்கி தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக ஏறத்தாள 2 சதவீதங் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. மொத்தப்படுகடன் இருப்பில் சிஎஉ இல் அமைந்த கடன்கள் 38 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் யென்னிலமைந்த கடன்கள் 26 சதவீதத்தினைக் கொண்டிருந்தன. மொத்த வெளிநின்ற கடன்களில் ஐ.அ. டொலர்க் கடன்கள் இன்னுமொரு 22 சதவீதத்திற்கு வகைகூறி சில முக்கிய நாணயங் களுக்கெதிராக ஐ.அ.டொலர் உயர்வடைந்தமையின் தாக்கத்தினைப் பிரதிபலித்தன. 1995இல் 82 சதவீதத்திலிருந்து 1996இல் 70 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த மொ.உ.உற்பத்திக்கான வெளி நாட்டுப்படுகடனின் விகிதம் 64 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்து நாட்டின் கொடுகடன் நன்மதிப்பினை மேம்படுத்தியது. அரசு மற்றும் தனியார்துறைக்கான நீண்டகால, குறுங்காலக் கடன்கள் இரண்டினதும் தேறிய உட்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 374 மில்லியனாக விளங்கியதுடன்

**அட்டவணை 9.9**


**பகிர்ந்தளிக்கப்பட்டதும் வெளிநின்றதுமான வெளிநாட்டுப்படுகடன்**

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1993 | 1994 | 1995 | 1996 | 1997(அ) | 1993 | 1994 | 1995 | 1996 | 1997(அ) |
| 1. நடுத்தர நீண்டகாலப் படுகடன் | 6,962 | 7,837 | 8,342 | 7,795 | 7,506 | 345,083 | 391,714 | 450,040 | 441,015 | 459,217 |
| 1.1 அரசு | 5,673 | 6,135 | 6,582 | 6,454 | 6,217 | 281,142 | 306,615 | 355,736 | 365,993 | 380,989 |
| 1.2 அரச உத்தரவாதத்துடனான அரச கூட்டுத்தாபனங்கள் | 339 | 508 | 559 | 570 | 608 | 16,804 | 25,414 | 30,210 | 32,326 | 37,250 |
| 1.3 அரச உத்தரவாதத்துடனான தனியார்துறை | 198 | 232 | 234 | 73 | 58 | 9,821 | 11,576 | 12,645 | 4,128 | 3,569 |
| 1.4 அரச உத்தரவாதமற்ற அரச கூட்டுத்தாபனங்கள் | 2 | 2 | 2 | 2 | 2 | 97 | 95 | 96 | 93 | 92 |
| 1.5 அரச உத்தரவாதமற்ற தனியார்துறை | 233 | 346 | 370 | 166 | 189 | 11,566 | 17,281 | 20,006 | 9,442 | 11,554 |
| 1.6 ப.நா.நி. எடுப்பனவுகள் | 517 | 615 | 596 | 530 | 433 | 25,653 | 30,734 | 31,347 | 29,033 | 25,743 |
| 2. குறுங்காலக் கடன் | 639 | 893 | 1,079 | 854 | 891 | 31,689 | 44,619 | 58,301 | 48,424 | 54,595 |
| 2.1 அரசு | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 2.2 மத்திய வங்கிக் கடன்பாடுகள் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 2.3 ஏனையவை(ஆ) | 639 | 893 | 1,079 | 854 | 891 | 31,689 | 44,619 | 58,301 | 48,424 | 54,595 |
| 3. மொத்தப் படுகடன்(1+2) | 7,601 | 8,730 | 9,421 | 8,693 | 8,397 | 376,772 | 436,333 | 508,341 | 489,439 | 513,812 |
| ஒப்பந்தக் குறிப்பு வகைகள் | | | | | | | | | | |
| நடுத்தர நீண்டகாலக் கடன்கள் | | | | | | | | | | |
| (1) செயற்றிட்ட கடன்கள | 3,730 | 4,218 | 4,594 | 4,654 | 4,523 | 184,859 | 210,818 | 248,296 | 263,918 | 277,195 |
| (2) செயற்றிட்டமல்லாக் கடன்கள் | 1,795 | 1,835 | 1,871 | 1,724 | 1,613 | 88,984 | 91,719 | 101,137 | 97,745 | 98,848 |
| (3) நிரம்பலர் கொடுகடன் | 163 | 161 | 256 | 182 | 207 | 8,087 | 8,051 | 13,837 | 13,537 | 12,690 |
| (4) ப.நா.நி. எடுப்பனவுகள் | 517 | 615 | 596 | 530 | 433 | 25,653 | 30,734 | 31,347 | 29,033 | 25,743 |
| (5) ஏனையகடன்கள் (இ) | 757 | 1,008 | 1,025 | 649 | 730 | 37,500 | 50,393 | 55,424 | 36,782 | 44,741 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) இலங்கைப் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன்களையும் வெ.நா.வ.தொ. பிரிவுகளின் வர்த்தகக் கொடுகடன்கள் மற்றும் குறுங்காலக் கடன்பாடுகளையும் உள்ளடக்குகின்றது. 1996இன் பின்னருள்ள தரவுத் தொடர்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.
(இ) அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார்துறை கூட்டுத்தாபனங்களின் நீண்ட. காலக்கடன்களையும் உள்ளடக்கும்.

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்

வரைபடம் 9.8
வெளிநாட்டுப் படுகடன்




இதில் அரைப்பங்கு நீண்டகால சலுகை ரீதியான உதவிகள் வடிவில் அரசிற்கு முக்கியமாக யப்பான், ஆசிய அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு என்பனவற்றிலிருந்து கிடைத்தன.

நடுத்தர, நீண்டகாலப்படுகடன் இருப்பு ஐ.அ.டொலர் 7,584 மில்லியனாக அல்லது மொத்தப் படுகடன் இருப்பில் 89 சதவீதமாக இருந்தது. ஐ.அ.டொலர் நியதிகளில் ப.நா.நிதியத்திற்கான மொத்த வெளிநின்றபடுகடன் ஐ.அ.டொலர் 97 மில்லியன்களால் வீழ்ச்சியடைந்தது.

அரசபடுகடன் மொத்தப்படுகடன் இருப்பில் ஏறத்தாள 74 சதவீதத்திற்கு அல்லது நாட்டின் நடுத்தர, நீண்டகாலப்படுகடனின் 83 சதவீதத்திற்கு வகைகூறியது. அரச உத்தரவாதமில்லாத தனியார் துறைப் படுகடன் மொத்தப்படுகடனில் ஏறத்தாள 2 சதவீதத்தினை கொண்டிருந்தது. ஆண்டின் இறுதியில் வெளிநின்ற குறுங்காலப்படு கடன் டொலர் நியதிகளில் 7சதவீத அதிகரிப்பினைப் பிரதிபலித்தமைக்கு வெ.நா.வ.தொ பிரிவுகளிலிருந்தான முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளின் கடன்பாடுகளே முக்கிய காரணமாகும். குறுங்காலப் படுகடன், மொத்தப்படுகடனில் 11 சதவீதத்திற்கு மட்டுமே வகைகூறியது. ஏற்றுமதி பதனிடல் கைத்தொழில்களுக்கு வழங்கப்பட்ட மூலப்பொருட்கள் இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கான வர்த்தகக் கொடுகடன்களாக விளங்கின.

## 9.10 படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

1997 இல் நடுத்தர, நீண்டகாலக் கடன்களின் தீர்ப்பனவுகளையும், அனைத்து வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய படுகடன் பணிக்கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர் 746 மில்லியனுக்கு 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர் 2 மில்லியனினாலும், வட்டிக் கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர் 5 மில்லியனினாலும் வீழ்ச்சியடைந்தன. ப.நா.நிதியத்திற்கான மீள் கொள்வனவுகள், 1988 இற்கும் 1990 இற்குமிடையில் எடுக்கப்பட்ட அமைப்புச் சீராக்க வசதியின் பேரிலான மீள் கொடுப்பனவுகளை முழுமையாகப் பிரதிபலித்து ஐ.அ.டொலர் 66 மில்லியன்களாக விளங்கின. தனியார் படுகடன்தொடர்பான தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர் 21 மில்லியன் குறைவாக இருந்தவேளையில் அரசபடுகடன் தொடர்பான தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர் 41 மில்லியனினால் உயர்வடைந்து காணப்பட்டன.

படுகடன் பணிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சி என்பனவற்றின் காரணமாக படுகடன்பணி விகிதம் 1996 இன் 15.5 சதவீததிலிருந்து 1997இல் 13.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதேபோன்று பொருட்கள், பணிகள் மற்றும் தனியார் மாற்றல்களிலிருந்தான பெறுகைகளின் விகிதமாக படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 12.8 சதவீதத்திலிருந்து 11.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

## 9.11 வெளிநாட்டு வர்த்தகச் சூழலும் கொள்கையும்

தீர்வை முறையினை இலகுபடுத்துகின்ற அதே வேளையில் தீர்வையல்லா தடைகளைப் படிப்படியாக் குறைப்பதனூடாக தாராளமயப் படுத்தப்பட்ட வர்த்தக அமைப்பொன்றினை அடைவதன் மீதே இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை தொடர்ந்தும் முழுக் கவனத்தையும் செலுத்தியது. வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான அளவுகள் கட்டுப்பாடுகள் தற்பொழுது நாட்டின் பாதுகாப்பு, பொதுநலம், சுற்றாடல் பாதுகாப்பு, தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு சில துறைகளில் உள்நாட்டு உற்பத்தியாளர்களின் பாதுகாப்பு போன்ற மிக முக்கியமான காரணங்களைக் கருத்திற்கொண்டு நன்கு வரையறுக்கப்பட்ட ஒரு குறுகிய பட்டியலுக்கு (எதிர்க்கணியப் பட்டியல்) மட்டுப்படுத்தப்பட்டன. உள்நாட்டு உற்பத்தியாளரின் பாதுகாப்பிற்காகச் சோளத்தின் இறக்குமதி உரிமத்தின் கீழ் இருக்கின்ற வேளையில் தாவரவியல் சுகாதார காரணத்திற்காக நெல்லின் இறக்குமதி தொடர்ந்தும் உரிமத்தின் கீழ் இருந்தது. அரசாங்கத்திற்கும் ஆலையிடும் கம்பனியான வரையறுக்கப்பட்ட பிரிமா இலங்கைக்குமிடையிலான

## அட்டவணை 9.10

### வெளிநாட்டுப்படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1993 | 1994 | 1995 | 1996 | 1997(அ) | 1993 | 1994 | 1995 | 1996 | 1997(அ) |
| 1. படுகடன் பணிக்கொடுப்பனவுகள் | 500 | 542 | 665 | 766 | 754 | 24,066 | 26,734 | 33,570 | 42,045 | 43,652 |
| 1.1 கடன் தீர்ப்பனவுகள் | 298 | 304 | 389 | 463 | 460 | 14,317 | 15,012 | 19,398 | 25,355 | 26,282 |
| (i) பநா நிதியத்திற்கு | 25 | 13 | 33 | 47 | 66 | 1,119 | 616 | 1,184 | 2,314 | 3,290 |
| (ii) ஏனையவற்றிற்கு | 274 | 291 | 355 | 416 | 393 | 13,198 | 14,396 | 18,214 | 23,041 | 22,992 |
| 1.2 வட்டிக் கொடுப்பனவுகள் | 202 | 237 | 276 | 302 | 294 | 9,750 | 11,723 | 14,172 | 16,691 | 17,371 |
| (i) ப.நா. நிதியத்திற்கு | 7 | 7 | 8 | 7 | 6 | 363 | 348 | 407 | 409 | 361 |
| (ii) ஏனையவற்றிற்கு | 195 | 230 | 269 | 296 | 288 | 9,387 | 11,374 | 13,765 | 16,282 | 17,010 |
| 2. வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகளிலும் பணிகளிலுமிருந்தான வருவாய்கள் | 3,492 | 3,954 | 4,627 | 4,861 | 5,514 | 168,464 | 195,347 | 237,137 | 269,159 | 325,885 |
| 3. வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள், பணிகள் தனியார் மாற்றல்களி லிருந்தான பொறுகைகள் | 4,237 | 4,813 | 5,641 | 5,868 | 6,655 | 204,511 | 237,908 | 289,061 | 324,856 | 393,269 |
| 4. படுகடன்பணி விகிதங்கள் (ஆ) | | | | | | | | | | |
| 4.1 மேலுள்ள 2 இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழுமொத்த விகிதம் | 14.3 | 13.7 | 14.4 | 15.7 | 13.7 | 14.3 | 13.7 | 14.2 | 15.6 | 13.4 |
| (ii) ப.நா.நி. கொடுக்கல் வாங்கல் நீங்கலாக | 13.4 | 13.2 | 13.5 | 14.7 | 12.4 | 13.4 | 13.2 | 13.5 | 14.6 | 12.3 |
| 4.2 மேலுள்ள 3 இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழுமொத்த விகிதம் | 11.8 | 11.3 | 11.8 | 13.0 | 11.3 | 11.8 | 11.2 | 11.6 | 12.9 | 11.1 |
| (ii) ப.நா.கொடுக்கல்வாங்கல் தவிர்ந்த | 11.0 | 10.8 | 11.1 | 12.1 | 10.2 | 11.0 | 10.8 | 11.1 | 12.1 | 10.2 |
| 5. அரச படுகடன் பணிக் கொடுப்பனவு | | | | | | | | | | |
| 5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவு (இ) | 305 | 324 | 342 | 380 | 407 | 14934 | 15749 | 17888 | 20996 | 23820 |
| 5.2 மேலேஉள்ள 1இன் சதவீதமாக | 56 | 60 | 51 | 50 | 54 | 62 | 59 | 53 | 50 | 55 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை.
(ஆ) ரூபாய் பெறுமதியிலும் ஐ.அ.டொலர் பெறுமதியிலும் கணிக்கப்பட்ட படுகடன்பணி விகிதம் வேறுபடுவதற்கு ஆண்டுப்பகுதியில் செலாவணி வீதங்களில் ஏற்பட்ட மாறுபாடுகளே காரணமாகும்.
(இ) ப. நா. நி. கொடுக்கல் வாங்கல்கள் தவிர்த்து.

ஒப்பந்த அடிப்படையிலான கடப்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு கோதுமை மற்றும் இறுங்கு, கோதுமை மற்றும் இறுங்குமா என்பனவற்றின் இறக்குமதிகள் 1997 இலும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் கீழ் தொடர்ந்துமிருந்தன. இவ்வாண்டில் சுற்றாடல் காரணங்களுக்காக அதாவது ஓசோன் படையைப் பாதுகாப்பதற்காக காபன் நுண்ணுயிர் கொல்லி உப்பு வகை, மரத்தேறல் மயக்க மருந்து, மரத்தேறல் நிழற்படத்தாள் போன்ற ஓசோனை வெறிதாக்கும் மூலப்பொருட்கள் உரிமத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. சுருக்கமாகக் குறிப்பிடின் 1997 இன் இறுதியில் 6 புள்ளிகள் மட்டத்திலான இசைவாக்கல் முறைக் குறியீட்டில் காணப்பட்ட ஏறத்தாள 6000 மொத்தப் பொருட்களில் 300 பொருட்கள் உரிமக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன.

சுற்றாடலைப் பாதுகாத்தல் மற்றும் பண்டைய கலைப் பொருட்களைப் பேணுதல் என்பனவற்றினைக் குறிக்கோளாகக் கொண்டு நான்கு வகைகளின் ஏற்றுமதிகள் மாத்திரம் அதாவது முருகைக் கற்பாறைகளும் ஓடுகளும், மரம் மற்றும் மரத்திலான பொருட்கள் (கருங்காலிப் பொருட்கள்) யானைத் தந்தத்திலான உற்பத்திகள் மற்றும் 1945இற்கு முன்னர் இலங்கையில் முதலில் பதிவு செய்யப்பட்ட பயணிகள் உந்து ஊர்திகள் என்பன தொடர்ந்தும் உரிமத்தின் கீழ் இருந்தன.

## வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான தீர்வைகளும் வரிகளும்

குறைந்த வீதங்களுடன் இலகுவானதும் வெளிப்படையானதுமான ஒரு தீர்வை அமைப்பை

உருவாக்குவதும் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு தூண்டுதலை வழங்கக்கூடிய சூழ்நிலையை மேம்படுத்துவதற்கு தூண்டுதலை வழங்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்க சுங்க நிருவாகத்தினை மேம்படுத்துவதுமே கடந்தகால தீர்வைக் கொள்கையின் வலியுறுத்தலாக விளங்கியது. இத்தகைய பின்னணியில் 1995 பெப்புருவரியிலிருந்து இறக்குமதிகளுக்காக 10,20, மற்றும் 35 சதவீதங்களைக் கொண்ட மூன்று கட்டம் கொண்ட தீர்வை அமைப்பினை ஏற்படுத்தும் விதத்தில் சுங்கத் தீர்வை ஒழுங்கு முறைப்படுத்தப் பட்டது. ஒரு சில இறக்குமதி விடயங்கள் மட்டும் அதாவது புகையிலை, குடிவகை, சிலவகை உந்து ஊர்திகள் போன்றனவே மூன்று பிரிவு வரி அமைப்பிற்கு வெளியே இருந்தன.

1992 இறுதியிலிருந்து ஏற்றுமதித்துறை தொடர்ந்தும் அனைத்து ஏற்றுமதி மற்றும் பெறுமான விகித வரிகள் என்பனவற்றிலிருந்து நீக்கப்பட்டிருந்த வேளையில் சில விடயங்களின் மீதான ஏற்றுமதித் தீர்வைகளும் ஆளுரிமைகளும் தொடர்ந்தும் காணப்பட்டன.

ஒரு முகப்படுத்தப்பட்ட அடிப்படையில், உள்ளூர் கைத்தொழில்களுக்கு பயன்மிக்க பாதுகாப்பினை வழங்குவதனை முக்கிய நோக்காகக் கொண்டு தீர்வை அமைப்பினை இரு கட்ட அமைப்பு முறைக்கு மேலும் உறுதியாக்குவதே நடுத்தரகாலக் குறிக்கோளாக இருந்தது. சுங்கத்தினை நவீனமயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக சுங்க நிருவாகம், வர்த்தக வழிமுறைகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்துவதே 1998 வரவு செலவுத் திட்டத்தில் வர்த்தகம் மற்றும் தீர்வை விடயங்களின் மீது வலியுறுத்தப்பட்ட முக்கிய விடயமாக இருந்தது. இந் நிகழ்ச்சித்திட்டம் உயர்ந்தளவு, நெகிழ்ச்சியும் சிநேகபூர்வ வசதிகளை பயன்படுத்துவதற்குமாக சுங்கத்தரவுகளுக்கான தன்னியக்கப்படுத்தல் முறைக்கான தன்னியக்க தரவுப் பதிவு செய்முறையை (அசிகுடா ++) மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது. இது சுங்கக் கட்டுப்பாடுகளின் பயன்பாட்டினையும் தீர்ப்பனவு செயல்முறையின் வினைத் திறனையும் அதிரித்தது. முதலீட்டாளர் எளிதுபடுத்தும் பிரிவு ஒன்றினை நிறுவுகின்றதன் மூலம் சுங்க நிருவாகம் வர்த்தக மேம்பாட்டுத் துறைக்குள்ளும் விரிவடையும். மேம்பட்ட கண்காணிப்பு, ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளர்களின் வசதியீனங்களைக் குறைத்தல் சட்டத்திற்கு முரணாக பொருட்களை அனுப்புதல் மற்றும் இறக்குமதியைத் தடுப்பது என்பனவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு கொழும்புத் துறைமுகத்தில் நடைமுறைப் படுத்தப்படவுள்ள கொள்கலனிலிடப்பட்ட சரக்குகளைப் பரிசோதிக்கும் உத்தேச சரக்கு எக்ஸ் - ஊடு கதிர்பரிசோதனை முறையானது சரக்குகளைப் பரிசோதிக்கும் உலகளாவிய மிக முன்னேற்றம் கண்டதொரு முறையாகவுள்ளது.

தீர்வை அமைப்பினை ஆய்வு செயது பொருத்தமான மாற்றங்களை விதந்துரைப்பு செய்வதற்காக 1997 இல் அரசாங்கம் வர்த்தக மற்றும் தீர்வை ஆணைக் குழுவொன்றினை நியமித்தது. தென்னாசிய நாடுகளுக்கிடையே சுதந்திர வர்த்தகமொன்றிற்கு வழிவகுக்கின்ற முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையை நோக்கிய உத்தேச அசைவில் உள்ள சிக்கல்களை ஆராய்வதற்காகவும் அரசு குழுவொன்றினை நியமித்துள்ளது.

வர்த்தக மற்றும் தீர்வைக் கொள்கையை பயன்மிக்க முறையில் முகாமை செய்வதன் மூலமாக உயர்ந்த உற்பத்தியாக்கம், வினைத்திறன் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் விரிவாக்கம் என்பனவற்றினை அடையும் நோக்குடன் பல்வேறு துறைகளும் மூலப்பொருட்கள், பொறிகள் மற்றும் பொறித் தொகுதிகளைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் 1998 வரவு செலவுத் திட்டத்தில் தீர்வையற்ற வசதிகள் கிடைக்கச் செய்யப்பட்டன. இலங்கையின் ஏற்றுமதி வருவாய்களில் ஏறத்தாள 50 சதவீதத்திற்கு வகைகூறும் புடவை மற்றும் ஆடைகள்துறை அதன் வருவாய்களில் 60 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கை உள்ளீடுகளின் இறக்குமதிக்காகச் செலவிடுகிறது. எனினும் இதுவரை 86 சதவீதத்திற்கும் கூடுதலான புடவைகள் மற்றும் ஆடைகளின் இறக்குமதிகள் முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளினால் தீர்வையற்ற அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டதுடன் மொத்த இறக்குமதிகளுக்கான தீர்வைச் சேகரிப்புக்களின் விகிதம் 0.8 சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்தன. இத்துறைக்கு பொருந்தத்தக்க உயர்ந்த தீர்வை முதலீட்டுச் சபையல்லா முக்கியமாக நடுத்தர மற்றும் சிறிய அளவு கைத்தொழில்களினால் மட்டுமே செலுத்தப்பட்டன. எனவே தீர்வை அமைப்பினை ஒழுங்கு முறைப்படுத்தும் தற்போதைய கொள்கையின் போக்குடன் இசைந்து செல்லும் விதமாக முரண்பாடுகளை இலகுபடுத்தி மிகவும் குறைப்பதற்காக, நூலிழை, நெய்யப்பட்ட துணி, மற்றும் அவற்றுடன் தொடர்பான இடைநிலை மற்றும் மூலதனப் பொருட்கள் 1997 நவெம்பர் 6ஆம் நாளிலிருந்து தீர்வையின்றி இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டது. இத்துறை மீதான தீர்வையை முழுமையாக அகற்றிவிடுவது சுங்கத்தின்

வேலைப் பளுவைக் குறைத்து சுங்க நடைமுறைகளை இலகுபடுத்துவதுடன் சுங்க தாமதங்களையும் ஊழல்களையும் மற்றும் கள்ளக் கடத்தல்களையும் ஒழித்துவிடும். வேளாண்மைக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்காக, என். பி. கே வளமாக்கியும் வேளாண்மை இரசாயனங்களும் சுங்கத் தீர்வையிலிருந்து விலக்கப்பட்டுள்ளன. அதே வேளை விதை சுத்திகரிப்பு, தெரிவு செய்து தரமிடும் பொறிகள், விதை பரீட்சிக்கும் கருவி மற்றும் விதைகள் பொதிகளிலடைக்கும் பொறிகளுக்கு இறக்குமதித் தீர்வை விலக்களிக்கப்பட்டது. தேயிலை பொதியிலடைக்கும் பொறித் தொகுதிகளுக்கும் நிறப் பிரிப்பிகளுக்கும் தீர்வை அகற்றப்பட்டமையின் மூலம் தேயிலைத் தயாரிப்புத்துறையும் நன்மையடைந்தது. போக்குவரத்துத்துறைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. 1997 வரவு செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்ட தீர்வைச் சலுகைகளுக்குப் புறம்பாக, சந்தைப்படுத்தல் மற்றும் பொருள் போக்குவரத்திற்கு உதவும் பொருட்டு வேளாண்மை உழுபொறிகள், சரக்கு வண்டிகள், முதன்மை பார நகர்வு வண்டிகள், மற்றும் குளிரூட்டப்பட்ட பாரவண்டிகள் என்பனவற்றின் இறக்குமதிகளும் தீர்வையின்றி அனுமதிக்கப்பட்டன. உழுபொறிகள் மற்றும் சரக்கு வண்டிகள் தயாரிக்கும் குறிக்கோளினை மேலும் வலுப்படுத்தும் விதத்தில் இவற்றிற்கான விடயங்களும் தீர்வையின்றி இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்ட வேளையில் போட்டிச் சூழலில் இப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு உள்ளூர் கைத்தொழில்கள் ஊக்கவிக்கப்பட்டன. பாரிய வர்த்தக நிறுவனங்கள் தமது ஊழியர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக பேருந்துக்களையும் சொகுசு வண்டிகளையும் இறக்கமதி செய்ய தீர்வையற்ற வசதிகள் வழங்கப்பட்டன. மேலும் இவ்விடயங்களின் பேரிலான செலவு வரி விதிக்கத்தக்க வருமானத்திலிருந்தும் கழிக்கப்படக் கூடியனவாக இருந்தது. தனியார்துறை பேருந்து தொழிற்பாட்டாளர்கள் 40 இருக்கைகளுக்கு மேற்பட்ட இயலளவைக் கொண்ட பேருந்துக்களை தீர்வையின்றி இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டனர். இவ்வனைத்து விடயங்களும் 1997 நவெம்பர் 6 வரை 10 சதவீத தீர்வையின் கீழ் இருந்தவையாகும்.

கடற் போக்குவரத்துக்கருவி, மீன்பிடிப்படகுகளின் உதிரிப்பாகங்கள், மீன் வளங்களைக் கண்டுபிடிக்கும் கருவிகள், மற்றும் மீன்பிடி வலைகளுக்கான மூலப் பொருட்கள் போன்றவற்றின் இறக்குமதிகளும் தீர்வையின்றி அனுமதிக்கப்பட்டதன் மூலம் வேளாண்மைக் கைத்தொழிலுக்கும் உதவி வழங்கப்பட்டது. இவ்விடயங்களும் முன்னர் 10 சதவீத தீர்வையின் கீழ் இருந்தன. விரைவான பொருளாதார அபிவிருத்திக்கு இன்றியமையாதனவான நவீன தொழில்நுட்ப மற்றும் தொடர்பூட்டல் வசதிகளின் செலவினைக் குறைக்கும் நோக்குடன் கணனிகள், மென்கலம் மற்றும் அதனுடன் தொடர்பான கூறுகள், தொலைத் தொடர்பூட்டல் கருவிகள் மற்றும் துணைப் பொருட்கள் என்பனவற்றின் இறக்குமதிகளும் தீர்வையின்றி அனுமதிக்கப்பட்டன. மருத்துவ செலவுகளைக் குறைப்பதற்கும், நலப்பணிகளில் தனியார்துறைப் பங்களிப்பினை ஊக்குவிப்பதற்காகவும் முன்னர் 10 சதவீத தீர்வைக்குட்பட்டிருந்த மருத்துவ மற்றும் பற்சிகிச்சைக் கருவிகளும் அவற்றின் துணைக் கருவிகளினதும் இறக்குமதிகள் சுங்கத் தீர்வைகளிலிருந்தும் விலக்கப்பட்டன. செப்பனிடப்படாத இரத்தினக்கற்கள், கருவிகள். மற்றும் இரத்தினக் கற்களை வெட்டிப் பதனிடுவதற்கான பொறிகள் மற்றும் கருவிகள் என்பனவற்றிற்கு 1996 நவெம்பர் வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டு 1997 இல் வழங்கப்பட்ட தீர்வையற்ற இறக்குமதிகளுக்குப் புறம்பாக 1998 வரவு செலவுத் திட்டத்தில் தங்கம், இரத்தினக்கற்கள், மற்றும் ஏற்றுமதிக்கான ஆபரணத் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் துணைப் பொருட்கள் என்பனவற்றின் இறக்குமதிகளுக்காக இரத்தினக்கல், ஆபரணக் கைத்தொழில்களுக்கு இறக்குமதித் தீர்வைகள் நீக்கப்பட்டன. மேலும் இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில் வருமான வரியிலிருந்தும் தேசிய பாதுகாப்புத் தீர்வையிலிருந்தும் நீக்கப்பட்டது. உள்ளூர் பிரம்புக் கைத்தொழிலுக்கு உதவுவதற்கும் சுற்றாடலைப் பாதுகாப்பதற்குமாக பிரம்பு மற்றும் மூங்கில் என்பனவற்றின் மீதான இறக்குமதித் தீர்வை ஒழிக்கப்பட்ட வேளையில் உள்ளூர் மூலப் பொருட்களின் வழங்கலை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றை உருவாக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இறக்குமதிகள் மீதான மொத்த விற்பனை வரிக் கணிப்பின் மீது விதிக்கப்பட்ட 25 சதவீத அளவு 1997 நவெம்பர் 6ஆம் நாளிலிருந்து 10 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. தீர்வை விலக்களிக்கப்பட்ட அனைத்து விடயங்களும் மொத்த விற்பனை வரியிலிருந்தும் விலக்குப் பெற்றன.

தற்போதைய கொள்கைக் குறிக்கோள்களுக்கு இசைவாக, இறக்குமதிகள் மீது வழங்கப்படுகின்ற தீர்வைத் தளர்த்தல்கள் நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு மிக இன்றியமையாத விடயங்களுக்கே வரையறுக்கப்பட்டிருந்தன. உயர்ந்த உணவு விலைகளின் காரணமாக

அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவுக்கெதிரான நிவாரணமாக கோதுமை மா மற்றும் உடைக்கப்பட்ட செம்பருப்பு (35 சதவீதம்) கருவாடு, நெத்தலிக்கருவாடு, இறால் கருவாடு (10 சதவீதம்) என்பனவற்றின் மீது முழுமையான தீர்வைத் தளர்த்தல்களும் முழு ஆடைப்பால்மா(10 சதவீதம்) தகரத்திலடைக்கப்பட்ட மீன் (5 சதவீதம்) என்பனவற்றின் மீது ஓரளவான தளர்த்தல்களும் ஆண்டு முழுவதும் தொடர்ந்துமிருந்தன. 1997 ஒத்தோபர் 10ஆம் நாளிலிருந்து கோதுமை மீது முழுமையான தொரு தீர்வைத் தளர்த்தல் (20 சதவீதம்) அறிமுகப்படுத்தப்பட்டது. 1996 ஏப்பிறல் 15ஆம் நாளன்று அறிமுகப்படுத்தப்பட்ட அரிசி மீதான முழுமையான தீர்வைத் தளர்த்தல் (35 சதவீதம்) வெற்றிகரமான பெரும்போக அறுவடையைத் தொடர்ந்து 1997 சனவரி 30ஆம் நாளன்று அகற்றப்பட்டது. வெங்காயம் உருளைக்கிழங்கு, செத்தல் மிளகாய், என்பவற்றிற்கு மிகைக் கேள்வி காணப்பட்ட சூழ்நிலையில் 1996 திசெம்பர் 4ஆம் நாளிலிருந்து நிவாரண வழிமுறையாக வழங்கப்பட்ட 15 சதவீதம் கொண்ட ஓரளவு தீாவைத்தளர்த்தல் 1997 சனவரி 31ஆம் நாளன்று புறக்கீடு செய்யப்பட்டது. 1996 நவெம்பர் 26 ஆம் நாளிலிருந்து சீனி இறக்குமதி மீது வழங்கப்பட்ட 17 சதவீதத் தீர்வைத் தளர்த்தல் 1997 ஓகத்து 11ஆம் நாளன்று 10 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. உள்நாட்டு சமையல் எண்ணெய் வகைகளின் விலைகளைக் குறைப்பதற்காகவும் தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் உயர்ந்த பன்னாட்டு விலைகளின் பின்னணியில் உள்ளூர் கைத்தொழில்களுக்கு உதவுவதற்காகவும் 1996 யூன் 15ஆம் நாளிலிருந்து 7 மாத காலப்பகுதிக்கு சமையல் எண்ணெய்கள் மற்றும் உலர்த்திய தேங்காய்க்கு வழங்கப்பட்ட 30சதவீத தீர்வைத் தளர்த்தல்கள் 1997 சனவரி 16ஆம் நாளிலிருந்து 20 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. எனினும், அவ்வப்பொழுது செய்யப்படும் இத் தளர்த்தல்கள் வர்த்தகக் கொள்கை அமைப்பில் நிச்சயமற்ற தன்மையை உருவாக்குவதுடன் வினைத்திறன்மிக்க சந்தை அபிவிருத்திகளையும் பாதிக்கும் பெருந்தோட்டமல்லா வேளாண்மைத்துறைக்கு வழங்கப்பட வேண்டிய ஆகக் குறைந்த பாதுகாப்புப் பற்றி தெளிவாக நிர்ணயிக்கப்பட வேண்டியதுடன் நீண்டகாலத்தில் கட்டம் கட்டமாக மேற் கொள்ளப்படும் திட்டத்துடன் ஏறத்தாள ஐந்தாண்டுகளுக்கான முன் அறிவிப்பினையும் மேற் கொள்ள வேண்டும். இதன் மூலம் அனைத்து உற்பத்தியாளர்களும், வர்த்தகர்களும், நுகர்வோரும் மிகுந்த தூர திருஷ்டியான கொள்கை சூழ்நிலையில் தொழிற்படக் கூடியதாக இருக்கும். இது சந்தை வினைத்திறனுக்கு வழிவகுத்து எல்லோர்க்குமான நலன்புரி நன்மைகளை மேம்படுத்தும்.

இடைநிலைப் பொருட்களைப் பொறுத்த வரை நிவாரண வழிமுறையாக வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையான தீர்வைத் தளர்த்தல்களே வழங்கப்பட்டன. உள்ளூர்ப்படவை உற்பத்தியாளர்களுக்கும் கோழிப் பண்ணை உற்பத்தியாளர்களுக்கும் உதவுவதற்காக நூலிழை மீதும் கோழித்தீன் மீதும் தீர்வைத் தளர்த்தல்கள் வழங்கப்பட்டன. கூனி இறால் வளர்ப்போருக்கு நிவாரணமளிப்பதற்காக 1996 ஓகத்து 24ஆம் நாள் தொடக்கம் 1997 பெப்புருவரி 24ஆம் வரையான காலப்பகுதிக்கு இறால் உணவின் மீது முழுமையான தீர்வைத் தளாத்தல் வழங்கப்பட்டது. பெற்றோலிய உற்பத்திகளின் அதிகரித்த பன்னாட்டு விலைகளைக் கருத்திற்கொண்டு 1997 சனவரி 15 இலிருந்து திரவப் பெற்றோலிய வாயுவின் மீதும் ஏனைய பெற்றோலிய உற்பத்திகள் மீதும் முறையே முழுமையான தீர்வைத் தளர்த்தலும் (10 சதவீதம்) ஓரளவுத் தீர்வைத் தளர்த்தலும் (10 சதவீதம்) வழங்கப்பட்டன. மின்வலுவைப் பாதுகாக்கும் பொருட்டு வலுவைச் சேமிக்கும் மின் குமிழ்களின் பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்காக 1997 ஏப்பிறல் 18ஆம் நாளிலிருந்து ஒளிகாலும் மின் விளக்குகளின் மீது முழுமையான தீர்வைத் தளர்த்தல்கள் (10 சதவீதம்) வழங்கப்பட்டன.

தனியார்துறையினால் மின் உருவாக்கிகள் பயன்படுத்தப்படுவதனை ஊக்குவிக்கும் பொருட்டு 1996 யூன்13ஆம் நாளன்று மின் உருவாக்கிகள் மீது வழங்கப்பட்ட முழுமையான தீர்வைத் தளர்த்தல்கள் (10 சதவீதம்) 1997 யூலை 15ஆம் நாள்வரை தொடர்ந்துமிருந்தது.

மொத்தச் சீராக்கப்பட்ட இறக்குமதிகளுக்கான இறக்குமதித் தீர்வை சேகரிப்பு விகிதமான பயன்தரு இறக்குமதித் தீர்வை வீதம் 1996 இன் 8.5 சதவீதத்திலிருந்து 1997இல் 7.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த இறக்குமதிகள் குறிப்பாக இடைநிலைப் பொருட்கள் தொடர்பான தீர்வை விதிக்கத்தக்க இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகளைப் பிரதிபலித்தன. மொத்த இறக்குமதிகளின் பங்கு 1996 இன் 41 சதவீதத்திலிருந்து 1997 இல் 38.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு முதலீட்டுச்சபை இறக்குமதி கள் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். சபையின் இறக்குமதிகள் 1996 இன் மொத்த இறக்குமதியின் 3.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1997 இல் 40 சதவீதமாக விளங்கின. இடைநிலைப் பொருட்கள் வகையில் 1997 வரவு

**அட்டவணை 9.11**

நடைமுறைப்படுத்தப்படும் இறக்குமதித் தீர்வை
சேகரிப்பு வீதம் (அ)

| விடயம் | 1995(ஆ) | 1996(ஆ) | 1997(இ) |
|---|---|---|---|
| **நுகர்வுப் பொருடகள்** | **10.7** | **10.3** | **11.8** |
| **உணவும் குடிபானமும்** | **10.1** | **9.1** | **11.5** |
| அரிசி | 38.5 | 0.3 | 6.3 |
| மா | 0.0 | 2.3 | 0.0 |
| சீனி | 14.6 | 15.9 | 17.8 |
| கோதுமையும் இறுங்கும் | 0.0 | 0.0 | 0.0 |
| பாலும் பால் உற்பத்திகளும் | 11.5 | 11.5 | 11.8 |
| கருவாடு | 2.0 | 2.1 | 1.6 |
| ஏனைய மீன் உற்பத்திகள | 4.6 | 4.2 | 4.9 |
| ஏனைய உணவு்விடயங்கள் | 18.7 | 19.0 | 17.9 |
| **உணவு அல்லா நுகர்வுப் பொருட்கள்** | **11.8** | **12.6** | **12.2** |
| உந்து ஊர்திகளும் ஈருளிகளும் | 21.7 | 24.3 | 24.5 |
| வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் | 6.9 | 12.1 | 11.5 |
| இறப்பர் டயர்களும் ரியூப்புக்களும் | 33.6 | 32.5 | 33.5 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் | 1.5 | 1.5 | 1.3 |
| ஏனைய உணவு அல்லாத விடயங்கள் | 11.1 | 10.6 | 9.4 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **9.0** | **8.0** | **5.9** |
| வளமாக்கி | 0.0 | 0.0 | 0.1 |
| மசகெண்ணெய் | 41.1 | 33.6 | 21.7 |
| ஏனைய பெற்றோலியப் பொருட்கள் | 23.4 | 24.6 | 18.7 |
| இரசாயன மூலங்களும் கலவைகளும் | 9.8 | 7.6 | 7.6 |
| சாயமுட்டல் பதனிடல் மற்றும் | 8.8 | 8.2 | 7.1 |
| தாள் தாள் அட்டைகள் | 9.8 | 6.9 | 6.0 |
| புடவையும் ஆடைகளும் | 1.0 | 1.1 | 0.8 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 9.2 | 5.7 | 5.2 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **10.1** | **7.6** | **7.0** |
| கட்டடப் பொருட்கள் | 8.7 | 9.3 | 9.1 |
| போக்குவரத்துக் கருவிகள் | 21.6 | 18.9 | 17.3 |
| பொறியும் கருவியும் | 6.2 | 3.9 | 3.4 |
| ஏனைய முதவீட்டுப் பொருட்கள் | 10.1 | 6.7 | 6.3 |
| **ஏனைய இறக்குமதிகள்** | **2.2** | **4.1** | **2.3** |
| **மொத்தம்** | **9.7** | **8.5** | **7.4** |

(அ) சீராக்கப்பட்ட மொத்த இறக்குமதிப் பெறுமதியின் சதவீதமாக உண்மையான தீர்வைச் சேகரிப்பு (க.ஏ.பெ.)
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது.
(இ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
கூ.மொ.வி.நிலையம்
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

செலவுத் திட்டத்தில் குறிப்பிட்ட சில மூலப் பொருட்களின் மீது வழங்கப்பட்ட தீர்வைக் குறைப்புக்கள் மற்றும் 1997 சனவரி 15 இலிருந்து திரவப் பெற்றோலிய வகை மற்றும் பெற்றோலிய உற்பத்திகள்மீது வழங்கப்பட்ட தீர்வைத் தளர்த்தல்கள் என்பனவற்றினைத் தொடர்ந்து பயன்தரு தீர்வை வீதம் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. பெற்றோலிய உற்பத்திகள் மீதான தீர்வைத் தளர்த்தலின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மசகெண்ணெய் மற்றும் ஏனைய பெற்றோலிய வகைகள் ஆகிய இரண்டினதும் பயன்தரு தீர்வை வீதங்கள் கணிசமாக வீழ்ச்சியடைந்தன. புடைவகள் மற்றும் ஆடைகள் மீது சார்புரீதியில் உயர்ந்த தீர்வை வீதங்கள் பிரயோகிக்கப்பட்டபோதும், மொத்தத் தொகையில் 86 சதவீதம் முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளினால் தீர்வையின்றி இறக்குமதி செய்யப்படுவதனால் பயன்தரு தீர்வை வீதங்கள் மிகவும் சிறிதாக (0.8 சதவீதம்) இருந்தன.

முதலீட்டுப் பொருட்கள் குறிப்பாக போக்குவரத்துக் கருவிகள் மீதான பயன்தரு தீர்வை வீதங்களும் 1997 இல் வீழ்ச்சியடைந்தன. இதற்கு இவ்வாண்டின் இறக்குமதிச் செலவில் கணிசமான

அதிகரிப்புக்களைக் காட்டிய போக்குவரத்துக் கருவிகளின் உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப் பொருட்கள் மற்றும் பயணிகள் ஊர்திகள் என்பனவற்றிற்காக 1997 வரவு செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்ட குறைந்த தீர்வை வீதங்களே காரணமாக இருந்தன. பொறிகள் மற்றும் கருவிகள் வகையில் ஏற்பட்ட சிறிதளவு குறைப்பிற்கு 1996 யூனிலிருந்து 1997 யூலைவரை மின் உருவாக்கிகள் மீது வழங்கப்பட்ட தீர்வைத் தளர்த்தல்களே ஓரளவு காரணமாகும்.

உணவுப் பொருட்கள் வகையில் உணவு மற்றும் குடிபான இறக்குமதிகளுக்கான சராசரி பயன்தரு இறக்குமதி குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வடைந்த வேளையில் உணவல்லா நுகர்வுப் பொருட்களுக்கான அத்தகைய தீர்வை வீதம் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. உணவு மற்றும் குடிபான வகையின் பயன்தரு இறக்குமதித் தீர்வை வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு அரிசி மற்றும் சீனியின் இறக்குமதிகளை முக்கியமாகப் பிரதிபலித்தது. 1996 இல் எட்டரை மாதங்களாக அனுபவிக்கப்பட்டுவந்த அரிசி மீதான 35 சதவீதங்கொண்ட முழுமையான தீர்வைத் தளர்த்தல்கள் அகற்றப்பட்டதன் தாக்கமும் சீனி மீதான தீர்வைத் தளர்த்தல்கள் 17 சதவீதத்திலிருந்து 1997ஓகத்து 11ஆம் நாளிலிருந்து 10 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டமையும் 1997 இன் உயர்ந்த தீர்வை வீதங்களில் கணிசமாகப் பிரதிபலிக்கப்பட்டது. உணவல்லா நுகர்வோர் பொருட்களின் பயன்தரு வீதத்தில் மிகச் சிறிதளவு மாற்றங்களை மட்டுமே காண முடிந்தது.

### புடவை மற்றும் ஆடை அனுமதிப்பங்கு ஒதுக்குகள்

குழு அனுமதிப் பங்குகளை ஒதுக்கீடு செய்கையில் புதிய ஏற்றுமதியாளர்களுக்கும் தற்போதுள்ள இயலளவுகளை விரிவாக்கியவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டதன் காரணமாக 1997 இலும் செயலாற்றத்தினை அடிப்படையாகக் கொண்ட அனுமதிப் பங்கு முறை தொடர்ந்தும் காணப்பட்டது. 1997இல் அனுமதிப்பங்குகளை ஒதுக்குவதில் பெரும் திருத்தங்கள் எதுவும் காணப் படவில்லை. ஐ.அ.நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் கனடா, என்பனவற்றிற்கான கிடைக்கத்தக்க அனுமதிப் பங்குகள் முறையே 5.6 சதவீதத்தினாலும், 11.4 சதவீதத்தினாலும் 0.9சதவீதத்தினாலும் உயர்வடைந்தன. இதன் விளைவாக, மொத்த அனுமதிப் பங்குக் கிடைப்பனவு 1996 இல் பதிவு செய்யப்பட்ட 13.5சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 6.2 சதவீதத்தினால் உயர்வடைந்தன. எனினும் மொத்த அனுமதிப்பங்குப் பயன்பாட்டு வீதம் 1996இன் 70 சதவீதத்திலிருந்து 65 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு, சில அனுமதிப்பங்கு வகைகளுக்கான நலிவுற்ற கேள்வியே முக்கிய காரணமாகும். அதேவேளை குறைந்த பெறுமதி கூட்டப்பட்ட விடயங்களிலிருந்து உயர்ந்த பெறுமதி கூட்டப்பட்ட விடயங்களுக்கு பெயர்ந்தமையையும் காண முடிந்தது. அனுமதிப் பங்குகளின் பயன்பாடு வேறுபட்ட வகைகள் மற்றும் நாடுகளினடிப்படையில் பரந்தளவிற்கு வேறுபட்டது. ஐ.அ. நாடுகள் சந்தைக்கு மேலங்கிகள், நீளக்காற் சட்டைகள் மற்றும் விளையாட்டு உடுப்புக்கள் போன்ற குறிப்பிட்ட விடயங்களுக்கான அனுமதிப் பங்குக் கிடைப்பனவு, பயன்பாடு ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. குறைந்தளவு அனுமதிப் பங்கே காணப்பட்டபோதும் இதே சந்தையில் பெண்களுக்கான இரவு ஆடைகள், துணிகள்மற்றும் உடுப்புக்கள் போன்ற மற்றைய விடயங்களின் பயன்பாடு 1996இனைவிட உயர்வான தாக இருந்தது. குளிராடைகள், பெண்களின் மேலங்கிகள், ஆண்களுக்கான மேலங்கிகள் மற்றும் துவாய்கள் போன்ற விடயங்களுக்கான கிடைக்கத் தக்க அனுமதிப் பங்கு உயர்த்தப்பட்டபோதும் அவ்விடயங்களுக்கான பயன்பாடு மிகக் குறைவாகவே இருந்தது. கிடைக்கத்தக்க அனுமதிப் பங்கில் உயர்வு காணப்பட்டபோதும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான அனைத்து விடயங்களுக்குமான அனுமதிப் பங்குப் பயன்பாட்டு வீதங்கள் வீழ்ச்சிய டைந்தன. கனடாவிற்கான அனுமதிப் பங்கினைப் பொறுத்த வரையில் ஒரு சில வகைகள் மட்டுமே திருப்திகரமான அனுமதிப் பங்கு பயன்பாட்டினை எடுத்துக்காட்டின. மேற்குறிப்பிட்ட செயலாற்றத்திற்கு அனுமதிப்பங்கின் கீழ்வரும் சில விடயங்களுக்கான கேள்வி போதுமானதாக இல்லாமை ஓரளவு காரணமாக விளங்குவது, அனுமதிப் பங்கினை அதிகரிப்பதானது அத்தகைய குறிப்பிட்ட சந்தைகளில் அத்தகைய குறிப்பிட்ட விடயங்களினது கேள்வியின் மூலம் ஆதரவளிக்கப் பட வேண்டியதன் அவசியத்தினை எடுத்துக்காட்டியது.

### ஏற்றுமதியாளர்களுக்கான ஊக்குவிப்புக்கள்

ஏற்றுமதித்துறையின் போட்டித் தன்மையினையும் இலாபத்தன்மையினையும் மேம்படுத்தும் நோக்குடன் 1997 இல் அரசு பல கொள்கை வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது. நிருவாகத் தாமதங்களையும் அளவுக்கு மீறிய நடைமுறைகளையும் குறைக்கும் பொருட்டு தீர்வைத் தள்ளுபடித் திட்டம், உள்வரும் செயற்பாட்டுத் திட்டம், தீர்வை

செலுத்தாது களஞ்சியப்படுத்தி வைக்கும் திட்டம் மற்றும் இறைத் தீர்வைகள் விலக்கல் மீதான குழுவினூடான இறைத்தீர்வைகள் திட்டத்தின் மீதான விதிவிலக்குகள் திட்டம் போன்ற ஏற்கனவேயுள்ள திட்டங்களின் நடைமுறைப்படுத்தல் 1997 இல் கைவிடப்பட்டது. அதன் பின்னர் இத் திட்டங்கள் இலங்கைச் சுங்கத்தினாலும், நிதியமைச்சினாலும், நேரடியாக நடைமுறைப்படுத்தப்பட்டன. 1997 வரவு செலவுத் திட்டத்தில் முன் மொழியப் பட்டவாறு, ஏற்றுமதிப் பதனிடலுக்கான மூலதன மற்றும் இடைநிலைப் பொருட்கள் மீதான இறைத் தீர்வைகளை விலக்களிப்பதற்கான திட்டம் திருத்தப்பட்டது. இத் திட்டத்தின்கீழ், அவர்களின் உற்பத்தியில் 50 சதவீதத்திற்கு மேற்பட்டவற்றை ஏற்றமதி செய்யும் ஏற்றுமதியாளர்களினால் இறக்குமதி செய்யப்படும் மூலதன மற்றும் முதலீட்டுப் பொருட்களின் மீதான தீர்வை மற்றும் வரிகள் மீது 100 சதவீத விலக்கல்கள் வழங்கப் பட்டன. 25 சதவீதத்திற்கும் 50 சதவீதத்திற்கும் இடைப்பட்ட தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்யும் ஏற்றுமதியாளர்களுக்கு 50 சதவீத விலக்குகள் வழங்கப்பட்டன. இத்திட்ட செயற்பரப்பின் விரிவாக்கமானது குறிப்பாக, புதிய முதலீடுகள், ஏற்கனவேயுள்ள பொறிகளைத் தரமுயர்த்தல், என்பனவற்றில் ஈடுபட்டுள்ள சிறிய, நடுத்தர ஏற்றுமதியாளர்களின் ஆரம்ப முதலீட்டுச் செலவுகளைக் குறைப்பதுடன் உற்பத்தியாக்கத் தினை அதிகரிக்கும் வட்டி வீதங்களைக் குறைத்து தனியார் துறை முதலீட்டாளர்களுக்கு கூடியளவு நிதியை கிடைக்கச் செய்யும் பொருட்டு முதலீட்டுச் சபையல்லா ஏற்றுமதியாளர்கள் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளிலிருந்தும் அதே போன்று உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவுகளிலிருந்தும் வெளிநாட்டு நாணயங்களில் கடன்படுவதற்கு அனுமதிக்கப்பட்டனர். முதலீடு களைத் தூண்டும் பொருட்டு முதலீட்டாளர்கள் அவர்களது முதலீட்டுச் செலவினத்தை இரண்டாண்டுகளுக்குள் அறவிட்டுக் கொள்வதனை அனுமதிக்கின்ற விதத்தில் இதுவரை ஆண்டிற்கு 33 1/3 சதவீதமாக இருந்த பொறிகள், பொறித் தொகுதி மற்றும் கருவிகள் மீது பெறப்பட்ட தேய்மானம் 50 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. மேலும் முதலீட்டின் ஆரம்பச் செலவினைக் குறைக்கும் நோக்குடன், 1995 இல் 4.5 சதவீதத்தி லிருந்து 2 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்ட பொறித் தொகுதி மற்றும் கருவிகளின் இறக்குமதி மீதான தேசிய பாதுகாப்புத் தீர்வை 1997 சனவரியில் 0.5 சதவீதத்திற்கு மேலும் குறைக்கப்பட்டது.

கணனித் தொழில் நுட்பங்களை மேம்படுத் தும் ஆளணியினர்க்கு கணனிப் பயிற்சிகளை வழங்கவும், மேம்பட்ட தொழில் நுட்பத்திற்கான ஆகக் குறைந்த முதலீட்டுத் தேவைப்பாடுகள் ஏற்கனவேயுள்ள கம்பனிகளைப் பொறுத்தவரை ரூ. 2.5 மில்லியனிலிருந்து ரூ.1 மில்லியனுக்கும் புதிய கம்பனிகளுக்கு ரூ.10 மில்லியனிலிருந்து ரூ. 4 மில்லியனுக்கு குறைப்பதற்கும் 1998 வரவு செலவுத் திட்டம் வழங்கிய இறை ஊக்குவிப்புக்களின் அனுகூலங்களை ஏற்றுமதியாளர்கள் பெற்றுக் கொள்ளக் கூடியவர்களாக இருந்தனர். இது சிறிய நடுத்தர ஏற்றுமதியாளர்கள் இத் திட்டத்தின் கீழ் தகுதிபெற உதவியதுடன் புதிய தொழில் நுட்பங்களை பின்பற்றவும் ஊக்குவித்தது. ஆடைக் கைத்தொழிலின் விரிவாக்கத்தினை மேலும் தூண்டுவதற்கானதொரு ஊக்குவிப்பாக, 1997 வரவு செலவுத் திட்டத்தில் முன் மொழியப்பட்ட ஏற்கனவேயுள்ள வரிவிடுப்பினை மேலும் மூன்றாண்டுகளுக்கு நீடிக்கும் சலுகைகளும், 150 மேலதிக தொழில்களை உருவாக்க வேண்டுமென்ற நிபந்தனைகளுக்கிணங்க கடினமான மற்றும் மிகக்கடினமான பிரதேசங்களிலுள்ள ஆடைத் தொழில் ஆலைகளுக்கு வழங்கப்பட்டன. இலை வகை, வெட்டுப்பூக்கள், பழம் மற்றும் காய்கறிகளின் ஏற்றுமதிக்காக 1997 யூனிலிருந்து ஏயர்லங்காவின் விலைக் குறிப்பீட்டு சரக்குக் கட்டண வீதங்களின் மீது 100 சதவீத தீர்வைத் தள்ளுபடியொன்று வழங்கப்பட்டது.

1998 வரவு செலவுத் திட்டத்தில், சிறிய மற்றும் நடுத்தர அளவு வேளாண்மை உற்பத்திகள், உடன் மற்றும் பதனிடப்பட்ட காய்கறிகள், இரத்தினக் கற்கள், மற்றும் ஆபரணக் கைத்தொழில் மற்றும் புடவை மற்றும் ஆடைகள் என்பனவற்றை மேம்படுத்துவதற்காக பல்வேறு ஊக்குவிப்புக்கள் முன்மொழியப்பட்டுள்ளன. உடன் மற்றும் பதனிடப் பட்ட காய்கறிகளின் ஏற்றுமதிகளில் ஈடுபட்டிருக்கும் ஏற்கனவேயுள்ள மற்றும் புதிய கம்பனிகள் குறைந்தது 5 எக்டேயர் பரப்பளவில் பயிர்ச் செய்கையை மேற் கொள்ளுமிடத்து, அவற்றிற்கு பொறிகள் மற்றும் கருவிகளினது தீர்வையற்ற இறக்குமதிகளுடன் 10 ஆண்டுகள் வரி விடுப்பும் வழங்கப்பட்டது. தங்கம் இரத்தினக்கற்கள் மற்றும் துணைப் பொருட்களின் தீர்வையற்ற இறக்குமதிகளுக்குப் புறம்பாக, இரத்தினக்கல் மற்றம் ஆபரணக் கைத்தொழில் என்பன வருமானவரி மற்றும் தேசிய பாதுகாப்புத் தீர்வை என்பனவற்றிலிருந்தும் விலக்களிக்கப் பட்டன. புடவைக் கைத்தொழிலுக்கு வழங்கப்பட்ட முழுமையான தீர்வையற்ற அந்தஸ்தின் காரணமாக

டுடவைக்கான தயாரிப்பிற்கான தீர்வையின்றி களஞ்சிப்படுத்தும் திட்டம் ஒழிக்கப்பட்டது.

## ஏற்றுமதியாளர்களுக்கு நிறுவனரீதியான உதவி

ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஏற்றுமதிகளை மேலும் அபிவிருத்தி செய்து மேம்படுத்துவதற்கான பணிகளை தொடர்ந்தும் வழங்கியதுடன் ஏற்றுமதிக்கான கொள்கைச் சூழலை மேம்படுத்துவதற்கும் உதவியது. முக்கியமாக மரபு வழியல்லா ஏற்றுமதிகளை அபிவிருத்தி செய்து மேம்படுத்தும் நோக்குடன், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை நிரம்பல் அபிவிருத்தி, தர மேம்பாடு, உற்பத்தியாக்கம், ஏற்றுமதிப் பொதியிடல் மற்றும் புதிய சந்தைகளுக்குள் புகுதல் போன்ற பல்வேறு துறைகளிலும் ஏற்றுமதியாளர்களுக்கு மதியுரை வழங்கியது. தொழில்நுட்ப மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் ஏற்றுமதியாளர்களுக்கு உதவும்பொருட்டு ஏற்றுமதி அபிவிருத்திக்கு பல நிகழ்ச்சித் திட்டங்களையும் செயலமர்வுகளையும் நடத்தியது. சந்தை மேம்பாடுகளின் கீழ், குறிப்பிட்ட பல உற்பத்தியாளர்களுக்கான சந்தைகள் மற்றும் பொதுவான உற்பத்திகளுக்கான சந்தைகளையும் நடாத்தியமைக்குப் புறம்பாக ஆபரணங்கள், ஆடைகள், மரத்திலான கைப்பணிப் பொருட்கள், கைத்தறி உற்பத்திகள், காலணி கயிற்று உற்பத்திகள், வாசனைப் பொருட்கள், மட்பாண்ட அன்பளிப்புப் பொருட்கள், மலர்க்காட்சிகள், மற்றும் அலங்கார மீன்கள் போன்றவற்றை உள்ளடக்கிய பரந்தளவிலான பொருட்களுக்கான மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களையும் உள்நாட்டு/வெளிநாட்டு பேராளர் குழுக்களையும் மேற்கொண்டது. ஏற்றுமதி அபிவிருத்திச்சபை மகாணங்களிலுள்ள ஏற்றுமதி சார்ந்த சிறிய நடுத்தர ஏற்றுமதியாளர்களின் அபிவிருத்திக்கு கண்டி, குருநாகல் மற்றும் காலியிலுள்ள அதன் மாகாண அலுவலகங்களூடாக உதவிகளை வழங்கியதுடன் மக்கள் வங்கியினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஜன நிபயும் வர்த்தக கண்காட்சியில் சிறிய, நடுத்தர, ஏற்றுமதியாளாகள் பங்கேற்பதற்கு ஒழுங்குகளைச் செய்தது. ஏற்றுமதிப் பதனிடல் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், உற்பத்தி வகைகளைப் பன்முகப்படுத்துவதற்கான சாத்தியங்கள் பற்றி கண்டறிவதற்காக, உற்பத்திகளில் பெரும்பங்கினை வாங்குகின்ற ஐரோப்பிய சந்தை வர்த்தக அமைப்பிலிருந்தான பேராளர் குழுவொன்று இலங்கைக்கு வருகை தந்தது.

1997 நவெம்பரில் நடத்தப்பட்ட எக்ஸ்போ 97, ஐ.அ.டொலர் 3 மில்லியன் பெறுமதியான புதிய கட்டளைகளைப் பெறுவதற்கு உதவியது. மேலதிகமாக யூகோசிலாவியாவில் வியாபாரத்தினையும் வர்த்தக உறவுகளையும் மேம்படுத்துவதற்காக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது இலங்கைத் தேயிலைச்சபை, இலங்கைச்சுற்றுலாச் சபை, இலங்கை வங்கி மற்றும் ஏயர்லங்கா என்பனவற்றுடன் இணைந்து பெல்கிறேட்டில் தனியொரு கூட்டு கண்காட்சியை ஒழுங்கு செய்தது. பிராந்திய வர்த்தக இணைப்புக்களையும் பிராந்திய ஒத்துழைப்பிற்கான தென்னாசிய தயாரிப்பு பிரதேசத்திலுள்ள வர்த்தக மேம்பாட்டு அமைப்புக்களிடையே வர்த்தகத்தில் தொழில்நுட்ப ஒத்துழைப்பிற்கான வாய்ப்புக்களையும் மேம்படுத்தும் குறிக்கோளுடன் ஏற்றுமதி அபிவிருத்திச்சபை பன்னாட்டு வர்த்தக நிலையத்தின் ஒத்துழைப்புடன் பிராந்திய ஒத்துழைப்பிற்கான தென்னாசிய அமைப்பிலுள்ள அனைத்து வர்த்தக மேம்பாட்டு அமைப்புக்களின் மாநாடொன்றினை ஒழுங்கு செய்தது.

1997 இல் இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஏற்றுமதிகளின் அபிவிருத்தி மற்றும் பன்முகப்படுத்தலுக்காக ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதி மற்றும் உத்தரவாதங்களின் உதவிப் பணிகளை வழங்குவதன் மூலமாக ஏற்றுமதியாளர்களுக்கு தொடர்ந்தும் உதவியது. 1997 இல் ரூ.2195 மில்லியன் பெறுமதி கொண்ட உத்தரவாதங்கள் நடைமுறையிலிருந்தமைக்குப் புறம்பாக, ரூ. 1289 மில்லியன் பெறுமதி கொண்ட 214 காப்புறுதிப் பத்திரங்கள் நடைமுறையில் இருந்தன. எனினும் மின்வெட்டு மற்றும் தொழிலாளர் அமைதியின்மை என்பனவற்றைத் தொடர்ந்து முன்னைய ஆண்டின் இறுதியிலிருந்து முன் கொண்டு செல்லப்பட்ட இழப்புக்களின் காரணமாக சில ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்கள் தற்காலிகமாக மூடப்பட்டதனைத் தொடர்ந்து 1997 இல் இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வியாபார நடவடிக்கைகள் பின்னடைவினைக் காட்டின. மேலும் மொத்த விற்பனை வரி மற்றும் தேசிய பாதுகாப்புத் தீர்வை என்பன கட்டுப்பணத்துடன் சேர்க்கப்படுகையில் ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதி மற்றும் உத்தரவாதப் பணிகளின் செலவு மிக உயர்வாகக் காணப்பட்டது. சிறு அளவு ஏற்றுமதியாளர்களை பெருமளவு கவர்வதனையும் பன்னாட்டுச் சந்தையில் போட்டி ரீதியில் செயலாற்றுவதனையும் கருத்திற்கொண்டு 1997 பெப்புருவரியில் இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஏற்கனவேயுள்ள சிறுகாணி காப்புறுதிக் கூட்டுத்தாபனக் கொள்கைப் பத்திரம் திருத்தப்பட்டது.

### கப்பற் கட்டண வீதங்கள்

1996இல், பின்பற்றப்பட்ட தொடர்ச்சியான தாராளமயமாக்கப்பட்ட கப்பற்படுத்தல் வர்த்தக கொள்கையினைத் தொடர்ந்து கப்பற்படுத்தல் நிறுவனங்களிடையே காணப்பட்ட போட்டியின் காரணமாக பல நாடுகளுக்கான கப்பற் கட்டண வீதங்கள் மேலும் குறைவடைந்தன. ஐ.அ.நாடுகள் மற்றும் கனடா தவிர்ந்த ஏறத்தாள அனைத்து நாடுகளையும் உள்ளடக்கிய கப்பற்படுத்தல் நிறுவனங்கள் அனைத்து பண்ட கப்பற் கட்டண முறையைப் பின்பற்றின. இது பண்ட அடிப்படையிலான சரக்குக் கட்டணமுறையினைக் கொண்டதாகும். ஐ. இராச்சியம் வட கண்டம், மத்திய தரைக்கடல் பகுதி, பிரான்சு, எகிப்து, சிரியா, தூரகிழக்கு, குவைத், பாக்கித்தான் மற்றும் அவுத்திரேலியா என்பனவற்றிற்கு கப்பற்படுத்தப்படும் அனைத்துப் பண்டங்களுக்குமான சராசரி கப்பற் கட்டணங்கள் வீழ்ச்சியடைந்தன.

இலங்கை கப்பற்படுத்தல் முகவர்களின் சங்கம் ஏற்றுமதிகளின் மீது ஏற்றுக் கொள்ளப்பட்ட இறங்குதுறை கையாளல் கட்டணமொன்றினை 1997 மாச்சில் விதித்தது. ஏற்றுமதியாளர்கள் இறங்குதுறை கையாளல் கட்டணம் இலங்கை ஏற்றுமதிகளின் போட்டித் தன்மையைக் குறைக்கின்றது எனக்கூறி அக் கட்டணமுறையை வலுவாக எதிர்த்தனர். அதிகாரிகளுடன் மேற்கொண்ட தோல்வியில் முடிந்த பல பேச்சுவார்த்தைகளின் பின்னர் ஏற்றுமதியாளர்கள், ஏற்றுமதிக் கப்பற்படுத்தலின் மீது இலங்கைக் கப்பற்படுத்தல் முகவர் சங்கத்தினால் விதிக்கப்பட்ட இறங்குதுறைக் கையாளல் கட்டணமானது போட்டியற்ற நடைமுறைகளைத் தோற்றுவிக்கின்றது என்பது தொடர்பாக இலங்கை வர்த்தக சட்மேளனத்திற்கூடாக நியாயவர்த்தக ஆணைக் குழுவிற்கு குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்தனர். நியாய வர்த்தக ஆணைக்குழு குற்றச்சாட்டுக்கள் பற்றி புலன் விசாரனைகளை மேற்கொண்டு வருவதுடன் இவ் விசாரணைகள் முற்றுப் பெற்றதும் கட்டளைகள் வழங்கப்படும்.

## 9.12 வர்த்தக உறவுகள், வர்த்தகப் படுத்தலும் தீர்ப்பனவு ஒழுங்குகளும்

இப் பொழுதும் உரிமைத் தேவைப்பாடுகளின் கீழ் உள்ள கோதுமை மா மற்றும் பொருளாதார மல்லாக் காரணங்களுக்காக உரிமத் தேவைப்பாடுகளின் கீழ் உள்ள மற்றைய சில பொருட்களின் இறக்குமதி தவிர மற்றையவற்றிற்கு இலங்கை படிப்படியாக அனைத்து வரியல்லா தடைகளையும் நீக்கிவிட்டது. தீர்வைகள் 10, 20 மற்றும் 35 சதவீதங்களை உள்ளடக்கிய மூன்று வீதங்கள் கொண்ட பிரிவிற்கு குறைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக தென்னாசிய பிராந்தியத்தில் இலங்கை மிகத் தாராளமயமாக்கப்பட்ட வர்த்தக மற்றும் கொடுப்பனவுக் கொள்கை அமைப்பினைக் கொண்டுள்ளது.

உலக வர்த்தக அமைப்பிற்கான இதன் கடப்பாடுகளுக்கு வசதியளிக்குமுகமாக அமைச்சர்களுக்கிடையிலான இணைப்புக் குழுவின் ஏற்படுத்தப்பட்ட துணைக் குழுக்கள் தனியார்துறை மற்றும் வர்த்தக சம்மேளனங்களின் பங்களிப்புடன் வலுப்படுத்தப்பட்டன. துணைக் குழுக்கள் தேசிய தேவையற்ற பொருள் குவிப்பிற்கு எதிரான சட்டவாக்கம், தொலைத் தொடர்பூட்டல் மற்றும் நிதியியல் பணிகள் தொடர்பாக உலக வர்த்தக அமைப்பிற்கு வழங்க வேண்டிய இலங்கையின் விண்ணப்பம், வர்த்தகம், தீர்வை மீதான பொது உடன்படிக்கையின் உறுப்புரை XXVIII இனை மீண்டும் தொடங்குதல் என்பனவற்றிற்கு வரைவுச் சட்டங்களைத் தயாரித்தது.

தென்னாசிய முன்னுரிமை வர்த்தக ஒழுங்கின் கீழ் இலங்கை சலுகைகள் பற்றிய பேச்சு வார்த்தைகளை தொடர்ந்தது. 1996 இல் பெறப்பட்ட சலுகைகள் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 1997 யூலை 15 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்தது. வர்த்தகப் பேச்சுவார்த்தைகளின் மூன்றாவது சுற்று 1997 யூலையில் கத்மண்டுவில் ஆரம்பமானது. தென்னாசிய முன்னுரிமை வர்த்தக ஒழுங்குகளின் கீழ் உள்ளடக்கப்பட்ட உற்பத்திப் பட்டியலை மேலும் விரிவாக்குவதும் ஏற்கனவே பெறப்பட்ட தீர்வைச் சலுகைகளை மேலும் ஆழமாக்குவதுமே இலங்கையின் குறிக்கோளாக இருந்தது. இலங்கை அதன் வேண்டுகோள் பட்டியலை முதலாவது கூட்டத்தில் சமர்ப்பித்தது. மூன்றாவது சுற்றின் கீழான பேச்சுவார்த்தைகள் 1998 ஏப்பிரலளவில் முடிவடையுமென எதிர்பார்க்கப் பட்டது. அதே வேளை 1997 மேயில் மாலேயில் நடைபெற்ற பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய அமைப்பு மாநாட்டில் சார்க் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசத்தினை 2001 ஆம் ஆண்டளவில் முன்னெடுப்பதற்கு உடன்பட்டனர். எனினும், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக தென்னாசிய முன்னுரிமை வர்த்தக ஒழுங்கின் பேச்சுவார்த்தைகளில் அடையப்பட்ட மிக மிதமான

சிறப்புக் குறிப்பு 9

## நிதியியல் பணிகள் மீதான கடப்பாடுகளை இலங்கை உலக வர்த்தக அமைப்புக்குச் சமர்ப்பித்தது

நிதியியல் பணி உள்ளிட்ட 155 பணித் துறைகளை உள்ளடக்கிய பணிகளிலான வர்த்தகத்தின் மீதான பொதுஉடன்படிக்கையானது உருகுவே சுற்றில் கலந்துரையாடப்பட்ட உடன்படிக்கைகளில் ஒன்றாக விளங்குகின்றது. உருகுவே சுற்று இறுதியில் ஏனைய சில பணிகள் துறையினைப்போன்று நிதியியல் பணிகள் மீதான பேச்சு வார்த்தைகள் திருப்திகரமானதொரு பலனை எய்தவில்லை. எனவே உருகுவே சுற்று முடிவடைந்ததன் பின்பு இத்துறையிலான பேச்சுவார்த்தைகள் தொடரப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. பொருட்கள், மற்றும் பணிகளிலான உலகளாவிய வர்த்தகத்தை மேம்படுத்தும் நோக்குடன் வர்த்தகம் மற்றும் தீர்வை மீதான பொது உடன்படிக்கையின் பேச்சுவார்த்தைகளின் விளைவாக 1995 சனவரி, இல் உலக வர்த்தக அமைப்பு உருவாக்கப்பட்டது. 1996 திசெம்பரில் நடைபெற்ற அமைச்சர்கள் மட்டத்திலான மகாநாட்டில் நிதியியல் பணிகள் துறை மீதான பேச்சுவார்த்தைகளை 1997 திசெம்பருக்குள் முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்டது. இதற்கமைய காலக்கெடுவொன்றுக்கு உடன்பட்டு 1997 ஏப்பிறலில் ஜெனிவாவில் முதலாம் கட்டப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டது.

அண்மைக்காலம் வரை பணிகளிலான வர்த்தகத்தின் மீதான பொது உடன்படிக்கையின் கீழ் இலங்கையின் கடப்பாடுகள் வர்த்தக உளதாந்த தன்மை (வெளிநாட்டு முதலீடுகள்) இயற்கை ஆட்களின் உளதாந்த தன்மை (தொழில்வாய்ப்பு) சுற்றுலா மற்றும் பயணம் தொடர்பான பணிகளின் சில குறித்துரைக்கப்பட்ட கடப்பாடுகள் என்பனவற்றின் மீதான சில அடிப்படையான கடப்பாடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை 1997 பெப்புருவரியில் தொலைத் தொடர்பூட்டல் துறை யிலான அதனது கடப்பாடுகளை சமர்ப்பித்தது.

பணிகளிலான வர்த்தகம் மீதான பொது உடன்படிக்கையின்கீழ் அடிப்படையான கடப்பாடு கள் (அனைத்துத்துறைகளுக்கும் ஏற்புடையது) அல்லது குறிக்கப்பட்ட கடப்பாடுகளின் பட்டியல்கள் (குறிக்கப்பட்ட துறைக்கு மட்டும் ஏற்புடையது) உலக வர்த்தக அமைப்பு உறுப்பினர்களால் பணிகளின் உலகளாவிய தாராளமயமாக்கலினை நோக்கி இருபுடை அல்லது பல்புடை பேச்சு வார்த்தைகளுக்கு அடிப்படையாக உபயோகிப்பதற்காக சமர்ப்பிக்கப்படும். ஒவ்வொரு துறைக்கும் அத்தகைய கடப்பாடுகள் 4 வகையான வழங்கலுக்கும் (எல்லைகளுக்கப்பாலான வழங்கல், வெளிநாட்டு நுகர்வு, வர்த்தக உளதாந்த தன்மை) மற்றும் இயற்கை ஆட்களின் உளதாந்த தன்மை மற்றும் 2 வகையான வரையறைகள் (சந்தை வாய்ப்புக்கள் மற்றும் தேசிய நடத்துமுறை) என்பனவற்றுக்கு ஏற்புடையதாகும். சந்தை வாய்ப்பு என்ற பதம் சுய விளக்கத்தையளிக்கையில் தேசிய நடத்து முறைக்கான கடப்பாடு என்னவெனில் தேசிய பணிகளுக்கும் பணி வழங்கலுக்கும் வழங்கப்படும் நன்மைகளுக்கு எந்த விதத்திலும் குறையாத வகையில் ஏனைய உறுப்பினரின் பணிகள் மற்றும் பணி வழங்குனர்களுக்கான நடத்துமுறை அமைய வேண்டும் என்பதாகும். உறுப்பினரொருவர் ஏதேனும் வரையறைகளை பேணுவதற்கு விரும்பினால் கடப்பாட்டுப் பட்டியலில் இந்த வரையறைகளை சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

உள்நாட்டுப்பணிகள் வழங்குநர்களுக்கு ஏனைய பணி வழங்குநர்களுக்கும் இடையில் சந்தை வாய்ப்புக்களின் அடிப்படையில் அல்லது தேசிய நடத்துமுறைகளில் பாகுபாட்டினை காட்டாத உள்நாட்டு ஒழுங்குவிதிகளை கடப்பாட்டுப் பட்டியல்களில் உள்ளடக்க வேண்டியதில்லை. நிதியியல் பணிகளைப் பொறுத்தவரை அதிகாரிகளால் முன்மதிகரமான நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை அத்தகைய கடப்பாடுகளில் உள்ளடக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட வில்லை. மேலும் கடுமையான சென்மதி நிலுவை மற்றும் வெளிநாட்டு நிதியியல் பிரச்சனைகளின் போது கொடுப்பனவுகளிலும் மாற்றல்களிலும் தற்காலிகமான பாகுபாடற்ற கட்டுப்பாடுகளை பயன்படுத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மேலும் நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கை முகாமைத்துவமானது பணிகளிலான வர்த்தகம் மீதான பொது உடன்படிக்கையின் செயற்

சிறப்புக் குறிப்பு 9 (தொடர்ச்சி)

பரப்புக்கு அப்பாற்பட்டதாக அமையும்.

பணிகளிலான வர்த்தகம் மீதான பொது உடன்படிக்கைகளில் உறுப்புரை 11இன் நியதிக்கமைய உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் விடயங்கள் தொடர்பில் ஒவ்வொரு உறுப்பினரும் உடனடியாகவும் நிபந்தனையற்ற முறையிலும் ஏதேனும் ஏனைய நாட்டின் அதையொத்த பணிகள் மற்றும் பணி வழங்குனர்களுக்கு வழங்கப்படும். நன்மைகளுக்கு எந்த விதத்திலும் குறையாத நன்மைகளை ஏதேனும் ஏனைய உறுப்பினரின் பணிகள் மற்றும் பணி வழங்குனர்களுக்கும் வழங்குதல் வேண்டும். இது மிகவும் சலுகைகளையுடைய நாட்டு நடத்துமுறை என அறியப்படும். மிகவும் சலுகைகளையுடைய நாட்டு நடத்துமுறைக்கு முரண்பாடான நடைமுறைகளை உறுப்பினர் எவரேனும் பேணினால் அத்தகைய நடைமுறைகள் விலக்களிப்பொன்றாக பட்டியலிடப்படல் வேண்டும். குறிக்கப்பட்ட கடப்பாடுகள் தாராளமயப்படுத்தலை தடுத்து நிறுத்தாத போதிலும் பணிகளிலான வர்த்தகம் மீதான பொது உடன்படிக்கையின் கீழ் நாடொன்று குறிக்கப்பட்ட கடப்பாட்டினை ஒருமுறை நிறைவேற்றினால் அத்தகைய கடப்பாடுகளை மீளப் பெறுவது கடினமானதாக இருக்கும்.

உருகுவே சுற்றின்போது பின்வரும் செயற்பாடுகள் இரண்டு பரந்த வகையின் கீழ் நிதியியல் பணிகளாக நிரற்படுத்தப்பட்டன. அவையாவன (1) காப்புறுதியும் அதனுடன் தொடர்புடைய பணிகளும், (2) வங்கித் தொழிலும் ஏனைய நிதியியல் பணிகளும் (காப்புறுதி நீங்கலாக). ஆயுள் மற்றும் ஆயுள் காப்புறுதிப்பணிகள், மீள் காப்புறுதி யும் மீளளிப்புக்களும், மற்றும் தரகும் முகவர் பணிகளும், காப்புறுதிக்கான துணைப்பணிகள் போன்ற காப்புறுதி தொழில் இடையீட்டு நிறுவனங்களும் என்பன முதலாவது வகையின் கீழ் அடங்கும். வைப்புக்களை ஏற்றல், நுகர்வோர் கடன் உட்பட சகலவித கடன்களையும் வழங்குதல், ஈட்டுக்கடன் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களுக்கு நிதியிடலும் காரணிப்படுத்தலும், நிதிக் குத்தகை அனைத்து கொடுப்பனவு மற்றும் பணவனுப்பல் பணிகள், உத்தரவாதங்களும் கடப்பாடுகளும் பணச்சந்தை கருவிகளில் வர்த்தகம் செய்தல், அந்நிய செலாவணி, மரபுவழியற்ற பணிகள், மற்றும் ஸ்வாப்ஸ், முன்னோக்கிய நாணயமாற்று உடன்படிக்கைகள் பிணையங்கள், ஏனைய கைமாற்றத்தகு சாதனங்கள் போன்ற செலாவணி மற்றும் வட்டிவீத கருவிகள் மற்றும் தங்கம் போன்ற ஏனைய சொத்துக்கள் இப்புதிய பிணையங்களின் வழங்கலில் பங்குபற்றல், பணத்தரகுத்தொழில், முதலீட்டு முகாமைத்துவம் அல்லது ஓய்வூதிய நிதி முகாமைத்துவம் போன்ற சொத்து முகாமைத்துவம், நிதியியல் சொத்துக்களுக்கான சேர்ப்பனவுகளும் தீர்வை செய்யும் பணிகளும், நிதியியல் தகவல்களை வழங்குதலும் பரிமாற்றுதலும் மற்றும் நிதியியல் தரவுகளை செயல்முறைப்படுத்தல், ஆலோசனை, மற்றும் ஏனைய நிதியியல் துணைப்பணிகள் என்பன வங்கித் தொழில் மற்றும் ஏனைய நிதியியல் பணிகளில் (காப்புறுதி நீங்கலாக) அடங்கும்.

நிதியியல் பணிகள் தொடர்பான இலங்கையின் கொள்கைகள் பல நாடுகளைவிடவும் பெருமளவு தாராளமானதாக காணப்படுகின்றன. தற்போது இலங்கை நிதியியல் பணிகளின் பாரிய ஒரு ஏற்றுமதியாளராக இல்லாவிட்டாலும் பாரிய உள்ளார்ந்த வளத்தினைக் கொண்டிருப்பதுடன் எதிர்காலத்தில் வளர்ச்சியையும் எதிர்பார்த்திருக்கிறது. எனவே கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட இலங்கையின் குறித்துரைக்கப்பட்ட கடப்பாடுகைளக் கொண்ட அட்டவணை ஒன்றின் உள்ளடக்கமானது இலங்கையின் நிதியியல்துறையில் காணப்படும் தாராளக் கொள்கைகளின் பன்னாட்டு ரீதியான ஏற்றுக்கொள்ளலை அதிகரிக்கச் செய்யும் என உணரப்பட்டது.இதற்கமைய இலங்கை 1997 திசெம்பரில் காப்புறுதி வங்கித் தொழில் மற்றும் ஏனைய நிதியியல் பணிகள் தொடர்பான அதனது நிபந்தனையுடனான கடப்பாடுகளின் வரைவினை சமர்ப்பித்தது. காப்புறுதித்துறையில் (அ) ஆயுள் காப்புறுதி (ஆ) ஆயுள் அல்லாத காப்புறுதி, (இ) மீள் காப்புறுதியும் மீளளிப்புக்களும் ஆகிய மூன்று துணைத்துறைகளில் கடப்பாடுகள் வழங்கப்பட்டன. ஆயுள் மற்றும் ஆயுள் அல்லாத இரு காப்புறுதித் துணைத் துறைகளையும் பொறுத்த வரை சந்தை வாய்ப்புக்களின் கீழ் புதிய நிறுவனங்கள் இலங்கை அரசினால் ஒப்புதல் அளிக்கப்படும் உரிமங்களுக்கு உட்பட்டிருக்கும் வேளையில் தேசிய நடத்தை முறையில் வரையறைகள் இருக்கமாட்டாது. இவ்விரு துணைத்துறைகளிலும் வெளிநாட்டு மூலதன பங்கு பற்றுதல் ஏற்கனவே வழங்கப்பட்ட

சிறப்புக் குறிப்பு 9 (தொடர்ச்சி)

அடிப்படை கடப்பாடுகளினால் நிர்ணயிக்கப் படுகிறது. (அதாவது வெளிநாட்டு முலீடுகளுடன் தொடர்புடைய நாட்டின் பொதுவான சட்டங்கள்).

வங்கித்தொழில் மற்றும் ஏனைய நிதியியல் பணிகள் தொடர்பாக ஏற்கனவே நடைமுறையில் உள்ள தாராளமயமாக்கப்பட்ட கொள்கைகள் கடப் பாடுகளாகக் கொடுக்கப்பட்டன. எனினும் இரு முக்கிய நடவடிக்கைகள் சிறப்பாக குறிப்பிடத் தக்கனவாகும். 1987 இல் அமைச்சரவையின் ஒப்புதலுடன் நாணய சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் 10 வரையிலான கிளைகளை மட்டுமே இலங்கையில் வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்பட்டன. கடப்பாடுகளின் சமர்ப்பிப்பிற்கு முன் இக்கட்டுப்பாடு அமைச்சரைவயின் ஒப்புதலுடன் தளர்த்தப் பட்டது. இரண்டாவதாக வங்கித்தொழில் சட்டத்தின் நியதிகளுக்கமைய இலங்கையில் கூட்டிணைக்கப் பட்ட ஒரு வர்த்தக வங்கியில் 49 சதவீதம் வரை யிலான மூலதனத்தை மட்டுமே வைத்திருப்பதற்கு வதியாதோர் அனுமதிக்கப் பட்டனர். ஏனைய நிதி நிறுவனங்களின் பங்குகளிலான வெளிநாட்டு முதலீடுகள் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் மத்தியவங்கியினால் தனித்தனியாக பரிசீலிக்கப்பட்டன. எவ்வாறாயினும் நிதியியல் பணிகளை வழங்கும் எந்தவொரு நிறுவனத்தின தும் 49 சதவீதம் வரையிலான பங்கு மூலதனத்தில் முதலீடு செய்வதற்கு வதியாதோரை அனுமதிப் பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

பொருளாதாரத் தேவைகளின் பரீட்சிப்பு ஒன்றாக ஒப்புதலுக்கு உட்பட்டு வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்கள் என்பன தொடர் பான பதிவு மற்றும் உரிமம் வழங்கலுக்கான உரிமையினை இலங்கை கொண்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பத்திலான புதிய கண்டு பிடிப்புக்களின் விளைவாக உலக நிதிச்சந்தைகள் அதிகரித்த அளவில் ஒருங்கிணைந்து வருகின்றன. அத்தகையதொரு சூழலில் நிதியியல் பணிகளின் வர்த்தகம், மீதான ஏற்கனவே உள்ள கட்டுப் பாடுகளில் படிப்படியான தாராளமயமாக்கல் கொண்டுவர வேண்டியது தவிர்க்க முடியாத தொன்றாகும். பணிகளிலான வர்த்தகம் மீதான பொது உடன்படிக்கை நிதியியல் பணிகளின் வர்த்தகத்தின் தாராளமயமாக்கல் செயல் முறையை ஊக்குவிக்கவும் துரிதப்படுத்தவுமான தொரு பொறிமுறையை வழங்குகின்றது. அதே நேரம் வங்கித் தொழில் பிணையங்கள் மற்றும் காப்புறுதிச் சந்தைகள் என்பனவற்றிலான பன்னாட்டு போட்டித் தன்மையின் முக்கியத்துவ த்தை ஏற்றுக்கொள்ளும் வேளையில் முதலீட்டா ளர்களதும் நுகர்வோரதும் நலன்களுக்காக நிதியியல் முகாமைகளைப் பாதுகாப்பதற்கான முன்மதியுடைய கொள்கைகளை பேணுவதற்கான முக்கிய தேவையை ஒருபோதும் குறைத்து மதிப்பிடலாகாது.

பெறுபேறுகளைக் கவனத்திற் கொள்கையில் இது பேராசையான விடயம் போல் தோள்றுகின்றது. தென்னாசிய முன்னுரிமை வர்த்தக ஒழுங்கு பேச்சு வார்த்தைகளின் மெதுவான முன்னேற்றத்திற்கு முக்கிய காரணம் தீர்வையல்லா தடைகளை ஒழித்து விடுவதில் மற்றைய உறுப்பு நாடுகள் காட்டும் தயக்கமே யாகும்.

உலக வர்த்தக அமைப்பின் புடவைக் கண்காணிப்புச் சபைக்கு பொருட்களின் பட்டிய லொன்றை சமர்ப்பித்ததன் மூலம் பல் நூலிழை ஒழுங்கினை கட்டம் கட்டமாக அகற்றும் நடவடிக்கை யின் கட்டம் 11 இன் கீழான அதன் கடப்பாடுகளை இலங்கை நிறைவேற்றியது. இப்பட்டியலுடன் 2004 திசெம்பரில் நிறைவடையவுள்ள கட்டம் கட்டமாக அகற்றும் வேலைகளில் 17 சதவீதத்தினை இலங்கை முற்றுப்பெறச் செய்துள்ளது.

வர்த்தக முன்னுரிமையின் உலகளாவிய முறையின் 77 நாடுகளைக் கொண்ட குழு இவ்வமைப்பில் மேலும் உறுப்பினர்களையும் உள்ளடக்கும் உற்பத்திகளையும் விரிவாக்கவும் தீர்வைக் குறைப்புக்களை மேலும் அதிகரிப்பதற்கும் முயற்சிகளை மேற்கொண்டன. எனினும் பேச்சு வார்த்தைகளின் பெறுபேறுகள் 1997 இல் குறிப்பிடத்தக்கதாக இருக்கவில்லை.

1975இல் கையெழுத்தான பாங்கொக் உடன்படிக்கை ஆசியாவிலுள்ள பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளில் மிக முக்கியமானதாக இருக்கும்

என எதிர்பார்க்கப்படுவதுடன் சீனாவும் இதில் இணைகிறது. இலங்கை உட்பட பெரும்பாலான உறுப்பு நாடுகளுடன் தீர்வைச் சலுகைகளை பரிமாறிக் கொள்வதற்கான இருபுடைக் கூட்டங்களையும் பூரணப்படுத்திக் கொண்டுள்ளது. பேச்சு வார்த்தைகளின்போது தற்பொழுது இலங்கை சீனாவிற்கு ஏற்றுமதி செய்துவரும் பெரும்பாலான உற்பத்திகள் உட்பட 40 இற்கு மேற்பட்ட உற்பத்திகளுக்கு தீர்வைச் சலுகைகளை வழங்க சீனா உடன்பட்டது.

1995 திசெம்பரில் நடைமுறைக்கு வந்த பன்னாட்டு இயற்கை இறப்பர் உடன்படிக்கை 1997 இலும் நடைமுறையிலிருந்தது. எனினும் 1997 பகுதியில் இவ்வுடன்படிக்கையின் கீழ் குறிப்பிடத்தக்க அபிவிருத்திகள் எதுவும் காணப்படவில்லை. பன்னாட்டு கோப்பி உடன்படிக்கையை ஏற்றுக் கொள்வதில்லை என்ற அதன் நிலமையை 1997 இலும் இலங்கை பேணியது.

1997 இல், இருபுடை மட்டத்தில் இலங்கை பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான இந்தியா, குவைத், ஈரான், மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளிலிருந்தான நான்கு இணைந்த ஆணைக் குழுக்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியது. இந்தியாவுடனான இருபுடைக் கூட்டத்தில் இலங்கை ஈடுபாடு கொண்ட ஏற்றுமதி உற்பத்திகளுக்கான தீர்வைகளைக் குறைத்தல் மற்றும் தீர்வையல்லா தடைகளை அகற்றுதல் பற்றி கலந்துரையாடப் பட்டது. இந்தியா, குறைந்தது 70 உற்பத்திகளுக்காவது ஒருபுடையடிப்படையில் சலுகைகளை விரிவாக்குவதற்கு விருப்பம் தெரிவித்தது. வர்த்தகச் சலுகைகளுக்காக ஆரம்பத்தில் இந்தியாவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 182 உற்பத்திகளைக் கொண்ட நிரலிலிருந்து 82 உற்பத்திகளை இலங்கை முன்னுரிமைப்படுத்தியது. இவற்றிற்கு சாதகமான பதில் இன்னமும் கிடைக்கவில்லை.

இலங்கை – குவைத் என்பனவற்றின் கூட்டு ஆணைக் குழுவின் முதலாவது கூட்டத் தொடரில் வளை குடா ஒத்துழைப்பு சபையிலுள்ள நாடுகளில் இலங்கை உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு இலங்கை மற்றும் குவைத் கம்பனிகளுக்கிடையே கூட்டுச் சந்தைப்படுத்தல் ஒழுங்குகளுக்கான சாத்தியங்கள் பற்றி கண்டறியப்பட்டன. இரு நாடுகளும் வளைகுடா ஒத்துழைப்புச் சபை மற்றும் சார்க் என்பனவற்றிற்குப் புறம்பாக இரு நாடுகளிலும் வாணிபத் தொழில் முயற்சிகளை மேற்கொள்ளும் நோக்குடன் இவ்விரு நாடுகளும் கூட்டுத் தொழில் முயற்சிகளை நிறுவுவதற்கு கம்பனிகளை ஊக்குவிப்பதற்கு உடன்பட்டன. இலங்கையில் பொது விலைக் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பனிகளிலும் உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களிலும் முதலீடு செய்வதற்கு குவைத் முதலீட்டுச் சபையைத் தூண்டுவதற்கு இலங்கை குவைத் அரசாங்கத்தின் உதவியை நாடியிருக்கிறது.

1997 இல் இலங்கை ஈரான் கூட்டு ஆணைக் குழு அதன் ஐந்தாவது கூட்டத் தொடரை கொழும்பில் நடாத்தியது. மெலமைன் பாவனைப் பொருட்கள், அலங்கார மின் விளக்குகள், பொறியினால் செய்யப்படும் கம்பளங்கள் என்பனவற்றின் தயாரிப்பிற்காக கூட்டு தொழில் முயற்சிகளை நிறுவுவதன் சாத்தியக் கூறுகளும் கலந்துரையாடப்பட்டன.

1997 இல் இலங்கை – ஐரோப்பிய ஒன்றிய கூட்டு ஆணைக் குழுவின் 13ஆவது கூட்டத் தொடரும் கொழும்பில் நடத்தப்பட்டது. கூட்டத் தொடர் பொருளாதாரம், வர்த்தகம், மற்றும் வர்த்தக ஒத்துழைப்பு என்பனவற்றின் அபிவிருத்திகளில் முழுக் கவனமும் செலுத்தியது.

எகிப்து, சீனா, மற்றும் சைபிறஸ் என்பனவற்றுடனான கூட்டு ஆணைக்குழு 1997 இல் கூடவில்லை. இவ்வாணைக் குழுவின் அடுத்த கூட்டத்தொடர் 1998 இல் நடைபெறுவதற்கு அட்டவணையிடப் பட்டுள்ளது.

## 9.13 உள்நாட்டு வர்த்தகமும் நிறுவன ரீதியான ஒழுங்குகளும்

நாட்டின் உள்நாட்டு வர்த்தகக் கொள்கை என்பது விலைகளையும் அளவினையும் தீர்மானிப்பதற்கு சந்தைப் பொறிமுறையினை அனுமதிப்பதும் தெரிந்தெடுக்கப்பட்ட முக்கியமான பொருட்களின் தீங்கு பயக்கத்தக்க விலைகளையும் அளவுத் தளம்பல்களையும் தவிர்ப்பதற்காக மாத்திரம் சந்தையில் தலையீடு செய்வதுமேயாகும். பன்னாட்டு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு உணவு மற்றும் அதனுடன் இணைந்த திணைக்களங்கள், வேளாண்மை அமைச்சு மற்றும் திறைசேரி என்பன உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதிக்கக்கூடிய மிக தாழ்ந்த விலைகளையும், நுகர்வோரைப் பாதிக்கக்கூடிய மிக உயாந்த விலைகளையும் தவிர்ப்பதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். தீர்வை செலுத்தாமல் களஞ்சியத்திலிடும் முறைகள், உத்தரவாத விலைத் திட்டங்கள் தீர்வைகள் மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம், இலங்கைப்

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் போன்ற அரசதுறை முகவர்களும் இவ்விடயங்களின் கொள்வனவு, இறக்குமதி மற்றும் பங்கீடுகளில் ஈடுபட்டிருந்தன.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான ஒரு வழிமுறையாக முக்கியமான வேளாண்மை உற்பத்திகளைத் தொடர்ந்தும் உள்ளூரில் கொள்வனவு செய்து தமது சில்லறை வர்த்தக நிலையங்களுக்கு வழங்கின. பெரிய வெங்காயத்தின் கொள்வனவு 1996இன் 1088 மெற்றிக் தொன்களிலிருந்து 1997இல் 1570 மெற்றிக் தொன்களுக்கு 44 சதவீதத்தினால் அதிகரித்தது. செத்தல் மிளகாயின் உள்ளூர் கொள்வனவுகள் 1996 இன் 1849 மெற்றிக் தொன்களிலிருந்து 1997 இல் 1797 மெற்றிக் தொன்களுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. தாழ்ந்த உள்நாட்டு உற்பத்திகளின் காரணமாக சீனியின் உள்நாட்டுக் கொள்வனவுகள் 1996 இல் 4608 மெற்றிக் தொன்களிலிருந்து 1997 இல் 290மெற்றிக் தொன்களுக்கு குறைவடைந்து மிக மோசமான வீழ்ச்சியைக்காட்டியது.

முக்கியமான உணவுப்பொருட்களின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு அப்பொருட்கள் உரிமங்களின் கீழ் இருக்குமிடத்து அரசு கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தினைப் பயன்படுத்தியது. 1996 யூலையில் செத்தல் மிளகாய், பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு என்பன மீதான உரிமம் அகற்றப்பட்டமையினைத் தொடர்ந்து தனியார் துறையினர் பாரியளவில் இறக்குமதிகளை மேற்கொண்டமையின் காரணமாக கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் செத்தல் மிளகாயை இறக்குமதி செய்யவில்லை. எனினும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் அதன் சில்லறை விற்பனை நிலையங்களுக்கு வழங்குவதற்காக 5863 மெற்றிக் தொன் பெரிய வெங்காயத்தினை இறக்குமதி செய்தது. நகர்வு சரியான திசையை நோக்கி செல்வதனைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இவ் உரிமத் தேவைப்பாடுகள் அகற்றப்பட்டமையின் விளைவாக சந்தையினால் நிர்ணயிக்கப்படும் இறக்குமதிகளினால் கூ.மொ.வி நிலையத்தின் இறக்குமதிப் பங்கு வீழ்ச்சியடைந்து செல்லும் தன்மை காணப்பட்டது. கூ.மொ.வி நிலையத்தின் அரிசி இறக்குமதியின் பங்கு 1996 இன் 11 சதவீதத்திலிருந்து 1997 இல் 8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பெரிய வெங்காயத்தின் பங்கு 1996 இன் 7 சதவீதத்திலிருந்து 1997 இல் 5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் 5 சதவீதமாக இருந்த செத்தல் மிளகாய் 1997 இல் இறக்குமதி செய்யப்படவில்லை.

கோதுமைமாவின் உற்பத்தி இன்னமும் வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கையின் தனியுடைமையாகவே இருந்தது. கூ.மொ.வி நிலையத்தினால் இறக்குமதி செய்யப்படும் கோதுமைத் தானியம் பிறிமா ஆலையினால் பதனிடப்படுகிறது. எனினும் அரைக்கும் அளவு போதாமல் இருக்கையில் அல்லது தட்டுப்பாடு நிலவும் வேளையில் கூ.மொ.வி நிலையம் கோதுமை மாவை இறக்குமதி செய்கிறது. கோதுமை மாவின் பங்கீடு தாராளமயமாக்கப்பட்டதுடன் முழு நுகர்வோர் உதவு தொகையும் 1997 ஓகத்தில் அகற்றப்பட்டது. கோதுமை மாவின் கிலோக்கிறாம் ஒன்றின் விலை 1996 திசெம்பரிலிருந்து நிலவிவந்த ரூ. 16.15 இலிருந்து 1997 ஓகத்து 10 ஆம் நாளன்று ரூ.18.15 இற்கு உயர்த்தப்பட்டது.

கூ.மொ.வி நிலையத்தினால் தொழிற்படுத்தப்பட்ட சில்லறை விற்பனைக் கடைகளின் எண்ணிக்கை 1996 இன் 145 இலிருந்து 1997 இல் 147 இற்கு அதிகரித்தது. மொத்த விற்பனைக் கடைகளின் மொத்த எண்ணிக்கை 35 ஆகவே இருந்தது. மொத்த விற்பனை நிலையங்களினதும் சில்லறை விற்பனை நிலையங்களினதும் இணைந்த மொத்தப் புரள்வு 1996இன் ரூ. 4,680 மில்லியனிலிருந்து 1997 இல் ரூ.5,392 மில்லியனுக்கு அதிகரித்தது. எனினும் 1997 இல் அதிகாரம் பெற்ற வணிகர்களின் மொத்தப் புரள்வு குறைவான தன்மையினையே காட்டியது. விற்பனைகள் 1996 இன் ரூ.698 மில்லியனிலிருந்து 1997 இல் ரூ. 432 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. விற்பனையில் ஏற்பட்ட இவ் வீழ்ச்சிக்கான காரணத்தைக் கண்டறியும் பொருட்டு கூ.மொ.வி நிலையம் 14 கள அலுவலர்களை நியமித்தது. 1997 இல் தொழிற்படும் அதிகாரம் பெற்ற வணிகர் கடைகளின் எண்ணிக்கை 3,500 ஆக இருந்தது.

அரசின் உணவுப் பங்கீட்டு வலையமைப்பின் இன்னொரு பக்கமான கூட்டுறவுத்துறையும் 1992 ஆம் ஆண்டிலிருந்து உறுதியான அபிவிருத்தியைக் காட்டியது. முதலாந்தர கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை1996 இன் 12,273இலிருந்து 1997 இல் 12,410 இற்கு வளர்ச்சியடைந்தது. சங்கங்களின் உறுப்பினர் தொகை 1996 இல் 5 மில்லியன் உறுப்பினர்களிடமிருந்து 1997 இல் 5.1 மில்லியனுக்கு அதிகரித்தது.

கட்டற்ற சந்தை முறையினைப் பேணுதலானது நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள், உற்பத்தி தரப் பணியக கட்டளைகளை மீறுதல், அரசினால் குறித்துரைக்கப்பட்ட நுகர்வோர் நலன்புரி வழிமுறைகள் என்பன தொடர்பான விசாரணைகளை

அவசியமாக்கியது. இத்தொழிற்பாட்டினை உள்நாட்டு, வெளிநாட்டுவர்த்தக மற்றும் உணவு அமைச்சுடன் இணைந்துள்ள உள்நாட்டு வர்த்தகத் திணைக்களமும் நியாயவர்த்தக ஆணைக் குழுவும் மேற்கொண்டன.

விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் என முன்னர் அழைக்கப்பட்ட உள்நாட்டு வர்த்தகத் திணைக்களமானது நியாய வர்த்தக ஆணைக் குழுவினால் வரையறுக்கப்பட்ட விலைக் கட்டளைகளை அடிப்படையாகக் கொண்டு இறக்குமதி செய்யப்பட்ட மருந்தாக்கற் பொருட்களின் மீது விலைக் கட்டுப்பாடுகளைப் பேணியதுடன் 18 மாவட்டங்களிலுள்ள மாட்டிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சி வர்த்தகர்களுடன் மாட்டிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சியின் ஆகக் கூடிய விலைகள் தொடர்பான 1997 செத்தெம்பர் 26ஆம் நாளன்று ஒரு உடன்பாட்டிற்கு வந்தது. 1997 இல் இறக்கமதி செய்யப்பட்ட மருந்துகள் மற்றும் மருந்தாக்கல் பொருட்களின் மீது விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் குற்றப்பிரிவுகள் நடைமுறைப்படுத்தப் பட்டன. மொத்தமாக 151 பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டதுடன் இதில் 73 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை வியாபாரத் தொழில் முயற்சியாளர்கள் பின்பற்றுகிறார்களா என்பதனைப் பரிசோதிப்பதற்காக உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம் அவற்றின் மீது 2262 திடீர் பரிசோதனைகளை நடத்தியது. உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம் வளமாக்கி விலைகளைப் பின்பற்றுதல் மற்றும் வகைப்படுத்தப்பட்ட வகைப்பாட்டுடனான நான்காவது கட்டளைகள் அமைப்பிற்கு இணங்கி முகாமை பற்றியும் விற்பனை, பங்கீடு, மற்றும் களஞ்சியப்படுத்தல் தொடர்பான ஒழுங்கு விதிகளைப் பற்றியும் புலனாய்வு செய்வதற்கு வேளாண்மை அபிவிருத்தி அமைச்சிற்கு உதவியது. வெற்றிகரமான திடீர் பரிசோதனைகளின் எண்ணிக்கை 1965 ஆக விளங்கியதுடன் இதில் 1404 குற்றவாளிகளுக்கெதிராக 1997 இல் வழக்குத் தொடரப்பட்டது.

உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம் நுகர்வோர் பாதுகாப்பையும் அறிவாற்றலையும் அதிகரிப்பதற்காகவும் சந்தை அமைவிடங்களின் தரத்தினை மேம்படுத்துவதற்காகவும் பல நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது. தரம் குறைந்த பொருட்களின் விற்பனை, விற்பனைக்குப் பின்னரான பணிகள் கிடைக்காமை ஆகிய காரணிகளினால் தோன்றிய தகராறுகளைத் தீர்ப்பதற்கு உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம் தலையிட்டது. நுகர்வோர் உரிமைகள் தொடர்பாக நுகர்வோரிடையே அறிவாற்றலை உருவாக்குவதற்காக பல நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. நுகர்வோர் பாதுகாப்பினை உயர்த்துவதற்காக உள்நாட்டு வர்த்தகத் திணைக்களமும் இரு பணிப்புரைகளை வழங்கியது. பணிப்புரை 100, அரசினால் வழங்கப்பட்ட இரண்டு நலத்துறை எச்சரிக்கைகளில் ஒன்றினை அனைத்து மூன்று மொழிகளிலும் ஒவ்வொரு சிகரட் பெட்டியும் கொண்டிருக்க வேண்டும் என்பதனைத் தேவைப்படுத்தியது. பணிப்புரை 101, அனைத்துப் பால்மா பொதிகளும் தயாரிக்கப்பட்ட திகதி, பொதியிடப்பட்ட திகதி, காலாவதியாகும் திகதி என்பனவற்றை மிகவும் தெளிவாக விளங்கத் தக்கமுறையில் கொண்டிருக்க வேண்டும் என்பதனைத் தேவைப்படுத்தியது.

உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம் ஐக்கிய நாடுகள் பொருளாதார சமூக சபையுடன் நெருங்கிய ஒத்துழைப்பைக் கொண்டுள்ள நுகர்வோர் பன்னாட்டு அமைப்பில் உறுப்பினராக இருக்கிறது. உள்நாட்டு வர்த்தகத் திணைக்களத்தினால் பிரதி நிதித்துவப்படுத்தப்படும் இலங்கை, நுகர்வோர் பன்னாட்டு அமைப்பில் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் வழிநடாத்தும் குழுவில் இடம்பெற்றிருந்தது.

நியாய வர்த்தக ஆணைக்குழு, மருந்தாக்கல் உற்பத்திகளின் விலைகளை நிர்ணயித்து போட்டித் தன்மைக்கு எதிரான ஏழு நடைமுறைகளையும் புலனாய்வு செய்ததுடன் உணவுப் பாதுகாப்பு விடயங்களிலும் நுகர்வோர் அறிவாற்றல் நடவடிக்கைகளிலும் ஈடுபாடு கொண்டிருந்தது.

நியாய வர்த்தக ஆணைக்குழு கோழிவளர்ப்புத் துறை, குடிவகைகளின் வழங்கல் மற்றும் பங்கீடு, கண்ணாடிப் போத்தல்களின் இறக்குமதி, பிளாத்திக்கு தண்ணீர்ப் போத்தல்களின் உற்பத்தி துறைமுகத்தில் சரக்குகளைக் கையாளல் மற்றும் பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் தரைப்பணிகளை கையாளல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் போட்டித் தன்மைக்கு எதிரான நடைமுறைகள் பற்றியும் புலனாய்வு செய்தது.

ஒரு முகப்படுத்தப்பட்ட ஒரு நிறுவனத்தினால் விசாரணை நடவடிக்கைகளை மிகப்பயன் தரு முறையில் எதிர்காலத்தில் மேற்கொள்ளக் கூடியதாக இருக்குமென்பதனால் உள்நாட்டு


வர்த்தகத் திணைக்களத்தினையும் நியாய வர்த்தக ஆணைக் குழுவினையும் ஒருங்கிணைப்பதற்கானதொரு வரைவு மசோதா 1997 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

## 9.14 சுற்றுலா

1997 இல் சுற்றுலாத்துறை மேலும் மீட்சியடைந்து, இக் கைத்தொழில் மீள் நன்னிலையடைந்தமையைப் பிரதிபலித்தது. 1997 இல் சுற்றுலா வருகைகள் 366,165 இற்கு 21 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. சுற்றுலாக் கைத்தொழிலிலிருந்தான மொத்த வருவாய்கள் 26 சதவீதம் கொண்ட மிக உயர்ந்த வளர்ச்சி வீதத்திற்கு உயர்ந்து, சுற்றுலாப் பயணி ஒருவருக்கு உழைக்கப்பட்ட சராசரி வருமானம் அதிகரித்தமையைப் பிரதிபலித்தது. உச்ச வருவாய் காலம் ஆரம்பமான நவெம்பரில் கொழும்பில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் 1997 இல் இக் கைத்தொழிலை ஓரளவிற்குப் பாதித்தது.

வருகைகளில் ஏற்பட்ட மீட்சியைத் தொடர்ந்து வெளிநாட்டு விருந்தினர் இரவுகள் 31 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில், பொதுவான தங்கல் வீதம் 1996 இன் 40 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 49 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. பிரதேச ரீதியான அடிப்படையில் அனைத்துப் பிரதேசங்களும் வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன் மலையகப் பிரதேசங்களையடுத்து தென் கரையோரப் பிரதேசங்கள் மிக முனைப்பான அதிகரிப்புக்களைக் காட்டின. பண்டைய நகரங்களில் ஏற்பட்ட மேம்பாடுகள் கபறண, சிகிரியா,தம்புள்ள ஆகிய இடங்களிலுள்ள சுற்றுலா விடுதிகளின் தங்கல் வீதம் உயர்வடைய முக்கிய காரணமாகும். கடந்த சில ஆண்டுகளாக நாட்டின் பாதுகாப்பு நிலைமைகளினால் பாதிக்கப்பட்டிருந்த உள்ளூர் விருந்தினர்களின் இரவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு 20 சதவீதத்தினால் அதிகரித்தமையானது இக் கைத்தொழில்களுக்கு மேலும் நிவாரணத்தைக் கொண்டுவந்தது.

**வரைபடம் 9.9**
**சுற்றுலாப் புள்ளி விபரங்கள்**
**(1950 = 100)**




தரப்படுத்தப்பட்ட தங்குமிடத் துறையிலுள்ள சுற்றுலா விடுதி அலகுகளின் எண்ணிக்கை முக்கியமாக தென்கரையோர மற்றும் பண்டைய நகரங்களில் 144 இலிருந்து 158இற்கு அதிகரித்தன. சுற்றுலா விடுதி அலகுகளின் எண்ணிக்கை அதிகரித்தமையின் காரணமாக அறைகளின் இயலளவு 11,600 இலிருந்து 12,370 இற்கு அதிகரித்தது.

கைத்தொழிலின் மீட்சியைத் தொடர்ந்து இத்துறையின் தொழில் வாய்ப்பும் மேம்பாட்டினைக் காட்டியது.நேரடித் தொழில் வாய்ப்பு 31,963 பேரிலிருந்து 34,200 பேருக்கு அதிகரித்த வேளையில் மறைமுகத் தொழில் வாய்ப்பு 44,478 பேரிலிருந்து 47,880பேருக்கு அதிகரித்து.

அனைத்து முக்கிய பிரதேசங்களிலிருந்தான சுற்றுலா வருகைகள் 1996 இனைவிட அதிகரிப்புக்களைக் காட்டின. நாட்டிற்கான சுற்றுலாப் போக்குவரத்தில் தொடர்ந்தும் முன்னணி மூலமாக விளங்கும் மேற்கு ஐரோப்பா மொத்த வருகைகளில் 58 சதவீதத்திற்கு வகை கூறி, 27 சதவீதமான அதிகரிப்பினைப் பதிவு செய்தது. மேற்கு ஐரோப்பாவிலுள்ள அனைத்து நாடுகளிலிருந்தும் உயர்ந்த வருகைகள் பதிவு செய்யப்பட்டன. 1996 இல் ஐ.இராச்சியம் வருகைகளின் முக்கிய தனியொரு மூலமாகமாறி சேர்மனியை விஞ்சியதுடன் 1997இலும் அதன் நிலைமையைத் தொடர்ந்தும் பேணியது. இலங்கை ரூபாவிற்கு எதிராக இசுடேர்லிங் பவுண் கணிசமாக தேய்வடைந்தமையின் காரணமாக ஐக்கிய இராச்சியத் தேசத்தவர் குறைந்த செலவில் ஓய்வுகாலத்தை இலங்கையில் களிக்கக் கூடியதாக இருந்தமையும் இத் தலைகீழ் மாற்றத்திற்கு வழி வகுத்திருக்கலாம். இரண்டாவது பெரிய மூலமான ஆசியாவிலிருந்தான வருகைகள் 10 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. இந்தோனேசியா, தாய்லாந்து, பாக்கித்தான் என்பன தவிர்ந்த ஆசியப் பிராந்தியத்திலுள்ள பெரும்பாலான நாடுகளிலிருந்தான வருகைகளில் வளர்ச்சி காணப்பட்டது. இந்தோனேசியா மற்றும் தாய்லாந்திலிருந்தான குறைந்த வருகைகளுக்கு இந் நாடுகளில் நிலவிய நிதியியல் நெருக்கடிகள் ஓரளவு காரணமாகலாம். அவுத்திரலாசியா, வட அமெரிக்கா, மற்றும் கிழக்கு ஐரோப்பா என்பனவற்றிலிருந்தான வருகைகள் முறையே 34 சதவீதத்தி

னாலும், 20 சதவீதத்தினாலும், 41 சதவீதத்தினாலும் அதிகரித்து சுற்றுலா வருகைகளின் பன்முகப் படுத்தலை அதிகரித்தது.

கடந்த காலத்தைப் போன்றே 1997 இலும் ஓய்வே வருகைகளின் முக்கிய நோக்கமாக இருந்து, மொத்த வருகைகளில் ஏறத்தாள 95 சதவீதத்திற்கு வகை கூறியது. எஞ்சிய தொகை வியாபாரம் மற்றும் நண்பர்கள் உறவினர்களைப்பார்க்க வருவதாக இருந்தது. சூழல் சுற்றுலா, கலாச்சார சுற்றுலா, போன்ற களியாட்ட சுற்றுலாவின் புதிய வாய்ப்புக்களையும் மேம்படுத்துவதற்கான உள்ளார்ந்த வளர்த்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் வனவிலங்குப் பூங்காக்கள், தாவரவியல் பூங்கா, விலங்கியல் பூங்கா, மற்றும் கலாச்சார முக்கோணப்பகுதி என்பனவற்றிற்கு வருகை தரும் வெளிநாட்டு விருந்தினர்களிடமிருந்தான வருமானம் 1997 இல் தொடர்ந்தும் அதிகரித்தது. விலங்கியல் பூங்காவிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 35 சதவீதத்தினாலும் ஐ.அ.டொலர் நியதிகளில் வருமானம் 53 சதவீதத்தினாலும் அதுகரித்தன. தாவரவியல் பூங்காவிற்கும் வனவிலங்குப் பூங்காவிற்கும் வருகை தந்தமையால் பெறப்பட்ட வருமானம் முறையே 22 சதவீதத்தினாலும் 16 சதவீதத்தினாலும் உயர்வடைந்தன. கலாச்சார முக்கோணப் பிரதேசத்திற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 40 சதவீதத்தினால் உயர்வடைந்த வேளையில் நுழைவுச் சீட்டுக்களின் விற்பனையிலிருந்தான வருமானம் 43 சதவீத அதிகரிப்பினைக் காட்டியமைக்கு நுழைவுச்சீட்டு விலை ஐ.அ.டொலர் 2.50 இலிருந்து ஐ.அ.டொலர் 32.50 இற்கு உயர்த்தப்பட்டமையும் காரணமாகும். இலங்கை கண்காட்சி பணியகம் 1997 இல் கூட்டங்கள், ஊக்குவிப்பு பயணம், மரபுவழி மற்றும் கண்காட்சிச் சுற்றுலாக்களை தொடர்ந்தும் மேம்படுத்தியது. கூட்ட, ஊக்குவிப்புப்பயண, மரபுவழிக் கண்காட்சிச் சுற்றுலா வகையின் கீழ் வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 1996 இனைவிட நான்கு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தமைக்கு 1997 இல் நடத்தப்பட்ட மாநாடுகள் மற்றும் கண்காட்சிகளின் எண்ணிக்கை இருமடங்காகியமையே காரணமாகும்.

மொத்த வருகைகளில் 6 சதவீதம் அட்டவணையிடப்பட்ட பிரதேசங்களுக்கிடையிலான பறப்புக்களின் மூலம் வருகை தந்த வேளையில் 25 சதவீதத்தினர் பிரதேசங்களுக்குள்ளேயான பறப்புக்களின் மூலம் வருகை தந்தனர். மொத்தச் சுற்றுலா பயணிகள் வருகையில் எயர்லங்கா 1996 இன் 48 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1997 இல் 46 சதவீதத்தினரைக் கொண்டுவந்தது. ஓய்விற்கான நாடுகளின் அபிவிருத்தியில் ஒப்பந்த அடிப்படையிலான பறப்புக்கள் மிக முக்கிய பங்கினை வகிப்பதனால் அதிகரித்த ஒப்பந்த அடிப்படையிலான தொழிற்பாடுகளினால் இத்துறை பெருமளவிற்கு நன்மையடையும்.

இலங்கையை ஒரு சுற்றுலா நாடாக மேம்படுத்தி, அதன் முழு உள்ளார்ந்த வளத்தையும் பொருளாதார அபிவிருத்திக்குப் பயன்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு 1998 வரவு செலவுத் திட்டத்தில், சுற்றுலாக் கைத்தொழிலுக்கு அரசாங்கம் பல தொடர்ச்சியான சலுகைகளை வழங்கியது. சுற்றுலா விடுதிகளின் தங்குமிட கட்டணங்கள் மீதான மொத்த விற்பனைவரி (1 சதவீதம்) அகற்றப்பட்டுள்ளது.

சுற்றுலாவிடுதிகளிலுள்ள வசதிகளின் தரத்தினை மேம்படுத்துவதனையும் சுற்றுலாத் துறையில் போக்குவரத்து வசதிகளை விரிவாக்குவதனையும் நோக்கமாகக் கொண்டு சுற்றுலா விடுதிகளை புதுப்பித்தல், மற்றும் தரமுயர்த்தல் என்பனவற்றிற்குத் தேவையான பொருட்களின் இறக்குமதியும் சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்திற்கான ஊர்திகளின் இறக்குமதியும் ஓராண்டுக் காலப்பகுதிக்கு இறக்குமதித் தீர்வையிலிருந்தும் விலக்களிக்கப்பட்டிருந்தன. மேலும், சுற்றுலாக் கைத்தொழிலின் மீதான கூட்டுவருமான வரி, சுற்றுலா விடுதிக் கைத்தொழிலில் முதலீடு செய்தவர்கள் வரிக்குப் பின்னரும் நியாயமான வருமானத்தினைப் பெறுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் 35 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

**அட்டவணை 9.12**

சுற்றுலாப் புள்ளி விபரங்கள் 1995–1997

| விடயம் | 1995 | 1996(அ) | 1997(ஆ) | சதவீத மாற்றம் 1996 | சதவீத மாற்றம் 1997 |
|---|---|---|---|---|---|
| 1. சுற்றுலா வருகைகள் | 403,101 | 302,265 | 366,165 | -25.0 | 21.1 |
| 2. சுற்றுலா இரவுகள் ('000) | 4,024 | 2,974 | 3,680 | -26.1 | 23.7 |
| 3. தங்கும் அறை விகிதம் (%) | 52.6 | 40.3 | 49.1 | -23.4 | 21.8 |
| 4. மொத்தச் சுற்றுலாப் பெறுகைகள் (ரூ.ப.இ) | 11,552 | 9,559 | 12,506 | -17.3 | 30.8 |
| 5. தலைக்குரிய சுற்றுலாப் பயணச் செலவு (ரூபா) | 28,658 | 31,625 | 34,154 | 10.4 | 8.0 |
| 6. மொத்தத் தொழில் நிலை | 87,360 | 76,711 | 82,080 | -12.2 | -7.0 |
| நேரடி | 36,260 | 31,963 | 34,200 | -11.9 | -7.0 |
| மறைமுக | 51,100 | 44,748 | 47,880 | -12.4 | -7.0 |

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.

மூலங்கள்: சுற்றுலாச்சபை
இலங்கை மத்திய வங்கி